KALKI
25.6.2006 ரூ.8.00
80 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் களிக்க...





கசக்கும் விமர்சனம்... வெடிக்கும் கலைஞர்!


வாணவில்லில் நூலெடுத்து
தேவதைகள் நெய்தசேலை
சாரதா’ஸ் பட்டுச்சேலை..!
கெட்டி மேளம்
கலெக்‌ஷன்ஸ்
சாரதாஸ்
சுப முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45,என்.எஸ்.பி. ரோடு, திருச்சி-2. போன்:2702077.
தன்பில்டிங், 827, மவுண்ட்ரோடு (தேவிதியேட்டர்,எதிரில்)
சென்னை-2, போன்:28521177.



'திரைக்கதை அமைப்பதில் கிங் நான்தான்' அப்படின்னு பலமுறை தன்னை நிரூபிச்சிருக்கிற கே. பாக்யராஜ், இப்போ தனது அடுத்த தலைமுறையோட செகண்ட் இன்னிங்ஸ் ஆட கிளம்பியிருக்காரு. வழக்கம்போல பல முடிச்சுகளோடத்தான் திரைக்கதையை அமைச்சிருக்காரு. ஆனா முடிச்சுகளில் சுவாரசியம் இல்லை.

அந்த ஊருக்கு ஒரு பங்களாவை விலைக்கு வாங்கிட்டு வர்ற சீதா, தன்னோட பையன் பிரித்விராஜுக்கு பெண்ணு தேடுறாரு. தன் வீட்டுல வேலை பார்க்குற ஷரண்யாவையே சீதா மனசுக்குப் பிடிச்சுப்போக, வேற ஊர்ல இருக்குற, தன் கணவன் பிரகாஷ்ராஜ், மகன் பிரித்விராஜ்கிட்ட 'பொண்ணு பார்த்துட்டேன். நீங்க இங்க வந்ததும் யாருன்னு சொல்லுறேன்'னு மட்டும் போன்ல சொல்லுறாங்க. அவங்க ரெண்டு பேரும் வர்றதுக்குள்ளே சீதா ஒரு விபத்துல இறந்துடுறாங்க. சீதா பார்த்து வைச்ச பொண்ணு யாருன்னு தெரியாம, அப்பாவும் பிள்ளையும் தேடுறாங்க. 'நான்தான் அந்தப் பொணணு'ன்னு ஷரண்யாவாலயும் சொல்ல முடியாத நிலைமை. எல்லா முடிச்சுகளையும் இரண்டாவது பாதியில பாக்யராஜே வந்து அவிழ்த்துவிட்டு சுபம் போடுறாரு.

ஷரண்யா, தான் எழுதிய நாவலை சீதாகிட்ட கதையா சொல்லுறதை காட்சிகளாவே ஓடவிட்டிருக்கிறது புதுமை. ஆனா அதை இவ்ளோ நீளத்துக்கு இழுத்திருக்க வேண்டாம். நாவலோட நாயகன், நாயகியா பிரித்விராஜ் - ஷரண்யாவே வர்றது ஒரு கட்டத்துக்கு மேலே ரசிகர்களைக் குழப்புது.

பிரித்விராஜ் நடிப்புக்கேத்த தீனி இந்தப் படத்துல இல்லை. கிடைச்ச இடத்துல ஸ்கோர் பண்ணியிருக்காரு. பாக்யராஜ் பொண்ணு ஷரண்யா நடிப்புல ம்...ஓ.கே. ஆனா கதாநாயகியா ரசிகர்கள் ஏத்துக்கிறது கஷ்டம்தான். படத்துல பல குட்டி கேரக்டர்ஸ், அலுப்பா இருக்கு. பாக்யராஜ் கேரக்டரும், அவரைப் பத்தி அவரும் மத்தவங்களும் அப்பப்போ வசனம் மூலமா பில்ட் அப் கொடுக்கறதும் ரசிக்க முடியல.

புதுசா மியூசிக் பண்ணியிருக்கிற தரண் பரவாயில்லை. ஆனா 'உன்னைக் கண்டேனே' ஸாங்தான் இனி அவரோட விசிட்டிங் கார்டு. அது படமாக்கப்பட்டுள்ள விதத்தால, ஸாங்கை 'எவர்கிரீன்' லிஸ்டுல தாராளமா சேர்த்துடலாம்.

தொடர்ந்து நூறு எபிசோட்கள் மெகா சீரியல் பார்க்கும் பொறுமையுள்ளவர்கள், தாராளமாய் குடும்பத்தோடு சென்று பாரிஜாதத்தையும் பார்க்கலாம்.

சும்மா கொடுத்த அரிசி!



நம்ம கலைஞரு பதவியேத்த மேடையிலேயே கடச்கட கையெழுத்து போட்ட திட்டத்துல ஒண்ணு, ரெண்டு ரூபா அரிசி. இந்த மாசம் மூணாந் தேதியில இருந்து கொடுக்க ஆரம்பிச் சிட்டாங்க இல்லியா... அந்தத் திட்டத் துல அரிசி மக்களுக்கு ஒழுங்கா கிடைக்குதா, கிடைச்சா எப்படி இருக் குது, ஜனங்க என்ன ஃபீல் பண்றாங் கன்னு தெரிஞ்சுக்கலாம்னு சென்னைல இருக்குற நாலஞ்சு ரேஷன் கடை களுக்கு ஒரு விசிட் அடிச்சுப் பார்த் தேன்.

முதல்ல சைதாப்பேட்டைல இருக் குற ஒரு கடைக்குப் போனேன். அந்தக் கடையில நான் போன அன்னிக்குக் கூட்டம் ஒண்ணும் பெருசா இல்ல. ஏழெட்டு லேடீஸுங்கதான் அரிசி வாங்க வந்திருந்தாங்க. பக்காவா பில்லைப் போட்டு, பையில அரிசியை வாங்கிட்டு வெளிவந்த ஒரு அக்கா கிட்ட பேச்சுக் கொடுத்தேன்.

''என்னாக்கா... ரெண்டு ரூபா அரி சியா... சுமாரா இருக்கா, இல்ல நல்லா இருக்கா...?''

''இந்த அரிசிக்கு இன்னா... நல்லாத் தான் இருக்கு... நீயே பாரேன்...'' என்று அரிசியை என்கிட்ட கொஞ்சம் கொடுக்க, அதை வாய்ல போட்டுக் கிட்டே, ''முன்னால குடுத்த அரிசிக் கும், இதுக்கும் வித்தியாசம் இருக்கு தாக்கா''ன்னு அடுத்த கேள்வியைக் கேட்டேன்.

''ம்... அப்டி ஒண்ணும் இல்ல கண்ணு... எல்லாம் ஒரே மாதிரிதான் இருக்கு... ஆனா இப்போ இருக் கறாப்ல எப்பவுமே தருவாங் களான்னு தெரியல...'' என்னு சொல்லிட்டு நகர, ''யக்கா... ஒரே ஒரு போட்டோ எடுத்துக் கறேன்''ன்னு சொன்ன துக்கு, ''அட போப்பா... போட்டாவைப் பாத்துப்புட்டு டீ.வி குடுக்காம விட்டுடப் போறாங்க''ன்னு சொல் லிட்டுக் கிளம்பிடிச்சு அந்த அக்கா.

அடுத்தாப்ல மந்தை வெளில இருக்குற ஒரு ரேஷன் கடைக்குப்



போனேன். அங்க செம கூட்டம். க்யூ வுல நின்னுக்கிட்டு இருந்த ஒரு மாமிகிட்ட போயி, "என்ன மாமி... எடை எல்லாம் பக்காவா இருக்கா, இல்ல ரெண்டு ருவா தானேன்னு எடை கம்மியா தராங்களா"ன்னு கேட்டேன்.

"அப்டில்லாம் ஒன்னுமில்ல.. எப்போதும் எப்படி ஏத்த இறக்கமா எடை போடு வாங்களோ அதே மாதிரிதான் இப்பவும் எடை போடுறாங்க. என்ன ஒன்னு, விலையைக் குறைச்சிருக்கறதால கூட்டம் ஜாஸ்தியாகி இருக்கு. பாருங்களேன்... எவ்ளோ நீளத்துக்குக் கூட்டம் நிக்குதுன்னு" பெருமூச்சு விட்டுக்கிட்டே, க்யூவுல நகர ஆரம்பிச்சுட்டாங்க அந்த மாமி.

ரைட்... ரெண்டு கடை பார்த்தாச்சு சிட்டிக்குள்ள அடுத்தாப்ல கொஞ்சம் இண்டீரியரா போயி பார்க்கலாம்னு பழைய மகாபலிபுரம் ரோட்டுல இருக்குற ஒரு ரேஷன் கடைக்குப் போனேன். அங்க அன்னிக்கு மண்ணெண்ணெய் கொடுத்துக்கிட்டு இருந்தாங்க. க்யூவுல கேனை வச்சிட்டு, உட்கார்ந்திருந்த ஒரு பாட்டிகிட்ட பேசினேன். "கருணாநிதி பொறந்த நாளு அன்னிக்கு எனக்குல்லாம் அரிசி கம்மாவே கொடுத்தாங்க. என்னான்னு விசாரிச்சதுக்கு, நம்ம கவுன்சிலரு மொத்தமா பணத்தைக் கொடுத்துட்டு, எல்லாருக்கும் அரிசிய கம்மா தர்றார்னு சொன்னாங்க. எப்பவுமே அப்படித் தரமாட்டாங்கல்ல..."ன்னு ஏக்கமா பேச, "அது சரி... கையில ஏது இத்தனை கார்டுன்னு கேட்டா, "மச்சு வூட்டுல இருக்கறவங்க கார்டு கம்மாதான இருக்கு... அதான் அதையும் நானே வாங்கிக்கறேன்"ன்னு சொல்லிட்டுக் கிளம்பிடுச்சு பாட்டி.

- ஒற்றன்

● படங்கள்: ராஜன்



கல்கி

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

'காரடி பொம்மைக்கும் கண்ணகி சிலைக்கும் என்ன வித்தியாசம் என்று எழுதியிருக்கிறார்கள். தமிழா! நீ இன்னும் தமிழ்நாட்டில் உயிரோடுதான் இருக்கிறாயா? இதைக் கேட்பதற்காக என் ஆட்சியின் செங்கோல் பறிக்கப்பட்டாலும் கவலையில்லை. தமிழனுடைய உணர்ச்சியைத் தட்டிவிடும் வேலை இனியும் வேண்டாம். கடந்த ஆட்சிக் காலத்தைப் போல இது ஆணவக்குரலல்ல. அடக்கமான குரல்தான்" - ஆனந்த விகடனில் கண்ணகி பற்றிய ஞாநியின் விமர்சனத்துக்குக் கொந்தளித்துப் போய் சிலை திறப்பு விழாவில் கலைஞர் உணர்ச்சிவசப்பட்டு சொன்ன பதிலடிதான் இது. கலைஞரின் உள்ளக் குமுறலைச் சரியாகவே புரிந்துகொண்டார்கள் உடன் பிறப்புகள் "தமிழர்கள் உயிரோடுதான் இருக்கிறோம்" என்று காட்டும் விதமாக, தி.மு.க.வினர் அண்ணாசாலை விகடன் அச்சகத்துக்கு முன்னால் குமுமி விகடன் பிரதிகளை எரித்து, கோஷமிட்டனர்.

ஒரு பத்திரிகையாளராக எழுத்தாளராக, இருப்பதில் பெருமை கொள்ளும் கலைஞர், பொதுவாகவே விமர்சனங்களை வரவேற்பவர்; ரஸிப்பவர். ஆனால் சமீபகாலமாக, விமர்சனங்களைக் கண்டு வெடிக்கிறார் கலைஞர். இந்த கண்ணகி விவகாரம் மட்டுமல்ல. வேறு பல விவகாரங்களில் பார்த்தாலும், விமர்சன கணைகளைத் தாங்குவதிலும் திருப்பித் தாக்குவதிலும் சகிப்புத்தன்மை குறைந்தவராகியிருக்கிறார். தேர்தலுக்கு முன்பு, சர்வே எடுத்த குமுதம், அ.தி.மு.க.வுக்கு அதிக இடங்கள் கிடைக்கும் என்று எழுதப் போகிறது என்பது தெரிந்தவுடன் "குமுத விழியாள்" விலை போய் விட்டாள் என்று எழுதினார்.

கலைஞர் மட்டுமல்ல. தி.மு.க.வின் அதிகார பூர்வ நாளேடான முரசொலியில் விமர்சனக் கட்டுரை எழுதுபவர்கள் சொல்லுக்குச் சொல்; எழுத்துக்கு எழுத்து என்று வாதங்களைச் சந்திக்காமல் 'சாதி; வர்ணாசிரமம்' என்று விஷயத்தைத் திசை திருப்புகிறார்கள். 'ஆரோக்கியமான ஒரு கூட்டணி ஆட்சியை அமைக்க கருணாநிதி முற்படாமல் போனது தி.மு.க. வரலாற்றில் ஒரு கரும்புள்ளி' என்று கல்கி (28.5.2006) தலையங்கத்தில் சொல்லப்பட்டிருந்தது. 'கல்கி தனது சொந்த ஜாதி நலன்கள். இன நலன்களைப் பேணும் வகையிலேயே எழுத்துப்பணி செய்வதாக' முரசொலி பதில் கட்டுரை சொல்லியது. மேலும் '1952ல் ராஜாஜி மைனாரிட்டி அரசு அமைக்கவில்லையா?' அப்போது அதை கல்கி வரவேற்கவில்லையா! என்றும் எழுதியிருந்தது. 2006 தேர்தலைப் போல காங்கிரஸ் 1952 தேர்தலில் யாருடனும் கூட்டணி அமைத்துப் போட்டியிடவில்லை என்பதையும் தேர்தலுக்குப் பின்பு ஆதரவு தெரிவித்த கட்சிகளையும் சேர்த்



கசக்கும் விமர்சனம் வெடிக்கும் கலைஞர்...


• ஞாநி

துக் கொண்டதுடன் அமைச்சரவையிலும் அவற்றுக்கு ராஜாஜி இடம்கொடுத்தார் என்ற வரலாற்றை முரசொலி கட்டுரையாளர் வசதியாக மறந்துவிட்டு எழுதினார்.

ஜெயலலிதா சட்டமன்றம் சென்றது பற்றிய செய்திக் கட்டுரை விகடனில் வந்தது. முரசொலி இக்கட்டுரைக்கும் சாதிச்சாயம் பூசி, கண்டனம் தெரிவித்தது. இதையெல்லாம் பார்க்கும்போது, தி.மு.க.வுக்கு விமர்சனங்களைத் தாங்கிக் கொள்ளும் பக்குவமும், பகுத்தறிவும் குறைந்து வருகிறதா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. அதிலும் குறிப்பாக ஆளும் கட்சியாகிவிட்ட பின்னர் பல முனைகளிலிருந்து வரும் சுட்டிமுனை விமர்சனங்களைத் தாங்க வேண்டிய கட்டாயம் தி.மு.க.வுக்குக் காத்திருக்கிறது. இந்த வகையில் பதிலடிகளை இன்னமும் கண்ணியமாகவும், ஆக்கபூர்வமாகவும் ஏற்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பத்திரிகையாளரிடையே மட்டுமின்றி மக்களிடையேயும் இருக்கிறது.

"நான் கண்ணகியையும், கரடி மையும் ஒப்பிட்டே எழுதவில்லை. கலைஞர் எனது கருத்தைத் திசை திருப்பிவிட்டார். சில குழந்தைகள் பெரியவர்களான பிறகும்கூட தூங்கும்போது பழைய டெடிபேர் கரடி பொம்மையை பக்கத்தில் வைத்திருப்பார்கள். அதுபோல ஆள் பவர்களுக்கும் இன்று கண்ணகி அப்படித்தான். வளர்ந்தபின் மாறாமல் இருக்கும் சிலரது ஒட்டுதல் மனநிலையைக் குறிப்பிடவே இந்த ஒப்பீட்டைப் பயன்படுத்தினேன். நான் ஒப்பிட்டது கண்ணகி சிலையையும், கரடி பொம்மையையும் அல்ல. மற்றபடி எப்போதுமே வருடிவிட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்ற மனநிலை தி.மு.க.வில் உண்டு. கொஞ்சம் கசப்பான விமர்சனம் என்றால் சாதியை இழுத்து லாலி பாடுவார்கள். கோ.சி. மணி, சங்கராச்சாரியாரைச் சந்தித்தது பற்றி இது வரையில் விமர்சனக் கட்டுரைகள் தி.மு.க. பத்திரிகையில் வரவில்லை'' என்று சொல்கிறார் ஞாநி.



''தி.மு.க.வையோ, கலைஞரையோ புகழ்ந்து எழுதும்போது, பாராட்டும்போது 'விகடன் சொல்கிறது, இந்து சொல்கிறது' என்று எட்டு பத்தியில் எடுத்துப் போட்டுக் கொள்ளும் தி.மு.க., கசப்பான விமர்சனங்களுக்கும் கண்ணியமாகப் பதில் சொல்ல வேண்டும்" என்கிறார். தே.மு.தி.க. பிரமுகர் கவிஞர் அழகுராஜ். "பொதுவாக தி.க. வீரமணியுடன் அவர் நெருங்கியிருக்கும்போது இது போன்ற சாதியைக் குறிப்பிடும் சாடல்கள் அதிகமாகவே இருக்கும்" என்கிறார் அவர்.

"ஞாநி எழுதியதைப் படிக்கும் பாமரர்கள்

அவர் கண்ணகியையும், கரடியையும் ஒப்பிட்டதாகவே கருதுவார்கள். அதனால்தான் கலைஞர் குமுறிவிட்டார். மர்மமான முறையில் நீக்கப்பட்ட ஒரு சிலையை, தமிழறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் போராடியும்கூட அதே இடத்தில் வைக்காமல் இறுமாப்புடன் இருந்தது முந்தைய அரசு. ஆனால் கலைஞர் அதை மீண்டும் நிறுவியிருக்கிறார். இந்தச் சமயத்தில் விகடனில் வந்த விமர்சனம் சரியான நோக்கில் செய்தது போலத் தெரியவில்லை" என்கிறார் தி.மு.க. பிரமுகரும் 'அறிவுக் கொடி' பத்திரிகை ஆசிரியருமான ச.கந்தன்.

"ஞாநியின் விமர்சனம் கலைஞர் அவர்களைக் குழந்தைத்தனத்துடன் காட்டுவதாக இருந்தது. இது விஷமத்தனமானது. எனவேதான் இவ்வளவு எதிர்ப்பு மற்றபடி எங்களைப் பற்றிய விமர்சனங்களுக்குப் பதில் சொல்லும்போது, ஆதாரபூர்வமாகவும், கண்ணியமாகவும்தான் நடந்து கொள்கிறோம். ஆனால் எங்களை விமர்சனம் செய்பவர்கள் பிராமணர் தர்மத்தை தூக்கி நிறுத்தும் பணியில் இருப்பதால், பெரும்பான்மை மக்களின் நலன்களைக் காப்பாற்றும் பொறுப்பும், கடமையும் எங்களுக்கு இருக்கின்றன'' என்கிறார் திராவிட இயக்க ஆராய்ச்சியாளரும், முரசொலி கட்டுரையாளருமான க.திருநாவுக்கரசு!

- ப்ரியன்

மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் கதைகள்

அநுத்தமா

1. ஒரே ஒரு வார்த்தை 90.00
2. கேட்ட வரம் 70.00
3. லக்ஷ்மி 90.00
4. சேவைக்கு ஒரு சகோதரி 100.00
5. ருசியான கதைகள் 95.00
6. அற்புதமான கதைகள் 95.00
7. பிரமாதமான கதைகள் 95.00
8. படுபேஷான கதைகள் 95.00
9. அழகான கதைகள் 95.00
10. நைந்த உள்ளம் 135.00

ரா.கி. ரங்கராஜன்

1. தர்மங்கள் சிரிக்கின்றன 45.00
2. ஹேமா! ஹேமா! ஹேமா! 60.00
3. அழைப்பிதழ் 65.00
4. ராசி 65.00
5. க்ரைம் 55.00
6. புரட்சித்துறவி 35.00
7. கையில்லாத பொம்மை 60.00
8. உன்னேன் அம்மா 40.00
9. அபாய நோயாளி 60.00
10. ஒளிவதற்கு இடமில்லை (I & II) 140.00
11. ஹவுஸ் ஃபுல் 72.00
12. ஒரு தற்கொலை நடக்கப் போகிறது? 40.00

சியாமளா ராவ்

1. தியாகி தோழி தலைவி 60.00
2. தேடியுனைச் சரணடைந்தேன் 52.00
3. உறவு தவறு 30.00
4. ஒரு கூண்டுக் கிளிகள் 65.00
5. அக்கினிக் குஞ்சுகள் 62.00
6. வேஷப் பறவை 70.00
7. தீவுநதிகள் 40.00
8. மாறிய கோணங்கள் 77.00
9. பாயும் ஒளி நீ எனக்கு 50.00

எண்டமூரி வீரேந்திரநாத்

1. அந்தர் முகம் 62.00
2. தளபதி 50.00
3. 13-14-15 80.00
4. நிகிதா 80.00
5. ரிஷி 30.00
6. பந்தம் பவித்ரம் 70.00
7. பதியன் ரோஜா 50.00
8. காதலெனும் தீவினிலே 42.00
9. காஸனோவா-99 75.00
10. தி பெஸ்ட் ஆப் எண்டமூரி 60.00
11. துளசிதளம் 85.00
12. மீண்டும் துளசி 100.00
13. பிரளயம் 35.00
14. பட்டிக்காட்டு கிருஷ்ணன் 50.00
15. சாகர சங்கமம் 56.00
16. காதல் 'செக்' 66.00
17. வேகஸ் ஹாஸ்டல் 56.00
18. பிரியமானவளே... 95.00

தமிழில் கௌரி கிருபானந்தன்

D. காமேஸ்வரி எழுதி – கௌரி கிருபானந்தன் தமிழாக்கம்

1. துணையைத்தேடி 75.00
2. வாழ்க்கையை நழுவவிடாதே 55.00

சி. ராதாகிருஷ்ணன் எழுதி 'சிவன்' மொழி பெயர்த்த

1. நிழலின் வடுகள் 50.00
2. வானியன்குளம் சுயம்வரம் 50.00

வ.வே.சு. ஐயர் எழுதிய

1. மங்கையர்க்கரசியின் காதல் 37.00

ஜாவர் சீதாராமன்

1. உடல் பொருள் ஆனந்தி 85.00
2. மின்னல் மழை மோகினி 110.00
3. நானே நான் 55.00

யத்தனபூடி சுலோசனா ராணி

1. தொடுவானம் (I & II) 120.00
2. நிவேதிதா 35.00
3. சம்யுக்தா 43.00
4. சிநேகிதியே 55.00
5. செகரட்டரி 87.50
6. கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன் 67.50
7. இதய கீதம் 60.00

லட்சுமி ராஜரத்தினம்

1. கனவு ஊர்வலங்கள் 60.00
2. அன்புள்ள அம்மாவுக்கு 70.00
3. பல்லவப் பாவை 70.00
4. நர்ஸ் மாதவி 20.00

மோகன சந்திரன் தமிழில் சிவன்

கலிகா (பாகம் 1, 2) 120.00

சரத்சந்தர் எழுதிய

தேவதாஸ் 55.00

பி.வி. தம்பி எழுதி 'சிவன்' மொழி பெயர்த்த

கிருஷ்ணப் பருந்து (I & II) 120.00

சுதாங்கன் எழுதிய

1. தேதியில்லாத டைரி 36.00
2. சாய்ந்து கொள்ள தோள் வேண்டும் 35.00

பங்கிம் சந்த்ர சட்டர்ஜி எழுதிய

1. ஆனந்த மடம் 50.00
2. விஷவிருட்சம் 30.00

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

ப.எண் 244, ராமகிருஷ்ண மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை – 600 004
தொலைபேசி: 24641314
email : srinivasan@alliancebook.com
visit us at : www.alliancebook.com

"உழைப்பைவிட பலமடங்கு சம்பளம் அதிகமாக வாங்குவதுதான் லஞ்சம். இப்படிப்பட்ட லஞ்சத்துக்கும் ஊழலுக்கும் இடம் கொடுக்கும் துறை சினிமாத்துறை" என்று சென்ற இதழில் விஜய்காந்த் தொடர்பான ஒரு கேள்விக்கு விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் காட்டமாகப் பதில் கூறியிருந்தார். இவர் கூற்றுப்படி நடிகர், நடிகையருக்கு வழங்கப்படும் சம்பளம் லஞ்சமா? உழைப்பைக் காட்டிலும் அதிக சம்பளம் பெற்று ஊழலுக்கு வழிவகுக்கிறீர்களா என்று சினிமாத்துறையில் உள்ள இளம் மற்றும் மூத்த கலைஞர்களிடம் கேட்டோம். ஆளாளுக்கு திருமாவளவன் மீது சீறினார்கள்.

ஆர்யா : இந்திய சினிமாவில் ஆர்ட்டிஸ்டுகளுடைய சம்பளத்தை யார் நிர்ணயிப்பது என்கிற வரைமுறை சரியாக இல்லை. இது தயாரிப்பாளருடைய சக்தி மற்றும் நடிகருடைய டிமாண்டைப் பொறுத்தது. ஹாலிவுட் படங்களில் படத்தின் பட்ஜெட்டில் நடிகருக்கு இத்தனை சதவிகிதம் சம்பளம் என்று வெளிப்படையாகவே சொல்லிவிடுவார்கள். ஆனால் இங்கு அந்த சிஸ்டம் கிடையாது. இங்கு மார்க்கெட் இருக்கும் வரைக்கும்தான் மதிப்பு. அதோடு மற்ற தொழில்களில் வழங்கப்படும் சம்பளத்தோடு சினிமாவை ஒப்பிடக் கூடாது. நாங்கள் நேரம் காலமில்லாமல் வெயிலிலும் மழையிலும் பாடுபடுவதை மற்றவர்கள் அறிவதில்லை. கூடவே எங்களுடைய பர்சனல் வாழ்க்கையும் முற்றிலுமாகப் பாதிக்கப்படுகிறது. அரசியல்வாதிகள் அரசு சம்பளத்தில் மட்டும்தான் பிழைப்பு நடத்துகிறார்கள் என்றால் எப்படி டாட்டா சுமோவில் செல்கிறார்கள்? சினிமாக்காரர்களின் சம்பளத்தை லஞ்சம் என்றெல்லாம் சொல்வது அநியாயம்.

என்ன அருகதை இருக்கு?



* திருமாவளவன்

சமிக்ஷா : பத்துக் கோடி லாபம் பெறும் தயாரிப்பாளர், அதிலிருந்து இரண்டு கோடியை ஹீரோவுக்குக் கொடுப்பதில் என்ன தவறு? மற்ற தொழில்களில் சாகிறவரைக்கும் வேலை

திருமாவளவனைப் பந்தாடும்

செய்ய முடியும். ஆனால் சினிமாவில் எல்லோருக்கும் இது சாத்தியப்படாது. எங்களுடைய வேலைக்கு யாராவது உத்தரவாதம் கொடுக்கட்டும். நாங்களும் குறைவாகச் சம்பளம் வாங்கிக் கொள் கிறோம். இந்தியா முழுக்க மார்க்கெட் உள்ள ஹிந்தி நடிகர்களின் சம்பளத்தை ஒப்பிட்டால், இங்குள்ள நடிகர்கள் பெறும் சம்பளம் அதிகம்தான். அதற்காக எங்களுடைய சம்பள விவகாரத்தை ஒரு மூன்றாம் மனிதர் விமர்சிப்பது முறை யற்றது.

ப்ரியாமணி : எனக்கு இது வரைக் கும் சொன்ன சம்பளமே சரியா கொடுக் கலை. சம்பளப் பாக்கியை நடிகர் சங்கத்துல முறையிட்ட பின்பும் சரியான நீதி கிடைக்கலை. இதுல நான் அதிக சம்பளம் பற்றிய ஒரு குற்றச்சாட்டுக்கு என்ன சொல்ல முடியும்? சினிமாவில் சம்பளம் அதிகமாகக் கொடுக்கப்படுவது ஒன்றும் புதிதில்லையே. அதுக்காக அரசியல்வாதிகள் சினிமாக்காரர்களோட சம்பளம் பத்திப் பேசறதுக்கு என்ன அரு கதை இருக்கு? அவங்க கோடி கோடியா சம்பாதிப்பதில்லையா? மக்களை ஏமாத் தறதில்லையா?

சீமான் : லஞ்சத்தை ஒழிக்க வேண் டும் என்கிற கருத்தையொட்டி எடுக் கப்பட்ட ரமணா, இந்தியன் இரு படங்களும் கறுப்பு விலையில் தான் விற்கப்பட்டன. இப்போது இதை லஞ்சம் என்றுதானே கூற முடியும்? இரண்டரை கோடி சம்பளம் வாங்கும் கதாநாயகன், அதில் ஒரு கோடியைப் பதுக்கிவிட்டு மீதியிருக்கும் பணத்துக்கு மட்டுமே வரி கட்டுகிறார். இது ஊழல்தானே? தயா ரிப்பாளரும் கதாநாயகனும் சம்பளம் பற்றிப் பேசும்போதே இவ்வளவு வெள்ளை, இவ்வளவு கறுப்பு என்று அரசை ஏமாற்றுவதற்குத் திட்டம் போட்டுவிடுகிறார்கள். இதில் என்ன நியாயம் கற்பிக்க முடியும்? இந்தியாவின் முதல் குடிமகனான குடியரசுத் தலை வருக்கே கிடைக்காத மாபெரும் ஊதியம் தமிழ் சினிமா ஹீரோவுக்குக் கிடைக்கிறது. இதை 'குறுகிய கால மார்க்கெட்' என்று சப்பைக்கட்டு கட்ட முடியாது. நான்



* ப்ரியாமணி * ஆர்யா

பிறந்ததிலிருந்தே ரஜினியும் கமலும் நடித்துக் கொண்டுதானே இருக்கிறார்கள். ஆனால் திருமாவளவன் கூறும் இந்த லஞ்சம், ஊழல் எல்லாம் சினிமாவைப் போல மற்ற துறைகளிலும் உள்ளது.

சத்யராஜ் : திருமாவளவன் விஜய் காந்த் மீதுள்ள கோபத்தைத்தான் இவ் வாறு காண்பித்திருக்கிறார். இது இரு அரசியல்வாதிகளுக்கிடையே நடக்கும் மோதல். நான் உள்ளே நுழைய முடியாது.

இதற்கிடையில் நடிகர் நாசர், "நடிகர்கள் ஊழலில்லாத ஆட்சியை அமைப்பேன் என்கின்றனர். அது எந்த அளவுக்குச் சாத்தியம் என்பதை யோசிக்க வேண்டும். நடிப்பதற்காக தாங்கள் வாங்கும் சம்பளத்தையே எல்லாப் பணத்தையும் வெள்ளைப் பணமாக வாங்காமல், ஒரு பகுதியை ஏன் கறுப்பாக வாங்குகின்றனர்? அதற்கு என்ன அர்த் தம்? வரி ஏய்ப்பு செய்துவிடலாம் என்பதற்காகத்தானே. ஆக, தங்கள் சம் பளத்திலேயே அர சாங்கத்தை ஏமாற்று பவர்கள் எப்படி ஊழலில்லாத ஆட்சியைத் தர முடியும்?" என்று சேம் சைடு கோல் போட, விவகாரம் சூடு பிடித்து வரு கிறது.

- ச.ந.கண்ணன்

* சீமான்





* நாசர்

திரையுலகம்!



'நான் கடவுள்' அல்ல!

பாலா அடுத்த படம் தொடங்கி விட்டார். பிதாமகன் வெளிவந்து மூன்று வருடங்கள் கழித்து ஆர அமர பொறுமையாக ஒரு கதை செய்து ஆர்யா, பாவனா, கன்னட நடிகர் தேவராஜ், இளையராஜா, ஒளிப்பதிவாளர் வில்சன் போன்ற கலைஞர்களோடு 'நான் கடவுள்' படத்துக்கு விளக்கு ஏற்றிவிட்டார் பாலா. புதுப்படம் பற்றிய அறிவிப்பு நிகழ்ச்சியில் அவர் நம்மிடம் பேசியது இவைதான்.

அஜீத் : படத்துக்கு முதலில் ஒப்பந்தமானவர் இவர்தான். ஆனால் பின்பு நான்கு சுவருக்குள் பேசி முடித்து சுமுகமாகப் பிரிந்துவிட்டோம். மேலும் இதுபற்றி பேசுவது ஆரோக்கியமானதல்ல! என்று நினைக்கிறேன்.

ஆர்யா : அஜீத்துக்கு அடுத்து என் கதை நாயகனாகப் பொருந்தியவர் ஆர்யா. ஆகஸ்ட் மத்தியில் படப்பிடிப்பு ஆரம்பமாகும். அப்போதும் ஆர்யா நடித்துக் கொண்டிருக்கும் படங்களின் படப்பிடிப்பு முடியாவிட்டாலும் மேலும் சில நாட்கள் ஆர்யாவுக்காகக் காத்திருக்கத் தயார்.

கதை : இது சமூகத்தைப் படம் பிடிக்கும் யதார்த்தமான படம். கதை காசியிலும், பழனியிலும் நடக்கிறது. தலைப்பைப் பார்த்து 'நான் தான் கடவுள்' என்று அர்த்தம் கொள்ளாதீர்கள். நான் மற்றும் கடவுள் என்று திருத்தி வாசிக்கவும். வசன பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர் எழுத்தாளர் ஜெயமோகன். மூன்று நாட்களில் வசனங்களை எழுதித் தந்தார். கன்னட நடிகர் தேவராஜுக்கு வில்லன் வேடம்.

தயாரிப்பாளர் : பிதாமகன் படம் பார்த்த சினிமாக்காரர்கள் அனைவரும் படம் 'ப்ளாப்' என்றே முகம் திருப்பினார்கள். ஆனால் தயாரிப்பாளர் தேனப்பன் மட்டுமே படம் பார்த்து முடித்து என்னை வாரி அணைத்து முத்தமிட்டார். தேசிய விருது கிடைக்குமென்றும் ஆருடம் சொன்னார்.

தாமதம் : நான் ஒரு சோம்பேறி. அதனால்தான் என்னால் உடனுக்குடன் படம் கொடுக்க முடியவில்லை. ஆனாலும் மார்க்கெட், டிரெண்ட் போன்றவற்றில் நம்பிக்கை இல்லை. நாம் எடுக்கும் படமே டிரெண்டை நிர்ணயிக்க வேண்டும்.

இசை : என் படத்துக்கு இளையராஜாவைத் தவிர்த்து வேறுயாரால் இசையமைக்க முடியும்?

ரிலீஸ் : தயாரிப்பாளர் வழிவிட்டால் படத்தை அடுத்த பொங்கலுக்குத் தந்துவிட முடியும். இல்லாவிட்டால் தமிழ்ப் புத்தாண்டுக்கு கட்டாயம்.

- சநகன்

ஸ்ரீ ராமஜெயம்

卐 சதாபிஷேகம் 卐



ஆலக்கிராமம் பிரும்மஸ்ரீ, நடராஜ அய்யர் & ஸ்ரீமதி நீலாயதாக்ஷி அம்மாள் தம்பதியினரின் சதாபிஷேக மகோத்ஸவம் 5.6.2006 அன்று திருக்கடையூர் ஸ்ரீ காலசம்ஹார மூர்த்தி கோயிலில், ஸ்ரீ அபிராமி அம்பாள் சன்னதியில், பூஜ்யஸ்ரீ வி.வி. ஸ்ரீதர் குருஜீயின் ஆசிர்வாதத்துடன் மிக விமரிசையாக நடைபெற்றது.

எஸ்.ராஜகோபாலன் &
சரோஜா ராஜகோபாலன்
ஸ்ரீனிவாசன் (USA)
ராதா ஸ்ரீனிவாசன்
ஸ்ரீ பிரதா ஸ்ரீனிவாசன்

என்.பாலசுப்ரமணியன் (DUBLIN)
விதாத்ரி ஐயர்
ஜெஸிகா ஐயர்
போன் : 044-24714572



சிறந்த வீட்டு மனைகள். ஆலோசனை தேவையிருக்காது.

BLB
PLEDGED TO ETHICS

ஸ்ரீ வாசுதேவா நகர்
ஊரப்பாக்கம்

ஸ்ரீ சப்தகிரி கார்டன்ஸ்
கூடுவாஞ்சேரி

ஸ்ரீ ஹரி அவின்யு
மறைமலை நகர்
(Opp. Ford)

M.S. சுப்புலட்சுமி நகர்
மேற்கு தாம்பரம்

Ph : 2435 7721 / 31 / 61 / 81
: 93805 59391 / 93808 72516

BLB Estates (P) Ltd.
Behind Apollo Speciality Hospital, Teynampet, Ch -18.
E-mail : blbestmail@vsnl.net www.blbestates.com

நன் மதிப்பில் முதலீடு

லகலக...

புதுப்படம்

கமல் படம் என்றாலே சர்ச்சை என்றாகிவிட்டது. மனிதர் எதைப் பற்றியும் அலட்டிக்கொள்ளாமல் அடுத்த படத்தின் வேலையில் இறங்கி விடுகிறார். இப்போது புதிதாக ஒரு படம் தொடங்குகிறார் என்று செய்தி கிடைக்க, நமது நிருபர் விழுந்தடித்து ஓடினார். அவருக்கும் கமலுக்கும் நடந்த உரையாடல் அப்படியே அளிக்கப்படுகிறது.

நிருபர்: வணக்கம் கமல் சார், எப்படி இருக்கீங்க?

கமல்: நான் எப்படி இருப்பேன் என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். ஆனாலும் அதை என் மூலம் கேட்டு அதைத் தகவலாக



கொடுக்க வேண்டும் என்பது உங்களது ஆசை. உங்கள் ஆசை அதுவானால் அதை பூர்த்தி செய்ய நான் தயார்தான். ஆனால் பிறகு இதுவே ஒரு வழக்கமாகி விடும். ஒவ்வொரு முறையும் அதை பூர்த்தி செய்ய எனக்கு எண்ணம் இருந்தாலும் காலம் அதற்கு இடம் கொடுக்காமல் போய்விடலாம். அப்போது உங்களுக்கும், வாசிக்கும் மனங்களுக்கும் ஏமாற்றமாகிவிடும். அப்படி ஒரு ஏமாற்றத்தை இந்த கமல் கொடுத்தான் என்று பதிவு செய்யப்படுவதை விரும்பவில்லை.

நிருபர்: கடவுளே! நல்லா இருக்கேன், இல்லைன்னு ஒரு வார்த்தையில் முடிக்க வேண்டிய பதிலை இவ்வளவு நீளமா சொல்லணுமா?

கமல் : மேலோட்டமாக உங்களின் கேள்விக்கு அதுவே பதிலாக இருக்கலாம். ஆனால் அதன் உள்ளார்ந்த அர்த்தம் வேறு என்பது நன்றாகத் தெரியும்போது, ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லும் வழக்கமான வேஷத்தை அணிந்துகொள்வதில் விருப்பமில்லை. தவிர...

நிருபர்: வேண்டாம் சார், அந்தக் கேள்வியையே மறந்துடுவோம். உங்களோட 'வேட்டையாடு விளையாடு' வருவதில் என்ன பிரச்னை?

கமல்: பிரச்னைதான் பிரச்னை. உண்மையில் எந்தப் பிரச்னையுமே இல்லை. ஆனால் பிரச்னை இருப்பதாகவும், பிரச்னை இருக்குமோ என்று நினைப்பதுமே அதன் பிரச்னை.

நிருபர்: எதுக்கு சார் பிரச்னை? அந்தக் கேள்வியையும் விட்டுடுவோம். நேரா விஷயத்துக்கே வரேன். புதுப் படம் எடுக்கப் போறீங்களாமே நிஜமா?

கமல்: ஆமாம். அதற்கான முயற்சியை ஆரம்பித்துள்ளேன்.

நிருபர்: படத்தோட தலைப்பு என்ன சார்?

கமல்: இந்தப் படத்துக்கு தலைப்பே கிடையாது. தலைப்பை வைத்தால் தானே மாற்றச் சொல்லி ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். தலைப்பே இல்லையென்றால்? உலக சினிமா வரலாற்றில் முதல் முயற்சியாக இது இருக்கும்.

நிருபர்: தலைப்பே இல்லாம

எடுக்கிறார் கமல்!

எப்படி சார்?

கமல்: தலைப்பு என்பது ஒரு படத்துக்கான அடையாளம்தானே தவிர, அதுவே படமல்ல. தலைப்பே இல்லாததுதான் இந்தப் படத்தின் அடையாளம்.

நிருபர்: சரி, படத்தோட தயாரிப்பாளர் யார் சார்?

கமல்: வெளி ஆட்களைப் போட்டாலே பிரச்னை. அவர்கள் தலைவலிக்காக மாத்திரை சாப்பிட்டாலும் நமக்கு நெஞ்சுவலி வருகிறது. ஒரு கலைஞன் இப்படிப்பட்ட சூழலில் எப்படி சுதந்திரமாக நடிக்க முடியும்?

நிருபர்: அப்போ நீங்கதான் தயாரிப்பாளரா?

கமல்: அதுவுமில்லை. படத்துக்குத் தயாரிப்பாளர் என்று யாருமே கிடையாது. இது ஒரு சுயம்புப் படம். தன்னைத்தானே தயாரித்துக்கொள்ளும்.

நிருபர்: புரியலையே சார். பணம் யார் போடறது?

கமல்: பணம் எதற்கு?

நிருபர்: பணம் இல்லாம படம் எப்படி சார் எடுக்க முடியும்?

கமல்: இப்போது உங்கள் பர்ஸில் பணம் இருக்கிறதா?

நிருபர்: இருக்கு.

கமல்: படம் இல்லாமல் எப்படிப் பணம் வந்தது? படம் இல்லாமல் பணம் இருக்கும்போது பணம் இல்லாமல் படம் இருக்காதா?

நிருபர்: புரியலையே சார்.

கமல்: புரிய வேண்டும் என விரும்பினால் புரியும். ஆனால் நாம் அப்படி விரும்புவதில்லை. அதனால்தான் புரிபவையும் புரியாமல் போய் விடுகின்றன. இது புரியும்வரை எல்லாமே புதிர்தான்.

நிருபர்: படம் எப்போ வரும்?

கமல்: முழுவதுமாக முடித்ததும் வரும்.

நிருபர்: எப்போது முடிப்பீங்க?

கமல்: துவங்கியதும். துவங்கியது எல்லாம் முடியத்தானே வேண்டும்?

நிருபர்: எப்போ துவங்குவீங்க?

கமல்: முடிக்க வேண்டுமென எண்ணும்போது, துவக்கம், முடிவு எல்லாமே நமது எண்ணத்தில்தானே இருக்கிறது? துவக்கம் என நாம் நினைப்பதே முடிவாக இருக்கலாம். முடிவிலும் துவக்கம் இருக்கலாம். எது துவக்கம், எது முடிவு என்பதை யாராலும் தீர்மானிக்க முடியாது.

நிருபர்: முடிவா என்னதான் சார் சொல்றீங்க?

கமல்: நீங்கள் துவக்கத்தைச் சொல்லுங்கள். நான் முடிவைச் சொல்கிறேன். உங்களின் துவக்கம் எதுவெனத் தெரிந்தால்தானே அதற்கான முடிவைச் சொல்ல முடியும். ஏனெனில்...



(நிருபர் மும்பை எக்ஸ்பிரஸை விட வேகமாக ஓட்டம் எடுக்கிறார்)

கற்பனை: **குசும்புராஜ்**



கல்கி



2006 ஜூன் 25
விய ஆனி 11
மலர் : 64
இதழ் : 47

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்.*

அரசியல் வன்முறை; வன்முறை அரசியல்!

ஸ்டாலின் பேரில் நடக்கவிருந்த தாக்குதல் அதிர்ச்சி ஏற்படுத்துகிறது. வன்மையான கண்டனத்துக்குரியது. அவருக்கு நேரவிருந்த அபாயத்தைத் தடுத்து நிறுத்திய மத்திய காவல்துறை ஊழியர் பாராட்டுக்குரியவர். மத்திய அரசு அவருக்குச் சிறப்புச் சன்மானம் அளித்திருப்பது போற்றுதலுக்குரியது.

"பொது வாழ்வில் நுழைந்துவிட்ட பிறகு உயிருக்கு அஞ்சுவதெல்லாம் சாத்தியமில்லை" என்று துணிவுடன் கூறியிருக்கிறார் ஸ்டாலின்.


ஆனால், அரசியல் தலைவர்களுக்குத் தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் போன்றவர்களால் அபாயம் ஏற்பட்டு வந்தது போக, இன்றைக்கு அவர்கள் கடைப்பிடிக்கும் வன்முறை அரசியல் போக்கினாலேயே அவர்களுக்கு அபாயம் அதிகரித்திருக்கிறது.

தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடனேயே, தமிழகத்தில் குண்டர்கள் ராஜ்ஜியம் நடத்த ஆரம்பித்துவிட்டதாக ஜெயலலிதா சகட்டுமேனிக்குக் குற்றம் சாட்டினார். அம்பத்தூரில் நடந்த அ.தி.மு.க தொண்டர் ஒருவரது படுகொலைக்கு அக்கட்சியினர் அரசியல் சாயம் பூசி, தி.மு.கவைக் குற்றம் சாட்டினர்.

ஆனால், அக்கொலைக்குத் தொழில் விரோதமே காரணம் என்பது காவல்துறையினரால் கண்டறியப்பட்டு கமிஷனரால் அறிவிக்கப்பட்டது!

இப்போதும்கூட, ஸ்டாலின் மீது நடந்த தாக்குதல் முயற்சியைத் தொடர்ந்து, அவருக்குப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்று எழுந்த கோரிக்கையை கிண்டல் செய்து





அ.தி.மு.க. பிரசாரம் செய்கிறது! அவ்வாறு 'பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக அரங்கேற்றப்பட்ட நாடகமே மதுரை ரயில் நிலைய அசம்பாவிதம்' என்பது குற்றச்சாட்டு!

நடந்த வன்முறையின் பின்னணி என்னவென்று ஆராயாமலே இவ்வாறு கூறுவது, வன்முறைக் களத்துக்கு மறைமுகமாகத் தெரிவிக்கப்படும் ஆதரவே ஆகும்.

இத்தாக்குதல் முயற்சியை எதிர்த்துப் பேசியிருக்கும் தமிழக காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணசாமியும்கூட, ஜெயலலிதா செய்த தவறையே செய்கிறார்! வன்முறையைக் கண்டிப்பதற்குப் பதிலாக, ''சட்டசபையில் கலைஞர் தாக்கப்பட்ட கையோடு ஸ்டாலினும் தாக்கப்பட்டிருக்கிறார்'' என்று தொடர்பில்லாத விஷயங்களை முடிச்சுப் போட்டு, உணர்ச்சிகளை உசுப்பிவிடுகிறார்!

அ.தி.மு.க-தி.மு.கவினரிடையே அரசியல் மாறுபாடு என்பதைக் காட்டிலும் தனிப்பட்ட விரோதமே தலைதூக்கியிருக்கிறது. இந்த விரோதமானது நேரடியாகவும் மறைமுகமாகவும் தமிழகத்தில் வன்முறை வளர்வதற்குத் தொடர்ந்து காரணமாக இருந்து வருகிறது. வன்முறை கலாசாரமானது, சார்பு கட்சிகள், துணைக் கட்சிகளிடையேயும் பரவி, ஊடுருவி, சமுதாயத்தின் ஓர் அங்கமாகவே மாறிவிடும் அபாயம் எழுந்துள்ளது.

கண்ணகி சிலை குறித்த ஒரு விமர்சனத்தைத் தாளாமல் ''தமிழன் பொங்கி எழுவான்'' என்று தி.மு.க தலைவர் பேசுவது;

'தடை செய்யப்பட்ட இடத்தில் மறியல் செய்தே தீருவோம்' என்று நாகர்கோயிலில் கம்யூனிஸ்ட் தலைவர்கள் காவல்துறை ஆணைகளை மீறுவது;

வன்முறைக்கு அஞ்சாத தாதாக்கள் / ரௌடிகளுக்கு அனைத்துக் கட்சியினரும் அந்தஸ்தும் பதவியும் அளித்து அரவணைப்பது.

- இவையெல்லாமே அரசியல் வன்முறையும் வன்முறை அரசியலும் தழைக்க வகை செய்து வருகின்றன.

வன்முறையில் யார் ஈடுபட்டாலும், அவர் எந்தக் கட்சியினரானாலும், காரணம் எதுவானாலும் 'வன்முறை தவறு' என்று கண்டிக்கப்பட வேண்டுமே தவிர, அதற்கு அரசியல் சாயம் பூசி நியாயம் கற்பிப்பதோ, உள்நோக்கம் கற்பிப்பதோ மாபெரும் குற்றம். விரைவில் இப்போக்கு முற்றுப் பெறாவிட்டால், தமிழ்நாடு வன்முறை பூமியாக மாறிப்போகும்! ●



என் ரேஞ்சே வேறு!

சுஹாசினிக்கு இந்தப் பெண்ணைப் பார்த்ததும் ஒரே குழப்பம். "ப்ச், எங்கேயோ பார்த்திருக்கிறோமே" என்று முக்கால் மணி நேரம், மண்டையைப் போட்டு உடைத்தும் பதில் கிடைக்கவில்லை. "என்ன மேடம், தெரியலையா! நான்தான் ஷீலா. உங்க மெட்ராஸ் டாக்கீஸோட 'டும்டும்டும்' படத்துல ஜோதிகா தங்கையா நடிச்சேனே" என்று புதிரை உடைக்க, அசந்தே போயிருக்கிறார் சுஹாசினி. குழந்தை நட்சத்திரமாக ஏராளமான படங்களில் நடித்துவந்த ஷீலா, ஒரே தாவலில் 'இளவட்டம்' படத்தின் ஹீரோயினாகியிருப்பதுதான் பலருக்கும் ஆச்சர்யம். ஆனால் அவர் நம்மிடம் பேசியது, தான் குழந்தை நட்சத்திரமாக இருந்தபோது ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி.

"அப்போ நான் பாட்டுக்கு சமர்த்தா ஸ்கூலுக்குப் போயிட்டிருந்தேன். யு.கே.ஜி. படிக்கும்போது ஒருநாள் ரோட்டுல என்னை 'ராஜகுமாரன்' படயூனிட்டைச் சேர்ந்தவங்க பார்த்திருக்காங்க. என் முகம் நதியாவோட வார்ப்பு மாதிரி இருக்குன்னு 'ராஜகுமாரன்' படத்துல குட்டி நதியாவா நடிக்க விட்டுட்டாங்க. சினிமா வாசனையே படாதது எங்க குடும்பம். ஆனாலும் ஒரு ஜாலிக்காக லீவுல நடிச்சிட்டு இருந்தேன்.

"'நந்தா' பட வாய்ப்பு திடீர்னு வந்தது. பாலா சார் சொல்லிட்டார். 'என்னைப் பார்க்க வரும்போது பாவாடை சட்டைதான் போட்டுட்டு வரணும். நோ மேக்கப். தலை சீவியிருக்கக் கூடாது. முடிஞ்சா கொஞ்ச நேரம் வெயில்ல நின்னுட்டு வா'ன்னு! நானும் அவர் சொன்ன மாதிரியே போனேன். அந்த இடத்திலேயே நந்தாவுக்குத் தேர்வு செஞ்சுட்டாரு. உடனே காது கேளாதோர் பள்ளிக்குப் போய் பயிற்சி எடுத்தேன். காது கேளாதவர்களுக்கான நியூஸை மறக்காம பார்ப்பேன். பாலா சார் படப்பிடிப்புல என்னையும் சூர்யாவையும் நல்லா கொளுத்துற வெயில்ல நிற்க வைச்சு ட்ரில் வாங்கினாரு. திட்டுத்திட்டா மேக்கப் போட்டு எவ்வளவோ படங்கள்ல நடிச்சாலும் இன்னிக்கும் மக்கள் குறிப்பிட்டு சொல்றது நந்தா படத்தைத்தான். நடுவுல 'ஆட்டோகிராப்' மல்லிகா, 'காதல்' சந்தியா நடிச்ச கேரக்டர்கள்ல நடிக்க வாய்ப்பு வந்துச்சு, மறுத்துட்டேன்...ம்... ஒருவேளை இந்த ரெண்டு படங்கள்லயும் நான் நடிச்சிருந்தா என் ரேஞ்சே வேறே மாதிரி ஆகியிருக்கும் இல்லை" என்று பெருமூச்சு விட்டுக்கொள்கிறார் ஷீலா.

- ச.ந.கண்ணன்

—ஷீலா



விவாகரத்துக்கு வந்த லவ்க!

"காதல் எல்லாம் சுத்த ஹம்பக். எப்படிக் காதலிக்கிறதுன்னு பல பேருக்கும் தெரியாது. இதுதான் உண்மை." - எடுத்தவுடன் அதிர்ச்சியடைய வைக்கிறார் ஏஷியா ஓசியானிக் சங்கத் தலைவர் டாக்டர் காமராஜ்.

"சினிமாவை கோனார் நோட்ஸா நினைச்சு நிறைய பேர் அப்பட்டமா ஃபாலோ பண்றாங்க. கண்டவுடன் காதல் பிறக்குது. துரத்தித் துரத்தி ஜாலியா காதலிக்கிறாங்க. வீட்டுல எதிர்ப்பு கிளம்பிச்சுன்னா உடனே எல்லோருக்கும் டாட்டா காட்டிட்டு ரகசியமா கல்யாணம் செஞ்சுக்கிறாங்க. 'காதலுக்காக எந்தப் பிரச்னையையும் சந்திக்கத் தயார்'னு நிமிர்ந்து நிக்கிறாங்க. எல்லாம் சரிதான். ஆனால் கல்யாணத்துக்கு அப்புறம்? எத்தனை தெய்வீகக் காதலர்கள் கைகோத்துக்கிட்டு சந்தோஷமா இருக்கிறாங்க? எந்த அளவுக்குப் பிரச்னைகளைச் சமாளிக்கிறாங்க?"

ஏன் காதலர்களுக்கு அப்படி என்னதான் ஆகிவிட்டது? ஏன் இந்தத் திடீர் கவலை? "கவலைதான். முன்னால இருந்ததைவிட இப்போ விவாகரத்து பெருகிடுச்சு. புரட்சிகரமா காதல் திருமணம் செஞ்சுக்கிட்டவங்கதான் இன்னிக்கு கோர்ட் வாசல்ல ஜோடி ஜோடியா தவம் கிடக்கறவங்க. காதலுக்காக சாகக்கூடத் தயார்னு வாயளவுல சொல்றது ரொம்ப ஈஸி. காதலிக்காகவோ, காதலனுக்காகவோ துணிஞ்சு சாகறதுகூட ஈஸிதான். ஒரே ஒருகணம் போதும். ஆனா காலம் எல்லாம் சேர்ந்து வாழ முடியுமா? அதுக்கான துணிச்சல் இருக்கா? எது உண்மையான தைரியம்?"

நொடிப்பொழுதும் சோராமல் எஸ்.எம்.எஸ்., வாழ்த்து அட்டைகள், கிண்டல், சிணுங்கல் என்று விண்வெளியில் பறந்து செல்லும் காதலர்கள் திருமணத்துக்குப் பின் ஏன் மாறிவிடுகிறார்கள்? "காதல் நிலைக்காமல் போவதற்குக் காதலர்கள்தாம் காரணம். வெளியில இருந்து வர்ற பிரச்னைகளைச் சமாளிக்கத் தெரிஞ்ச இவங்களுக்கு உள்ளுக்குள்ளே இருக்கிற பிரச்னைகளைக் கண்டுபிடிக்கத் தெரியலை. மானே, தேனே கொஞ்சல்கள் காணாமல் போகுது. விருப்பப்பட்ட காதலனோ, காதலியோ கிடைச்சுட்டாங்க என்ற நினைப்பே பலருக்குத் திருப்தி அளிச்சுடுது. ஒருவித யந்திரத்தனம் புகுந்துடுது. திடீர்னு ஒரு வெறுமை. என்னன்னு சொல்லத் தெரியாத பயம், விரக்தி. காதல் சுத்தமா காணாமப் போகுது. விளைவு? விவாகரத்து."

சரி, பெரியோர்களால்

• டாக்டர் காமராஜ்



நிச்சயிக்கப்பட்டு சுப முகூர்த்த சுபவேளையில் நடைபெறும் திருமணங்களாவது நிலைத்து நிற்கின்றனவா? 'இல்லை' என்கிறார். நிச்சயிக்கப்பட்ட திருமணங்களும் தாக்குப்பிடிப்பதில்லையாம்.



சரி, விவாகரத்தை எப்படித் தடுப்பது? "மணமுன் ஆலோசனைதான் (ப்ரீ மேரிட்டல் கவுன்சலிங்) இதுக்கான ஒரே வழி. ஒரு வேலைக்குச் சேரணும்னா ட்ரைனிங் எடுத்துக்கறோம். கம்ப்யூட்டரை இயக்கணும்னா ட்ரைனிங் எடுத்துக்கிறோம். திருமணம் எவ்வளவு பெரிய விஷயம். கணவன், மனைவி இருவருக்கும் என்னென்ன பிரச்னைகள் தோன்ற வாய்ப்பிருக்கு, அதை எப்படிச் சமாளிக்கணும்னு யாராவது ட்ரைனிங் எடுத்துக்கிறாங்களா? திருமணத்துக்கு முழுமையா தயார் ஆகணும்னு யாராவது யோசிக்கிறாங்களா? இது முக்கியம் இல்லையா?"

அதிர்ச்சி அளிக்கக்கூடிய ஒரு புள்ளிவிவரத்தையும் தருகிறார். "ஐ.டி., கால்சென்டர் துறையில வேலை செய்யறவங்கதான் இன்னிக்கு அதிகமா விவாகரத்துக்கு அப்ளை பண்ணியிருக்காங்க. அள்ள அள்ளப் பணம் கிடைக்கிறது உண்மைதான். ஆனால் சந்தோஷம் டோட்டலா மிஸ்ஸிங். 'இந்த வாரத்துக்குள்ள இந்த ப்ராஜெக்டை கம்ப்ளீட் செய்யணும்', 'அடுத்த வாரம் அந்த ப்ராஜெக்ட்', 'அடுத்த மாசம் நெதர்லாந்து பறக்கணும்' இப்படி அடுக்கடுக்கான வேலைகள். ஆபீஸ் டைமுக்குப் பிறகும் வேலையைப் பத்தித்தான் யோசிக்கிறாங்க. மனைவியோ, கணவன் விரலைவிட மௌசைப் பிடிச்சுட்டுத்தான் வாழ்க்கையை ஓட்டறாங்க."

அப்படியானால் தகவல் தொழில்நுட்பம் வேறுமாதிரியான புரட்சியைத்தான் நடத்திக் கொண்டிருக்கிறதா? ஆலோசனை மையங்கள்தான் இதற்குத் தீர்வா? பெரும்பாலான மையங்களில் என்ன செய்கிறார்கள்? ஜோடிகளை உட்கார வைத்துக் கொண்டு பக்கம் பக்கமாகக் கதைக்கிறார்கள். உபன்யாசம் நிகழ்த்துகிறார்கள். 'ஒருத்தரை ஒருத்தர் நல்லாப் புரிஞ்சுக்கோங்க' என்று சொல்லி முடித்துக்கொள்கிறார்கள். புரிந்துகொள்ள முடியாததால்தானே ஆலோசனைகளை நாடுகிறார்கள்?

"உண்மைதான். ஆனால் எல்லா மையங்களும் இப்படிச் செயல்படுவது கிடையாது. உதாரணத்துக்கு, எந்தவித பயமும் இல்லாம எப்படித் திருமண வாழ்க்கையைத் தொடங்குவது, குழந்தை பிறப்பை எப்படித் திட்டமிடணும், இணக்கமா வாழ என்ன செய்யணும், பாலியல் சார்ந்த பிரச்னைகளை எப்படி அணுகணும்... இப்படி ஒவ்வொரு அத்தியாவசியமான விஷயத்தையும் முழுமையா, தெளிவா சொல்லிக் கொடுக்கிறவங்களைப் பத்தித்தான் நான் பேசிட்டிருக்கேன்"


சரி மண முன் ஆலோசனையை எப்படி நடத்துகிறார்கள்? இது அறிவியல்பூர்வமான முறைதானா? "முழுக்க முழுக்க அறிவியல்பூர்வமான முறை. மனோதத்துவம் ப்ளஸ் மருத்துவம்... இரண்டும் இணைஞ்சாத்தான் கவுன்சலிங் வெற்றி அடையும். கூச்சம், பயம் எல்லாத்தையும் உதறித் தள்ளிட்டு தகுந்த மருத்துவர்களை அணுக ஜோடிகள் முன்வந்தா அவங்க வாழ்க்கையில ஒரு புதிய வெளிச்சம் பிறக்கும். பாலியல் உள்பட எல்லா பிரச்னைகளையும் சரிப்படுத்த முடியும். அதன் மூலமா விவாகரத்தைத் தடுக்க முடியும்" என்று கூறும் டாக்டர் காமராஜ், சென்னை வடபழனியிலிருக்கும் ஆகாஷ் மருத்துவமனையின் தலைவராக இருக்கிறார்.

- கங்கா



ஸ்ரீ:
ஸ்ரீ ராம ஜெயம்

ஸ்ரீ மயூரவல்லி சமேத ஸ்ரீ ஆதிகேசவாயநம:
ஸ்ரீ யோகா நரசிம்ம சமேத மஹா சுதர்ஸனாய நம:
ஸ்ரீ விகனஸ மஹாகுரவே நம:



ஸ்ரீ மஹா சுதர்ஸன ஜெயந்தியை முன்னிட்டு

ஸ்ரீ சுதர்ஸன மஹா யக்ஞம் &
ஸ்ரீ லக்ஷ்மீ குபேர தனாகர்ஷண மஹா யக்ஞம்

1 லட்சம் ஆவ்ருத்தி மூல மந்திர பாராயணம்

நாள்: 6-7-2006 வியாழன் முதல் 10-7-2006 திங்கட்கிழமை வரை (5 நாட்கள்)

ஸ்ரீ சுதர்ஸன மஹா யஜ்ஞம், ஸ்ரீ லக்ஷ்மீ குபேர தனாகர்ஷண மஹா யஜ்ஞம் நடைபெறும் இடம்!
டி.வி.ஆர். சுப்பி செட்டி வசந்த மண்டபம், 14, மேற்கு சித்திரை குளம் தெரு, மைலாப்பூர், சென்னை - 600 004. போன்: 24610179 செல்: 9444080130, 9444717420

ஸ்ரீ சுதர்ஸன மஹா யக்ஞ கட்டணம்
ரூ. 110/- ரூ. 250/- ரூ. 540/-
ரூ. 1100/- ரூ. 2700/- ரூ. 5400/-

திருவிளக்கு பூஜை
நாள்: 10.7.2006 நேரம்: 5.00 p.m
கட்டணம்: ரூ. 1010/-

ஸ்ரீ லக்ஷ்மீ குபேர தனாகர்ஷண மஹா யக்ஞ கட்டணம்
ரூ. 110/- ரூ. 250/- ரூ. 540/-
ரூ. 1100/- ரூ. 2700/- ரூ. 5400/-

கீழ்கண்ட அனைத்து கட்டணங்களுக்கும் யாக பூஜையில் விசேஷ சங்கல்பம் செய்து ரக்ஷை அணிவித்து, குங்குமம், அட்சதை, பிரசாதங்களும் கீழ்கண்ட பொருட்களும் வழங்கப்படும்.

கட்டணம்	சுதர்ஸன யாகம்	லக்ஷ்மீ குபேர யாகம்
ரூ. 110/-	காப்பர் சுதர்ஸன டாலர், சுதர்ஸன படம்.	காப்பர் லக்ஷ்மீ குபேர டாலர், ப்ரசித்தி பெற்ற லக்ஷ்மீ குபேர படம்
ரூ. 250/-	காப்பர் சுதர்ஸன டாலர், காப்பர் சுதர்ஸன யந்திரம், சுதர்ஸன படம்.	காப்பர் லக்ஷ்மீ குபேர டாலர், காப்பர் லக்ஷ்மீ குபேர தனாகர்ஷண யந்திரம், ப்ரசித்தி பெற்ற லக்ஷ்மீ குபேர படம்
ரூ. 540/-	காப்பர் சுதர்ஸன டாலர், வெள்ளி தாயித்து, காப்பர் சுதர்ஸன யந்திரம், சுதர்ஸன படம்.	காப்பர் லக்ஷ்மீ குபேர டாலர், வெள்ளி தாயித்து, காப்பர் லக்ஷ்மீ குபேர தனாகர்ஷண யந்திரம், ப்ரசித்தி பெற்ற லக்ஷ்மீ குபேர படம்
ரூ. 1100/-	வெள்ளி சுதர்ஸன டாலர், வெள்ளி தாயித்து, காப்பர் சுதர்ஸன யந்திரம், சுதர்ஸன படம்.	வெள்ளி லக்ஷ்மீ குபேர டாலர், வெள்ளி தாயித்து, காப்பர் லக்ஷ்மீ குபேர தனாகர்ஷண யந்திரம், ப்ரசித்தி பெற்ற லக்ஷ்மீ குபேர படம்
ரூ. 2700/-	வெள்ளி சுதர்ஸன டாலர், வெள்ளி தாயித்து, ஸ்ரீ மஹா சுதர்ஸன ஜனாகர்ஷண தனாகர்ஷண சகல சாம்ராஜ்ய லக்ஷ்மீ யந்திரம், சுதர்ஸன படம்.	வெள்ளி லக்ஷ்மீ குபேர டாலர், வெள்ளி தாயித்து, ஸ்ரீ மஹா சுதர்ஸன ஜனாகர்ஷண தனாகர்ஷண சகல சாம்ராஜ்ய லக்ஷ்மீ யந்திரம், ப்ரசித்தி பெற்ற லக்ஷ்மீ குபேர படம்
ரூ. 5400/-	யாக பூஜையில் வைத்த கலசம், தங்க தாயித்து, வெள்ளி சுதர்ஸன டாலர், ஸ்ரீ மஹா சுதர்ஸன ஜனாகர்ஷண தனாகர்ஷண சகல சாம்ராஜ்ய லக்ஷ்மீ யந்திரம், சுதர்ஸன படம், ஒரு தம்பதியர்க்கு கலச தீர்த்தம் சேர்க்கப்படும்.	யாக பூஜையில் வைத்த கலசம், தங்க தாயித்து, வெள்ளி லக்ஷ்மீ குபேர டாலர், ஸ்ரீ மஹா சுதர்ஸன ஜனாகர்ஷண தனாகர்ஷண சகல சாம்ராஜ்ய லக்ஷ்மீ யந்திரம், ப்ரசித்தி பெற்ற லக்ஷ்மீ குபேர படம், ஒரு தம்பதியர்க்கு கலச தீர்த்தம் சேர்க்கப்படும்.

இங்ஙனம்: **ஸ்ரீ சுதர்ஸன மஹா யக்ஞ கமிட்டி**

S. ஸ்ரீ ரங்கராஜ பட்டாச்சாரியார், T. சம்பத்குமார், T. சுதர்ஸன், M. பிரவீன் குமார், V. நந்தகுமார்

திருவிளக்கு பூஜை கட்டண விபரம்: ரூ. 1010/-யாக பூஜையில் வைத்த புதிய திருவிளக்கு பஞ்ச பாத்திரம் உத்திரணி, மஞ்சள், குங்குமம், புஷ்பம், தாம்பூலம், பழம், நெய்வேத்தியம், பூஜைக்கு தேவை அனைத்தும் வழங்கப்படும்.

சுதர்ஸன யாகத்திற்கு, ஸ்ரீ லக்ஷ்மீ குபேர தனாகர்ஷண யாகத்திற்கு, திருவிளக்கு பூஜைக்கும் டிக்கெட் கிடைக்கும் இடம் மற்றும் M.O. / D.D. / காசோலை அனுப்ப வேண்டிய முகவரி

ஸ்ரீ சுதர்ஸன மஹா யக்ஞ கமிட்டி, S. ஸ்ரீ ரங்கராஜ பட்டாச்சாரியார்
ப.எண்: 5 புதிய எண்: 32, கேசவ பெருமாள் சன்னதி தெரு,
மைலாப்பூர், சென்னை - 600 004.
போன்: 24610179 செல்: 9444080130, 9444717420

குறிப்பு: ஸ்ரீ சுதர்ஸன ஜனாகர்ஷண, தனாகர்ஷண சகல சாம்ராஜ்ய லக்ஷ்மீ யந்திரம் வீட்டில் அல்லது வியாபார இடத்தில் மாட்டி பூஜை செய்தால், அவ்விடத்தில் அதிக அளவில் ஜனங்கள் பெருகி வியாபாரம் அதிகரிக்கும். சகல சம்பத்துகளும் பெருகும். M.O / D.D / காசோலை அனுப்புபவர்கள் தங்கள் பெயர், கோத்திரம், நட்சத்திரம் குறிப்பிட்டு முகவரியை விபரமாக எழுதி அனுப்பவும். (M.O / D.D / காசோலை - அனுப்புபவர்களுக்கு பிரசாதம் (Speed Post-ல்) அனுப்பப்படும்.



செல்வி!

இரண்டு சின்னத் தோள்களிலும் ஈரத்துணிகளை, பெருமாளுக்குச் சாத்திய துளசி மாலைகள் மாதிரி நிறைத்துக் கொண்டு செல்வி பால்கனிக்கு மூச்சு முட்ட வந்தபோது கிட்டத்தட்ட விடிந்தே விட்டது. அரை மணிக்கும் மேல் லேட். துணிகளை வீசி வீசி கொடிகளில் போட்டு வேகம் வேகமாக கிளிப்புகள் போட்டாள். இன்னும் ஐந்தே நிமிடங்களில் குழந்தைகள் எழுந்துவிடும். அப்புறம் திண்டாட்டம்தான். வேலை செய்ய பத்துக் கைகள் வேண்டும். அந்தப் பணியிலும் செல்விக்கு வியர்த்துக் கொட்டியது. கடைசியாகப் பெரிய சைஸ் போர்வையை பால்கனி கட்டையில் தொங்கவிட்டுவிட்டு நிமிர்ந்து, வலது பக்கம் பார்த்தபோது... அப்பா வந்து கொண்டிருந்தார்.

"அப்பா." சந்தோஷ உச்சத்தில் செல்வி துள்ளலோடு திரும்பியதில், கீழே இருந்த பூந்தொட்டியைக் கவனிக்கவில்லை. கால் இடறியதில் அது நிலை தடுமாறி ஒரு பக்கமாக உருண்டு எதிர் சுவரில் முட்டி உடைந்தது. ஹாலில் டீவியும் ரிமோட்டுமாய் செல்வியையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த கிழவி டீவி சத்தத்துக்கும் மேலாக கத்த ஆரம்பிக்க அந்த வீடே களேபரம் ஆனது.

செல்வியின் சின்னப் பாதங்கள் ஈரமண்ணோடு இருந்த பூந்தொட்டியை மோதியதில் உயிரே போகிற மாதிரி வலித்தது. இரண்டு கைகளாலும் பாதத்தைப் பிடித்துக்கொண்டு முட்டியை அணைத்தபடி உட்கார்ந்துவிட்டாள்.

சுட்டைவிரல் நுனியில் இலேசாக ரத்தம் எட்டிப் பார்த்தது. தூக்கக் கலக்கத்தோடு புயல் மாதிரி வந்த சுமதி, மண் குவியலுக்கு மத்தியில் சோகமாய்ச் சரிந்து கிடந்த ரோஜாச் செடியைப் பார்த்தாள். சுறுசுறுவென ஆத்திரம் கொப்பளிக்க செல்வியின் கன்னத்தில் ஓங்கி அறைய, காலிங்பெல் ஒலித்தது.

ஆறுமுகத்துக்கு வரவேற்பே பிரமாதமாக இருந்தது. கிழவி ஓயாமல் கத்திக் கொண்டே இருந்தாள். சுமதி ஆறுமுகத்தை இழுக்காத குறையாக பால்கனிக்கு அழைத்துப் போனாள்.

"வாங்க, வந்து பாருங்க. உங்க பொண்ணு செஞ்சிருக்கும் அக்கிரமத்தை. கொஞ்சமாவது பொறுப்பு இருக்கா/ நேத்து ஒரு லிட்டர் நல்லெண்ணெயைக் கொட்டினாள். இன்னிக்கு ஒரு பூந் தொட்டி. போச்சு, பால்கனி முழுக்க மண்ணு."

முதலில் ஆறுமுகத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. அரண்டுபோய் நிற்கும் செல்வியைத் தேற்றுவதா, பொருள் நஷ்டத்தைச் சொல்லிப் புலம்பும் வீட்டுக்கார அம்மாவுக்குப் பதில் சொல்வதா என்று தெரியாமல் குழம்பினார்.

அவருக்கு பூந்தமல்லியில் உள்ள ஒரு ஃபாக்டரியில் வாட்ச்மேன் வேலை. அதன் முதலாளி பெரிய மனது பண்ணியதில் அவர் குடும்பம் ஒண்டுவதற்கு அங்கேயே இடம் கிடைத்தது. அதை வசிக்கும் இடம் என்று சொல்வதே கடினம். வெயில் காலத்தில் சுட்டுப் பொசுக்கும். மழைக் காலத்தில் நாலா பக்கமும் ஒழுகிக் கொட்டும். இந்த அழகில் அவர் மனைவி வடிவு ஆறு மாதமாக படுத்த படுக்கையாக இருக்கிறாள். என்ன வியாதி என்றே தெரியவில்லை. அவள் சம்பாத்தியமும் நின்று போனதில் பணக் கஷ்டத்தில் குடும்பம் நிலைதடுமாறியது. வேறு வழி இல்லாமல் கனத்த மனத்தோடுதான் பதிமூன்றே வயதான செல்வியை வீட்டு வேலைக்கு அனுப்பினார். செல்வி வண்டி மாடு மாதிரி முரண்டு பிடித்துக் கொண்டிருக்கிறாள். வேலைக்குச் சேர்த்துவிட்ட மூன்றே மாதத்தில் பத்து தடவைக்கு மேல் வந்து பஞ்சாயத்து செய்தாகிவிட்டது. நேற்று எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல போனில் பிழியப் பிழிய அழ, ஒரு தீர்மானத்தோடு அதிகாலையிலேயே புறப்பட்டு வந்தால்...

"இங்க பாருங்க ஆறுமுகம். போதும். பேசாம உங்க பொண்ணைக் கூட்டிக்கிட்டுப் போயிடுங்க. ரொம்ப தாங்க்ஸ். நான் வேற ஆள் பார்த்துக்கறேன். இவ கொடுக்கற டார்ச்சர்ல என்னால ஆபீஸ்ல நிம்மதியா வேலை பார்க்க முடியலை. நேத்திக்கு டயர்டா ஆபீஸ் விட்டு வீடு வந்தா... கிச்சன் முழுக்க எண்ணெய் கொட்டி... நாலு மணி நேரம் ஆச்சு, எல்லாத்தையும் சரி செய்ய. இவளால ஏற்படற நஷ்டம் இவளுக்குக் கொடுக்கப்போற சம்பளத்தை விட அதிகம். எத்தனை தடவை சொல்லியாச்சு? ஒழுங்கா வேலையைப் பாருன்னு... ஏதாவது அவசர வேலையா ஆள் தேடினா எங்கேயாவது ஒரு மூலையில நின்னு அழுதுக்கிட்டு இருப்பா. வேணாம்... போதும்... கூட்டிக் கிட்டுப் போங்க."

"அம்மா. கொஞ்சம் பொறுங்க. செல்வி சின்னப் பொண்ணு. அவ்வளவு விவரம் பத்தாது. நான்



மெலட்டூர் நடராஜன்



"இட்லி, வடை ஆர்டர் பண்ணிட்டு மெனுகார்ட் எதுக்குக் கேட்கறீங்க சார்?"
"ரொம்ப புழுக்கமாயிருக்கு. விசிறிக்கலாமேன்னுதான்."
- ஞா.ஞானமுத்து

இன்னிக்குத் தெளிவா எடுத்துச் சொல்லிடறேங்க. அரை மணி செல்விய வெளில கூட்டிக்கிட்டுப் போறேங்க. எல்லாம் சரியாயிடும். அம்மா. உங்க தயவாலதான் என் குடும்பத்துல அரை வயிறாவது சாப்பிட முடியுதுங்க. கொஞ்சம் தயவு செய்ங்க..."

ஒரு வழியாக செல்வியைப் பக்கத்தில் உள்ள பார்க்குக்கு அழைத்துப் போனார். பாவம், செல்வியால் நடக்கக் கூட முடியவில்லை. விந்தி விந்தித்தான் நடக்க முடிந்தது. மூன்றே மாதத்தில் உதிர்ந்து விழுந்த கருவேலங்குச்சி மாதிரி... ஆறுமுகத்துக்கு நெஞ்சு வலித்தது.

"என்னம்மா. உன்னால அங்க இருந்து வேலை செய்ய முடியலயா?"

செல்வியால் நேரடியாக அப்பாவைப் பார்க்க முடியவில்லை. "இல்லப்பா. என்னால அம்மாவையும் தம்பியையும் விட்டுட்டு இங்க என்னால இருக்க முடியல. அவங்க வீட்டு ஐயா குழந்தைகளோடு விளையாடுவாரு. உப்பு மூட்டை தூக்குவாரு. அதையெல்லாம் பார்க்கும்போது எனக்குத் தம்பி ஞாபகம் வருதுப்பா. அந்தக் கெழவி வேற ஏதாவது சொல்லிக்கிட்டே இருக்கு."

"செல்வி. இங்க பாரு. பொறுமையா இரு. உனக்குப் பதிமூணு வயசு ஆயிச்சு. இன்னமும் நீ சின்னப் புள்ள இல்லே. அம்மா சீக்காளியா படுத்திருக்கு. என் சம்பளமும் பத்தல. சின்னப் பயலுக்கு போன வாரம் ஒரேயடியா பேதியாகி கிழிச்சிப் போட்ட நார் மாதிரி கெடக்கு. நீயும் அங்க வந்திட்டா என்னால எப்படிம்மா சமாளிக்க முடியும்."

செல்விக்குப் பதில் சொல்ல வார்த்தைகள் வரவில்லை. மெல்லியதாகக் கண்ணீர் முட்டியது. "போப்பா. அந்தம்மா என்ன வாளில தண்ணி எடுத்தாரச் சொல்றாங்க. மூணு மாடி என்னால தூக்க முடியல. கையெல்லாம் காச்சுப் போவுது. மீந்து போனதெல்லாம் சாப்பிடக் கொடுக்கிறாங்கப்பா. அந்த குழந்தைங்க தப்பித் தவறி ஏதாவது இங்கக் கொடுத்திட்டா அந்தக் கிழவி கத்தி கூப்பாடு போடுது. அடிக்குது."

"அப்படியா. நான் தெளிவா சொல்லிட்டுப் போறேன். எதுவானாலும் எங்கிட்ட சொல்லுங்க. அடிக்காதிங்கன்னு. நீ புத்திசாலிப் பொண்ணு இல்லையா. நிலைமைக்கு ஏத்த மாதிரி நடந்துக்கம்மா. உன்னால முடியலைன்னா தைரியமா எடுத்துச் சொல்லிடு. பயப்படாத. சரியா."

செல்வி விசும்புவதை ஆறுமுகத்தால் கண்கொண்டு பார்க்க முடியவில்லை.

"இன்னும் மூணே மாசம்மா. மொதலாளி சம்பளத்தைக் கூட்டித் தரேன்னு சொல்லியிருக்காரு. பதினாலு வயசு ஆகட்டும். அந்த கம்பனிலேயே உனக்கும் ஏதாவது வேலை போட்டுத் தரேன்னு சொல்லியிருக்காரு. கொஞ்சம் பொறும்மா.'' சொல்லிக்கொண்டே வந்தவர் சட்டென கண் கலங்கி...

"என்ன கஷ்டம்மா. நம்ம பொழப்பு நாய்ப் பொழப்பு. வேண்டாம்மா. அடுத்த ஜன்மத்துலயாவது நீ கொஞ்சம் வசதியானவங்க குடும்பத்துல பொறந்து தொலை. என்ன பாவம் செஞ்சேனோ, உன்னை இப்படி வாட்டுது. நீ சம்பாதிச்சு நாங்க சோறு திங்கணும்கிறது... என்னை மன்னிச்சுடும்மா."

தன் நெஞ்சு வரை வளர்ந்திருந்த

செல்வியை அப்படியே சில நிமிடங்கள் மௌனத்துடன் அணைத்துக் கொண் டார் ஆறுமுகம். மனசு கசங்கிய காகிதம் மாதிரி ஆகிவிட்டது. கால்கள் துவண்டு உடம்பு முழுவதும் ஒரு ஆயாசம் இருந் தது.

வீட்டுக்குத் திரும்பி வந்ததும், குழந் தைகள் செல்வியைக் கண்டு மகிழ்ச்சியில் ஓலமிட்டன. கிழவி பேச்சற்று ஒரு விரோ தப் பார்வையுடன் பார்த்துக் கொண்டி ருந்தாள். ஆறுமுகம் கெஞ்சிக் கூத்தாடி வீட்டுக்கார அம்மாவைச் சம்மதிக்க வைத்துவிட்டார். செல்வி ஓடியாடி சகஜமாக வேலை செய்வதைப் பார்த்த திருப்தியோடு ஆறுமுகம் போனார். செல்வி பால்கனியிலிருந்து கையசைத் ததில் நம்பிக்கை தெரிந்தது.

சுமதி ஆபீஸ் போய்விட்டாள். கிழவி தூங்கப்போய்விட்டாள். குழந்தைகளைக் குளிப்பாட்ட வேண்டும். ஆளுக்கு ஒரு பிளாஸ்டிக் தொட்டியில் உட்கார்ந்து கொண்டு அட்டகாசம் செய்ய ஆரம் பித்தன. செல்விக்குச் சேகரோடு கிரா மத்து பம்ப் செட்டில் குளித்தது ஞாபகத் துக்கு வந்தது. ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் கொட்டமடிப்பார்கள். பெரிய குழந்தை தண்ணீரை வாரி சின்னதின் மேல் அடிக்கவும், அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் அது செல்வியின் பின்னால் ஒளிந்து கொண் டது. சேகருக்கு வலது காலை விட இடது கால் சற்று சிறியது. கொஞ்சம் இழுத்து இழுத்துத்தான் நடப்பான். ஆனாலும் துரத்தினால் ஓட்டமாய் ஓடுவான்.

அவளுக்குள் இருந்த குழந்தை குணம் அவளை மெல்ல மெல்ல ஆக்கிரமிக்க, செல்வி அழத் தொடங்கினாள். ஆனால் இந்த முறை ஒரு வித்தியாசம், யாருக்கும் தெரியாமல்.



''சே! என் மாமியாரோட அலம்பல் தாங்க முடியல...''

''ஏன் என்ன செஞ்சாங்க?''

''டாக்டர் அவங்களை வெயிட் தூக்கக் கூடாதுன்னு சொன்னதுக் காக, குக்கர் வெயிட்டைக் கூடத் தூக்க மாட்டேங்கறாங்க.''

- விஜயாரவி



''எதிரியும் நீங்களும் சமபலம் உடையவர்கள் மன்னா!''

''எப்படிச் சொல்கிறீர் மந்திரியாரே!''

''அவரும் புறமுதுகு காட்டிய போர்கள் பதினேழுதானாம்!''

- ஜோசப் காமராஜ்



''தலைவரோட 'தமிழ்ப்பற்று'க்கு ஒரு எல்லையே இல்லாம போயிடுச்சு!''

''எதனால இப்படிச் சொல்ற?''

''கம்பராமாயணம், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்றவற்றைத் தமிழில் மொழிபெயர்க்கச் சொல்லி உண்ணாவிரதம் இருக்கப் போறாராம்!''

- குட்டிபிரசன்னா

கல்லூரி வாசலிலும், பஸ் ஸ்டாப்பிலும் டைரக்டர்கள் சினிமா ஹீரோயின்கள் தேடியது அந்தக் காலம். ஆனால், இது இண்டர்நெட்யுகமல்லவா? தங்கள் ஆபீசில், கம்ப்யூட்டர் முன் உட்கார்ந்தபடியே இண்டர்நெட்டிலே வலை போட்டுத்தேடி, ஹீரோயினை முடிவு செய்து விடுகிறார்கள். அதைத்தான் தமது அடுத்த படமான 'வட்டாரத்தில்' செய்திருக்கிறார் இயக்குநர் சரண். அந்த ஹீரோயின் அனுஷ்கா.

"ஹீரோயின் கண்டெடுத்த கதை இருக்கட்டும், ஹீரோ



"ஆர்யாவுடன் என்ன

ஆர்யாவுடன் ஏதோ பிரச்னையாமே?" என்று நாம் தூண்டில் போட்டால், "எனக்கு எதையும் பாசிடிவ்வாகவே பார்க்கிற சுபாவம். எனவே, ஆர்யாவுடன் பிரச்னை என்று வந்த நியூஸ் கூட நல்ல விளம்பரம்தான்" என்றார் சரண்.

அதெல்லாம் சரி! என்ன பிரச்னை என்று வாயைத் திறக்கமாட்டேன் என்கிறீர்களே?

"பெரிசாய் ஒன்றுமில்லை. அவன் முதல் முறை பிறக்கிறபோது தாய்க்குவலி! இரண்டாம் முறை பிறக்கிறபோது அவனுக்கு வலி. மூன்றாம் முறை பிறக்கிறபோது அவனது எதிரிக்கு வலி. நடிப்புக்குத் தீனிபோடும் கேரக்டர். துடிப்பான இளம் ஹீரோவான ஆர்யா அந்த கேரக்டருக்கு மிகவும் பொருத்தமாக இருப்பார் என்று நினைத்து, அவரைக் கேட்டபோது சம்மதித்தார். அவரை நான் ஒப்பந்தம் பண்ணினேன். இதற்கிடையில் இயக்குநர் பாலாவின் படத்தில் நடிக்கும் வாய்ப்பு அவரைத் தேடி வந்தது. விருது பெறும் வித்தியாசமான படங்களின் இயக்குநரான பாலாவின் படத்தில் நடிக்கும் வாய்ப்பை ஆர்யா இழக்க விரும்பவில்லை. அதனால் சிறு குழப்பம். நடிகர் சங்க தயாரிப்பாளர், சங்க நிர்வாகிகள் பேசி சுமுகமாய் பிரச்னையைத் தீர்த்து வைத்துவிட்டார்கள். என் படத்தில் முதலில் ஒப்பந்தமானதால், எனது படத்தை முடித்துக் கொடுத்து விடுவார் ஆர்யா. இப்போது நானும், ஆர்யாவும் மிகவும் நெருங்கிய நண்பர்களாகிவிட்டோம்."

உங்கள் சொந்த கம்பெனியான ஜெமினி நிறுவனத்தில், லாரன்ஸ் ராகவேந்திராவை டைரக்டராக அறிமுகப்படுத்தப் போகிறீர்கள் போலிருக்கிறதே?

"ஆமாம்! பிரபுதேவாவைப் போலவே, டான்ஸ் மாஸ்டராக இருந்து, நடிகராகி, டைரக்டராகி இருப்பவர் லாரன்ஸ். அவரை தமிழில் நான் டான்சராக அறிமுகப்படுத்தினேன். அவர் இயக்கி, நடித்த

தெலுங்குப் படம் பிரமாதமான வெற்றி பெற்றது. எனவே அவரை வைத்து ஒரு படம் தயாரிக்க விரும்பினேன். 'சூப்பர் கதை ஒன்று சொல்லுங்கள்' என்றேன். வித்தியாசமான கோணத்தில் பிரமாதமாக ஒரு கதை சொல்லி, என்னை அசத்தி விட்டார். 'அட! இதுபோல பிரமாதமான ஒரு கதைக்கான ஐடியா, நமக்குத் தோணாமல் போச்சே!' என்று லாரன்ஸ் மீது இலேசாகப் பொறாமை வந்தது என்று கூட சொல்லலாம்.

படத்தின் ஒரு முக்கியமான கேரக்டரில், ராஜ்கிரண் நடிக்கிறார். தமிழ், தெலுங்கு என்று இரண்டு மொழிகளிலும் எடுக்கிறேன். படத்தின் பெயர் 'முனி.' "

உங்கள் படம் என்றால், கதைக்களமாக ஏதாவது ஒரு இடம் இருக்குமே! வட்டாரத்தில் என்ன இருக்கிறது?

"பர்மாபஜார் பின்புலத்தில் நடக்கிற ஆக்ஷன் கதைதான் 'வட்டாரம்'. வழக்கமாய், நெப்போலியன் தனது தோற்றத்தை மாற்றிக் கொள்ளமாட்டார். விருமாண்டிக்குப் பிறகு, நெப்போலியனுக்கு என் படத்தில் ஒரு புதிய கெட்-அப்."

டைரக்டர் சரணைவிட தயாரிப்பாளர் சரண் பயங்கர பிசிபோல இருக்கிறதே!

"ஆமாம்! இன்னும் பத்து வருடங்களில் தமிழ் நாட்டில், தியேட்டர்கள் பலமடங்கு ஆகப் போகின்றன. எல்லாமே ஐந்தாறு தியேட்டர்கள் ஒரே இடத்தில் அமைந்த மல்டிபிளக்ஸ் காம்பிளக்ஸ்களாக இருக்கும். அப்போது படங்களுக்கு நிறைய தேவை இருக்கும். ஒரு டைரக்டர் என்ற முறையில் என்னால் அதிகபட்சம் ஒன்றிரண்டு படங்கள்தானே பண்ண முடியும். தயாரிப்பாளர் என்றால் அந்தக் கட்டுப்பாடு கிடையாதே!

இன்னொரு விஷயம், இன்று ஏராளமான இளைய இயக்குநர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். எல்லாம் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள். ஷார்ப்பாகக் கதை சொல்கிறார்கள். நான் ஒரு டைரக்டராக மட்டும் இருந்தால், இளம் டைரக்டர்களை ஏக்கத்துடன், பொறாமையுடன், ஒருவித தாழ்வு மனப்பான்மையுடன் பார்க்கக் கூடும். தயாரிப்பாளரும் கூட என்றால், அவர்களை நமக்காக படம் பண்ணச் சொல்லலாமே என்ற எண்ணமே மேலோங்கி நிற்கும்.

இதற்கெல்லாம் மேலாக நடிகர், இயக்குநரைவிட, தயாரிப்பாளர் நீண்டகாலம் திரையுலகில் நிலைத்து நிற்க முடியும் என்பது எனது கருத்து."

பாரிஸில் பர்மா பஜார் பக்கத்தில் பூக்கடை இருந்ததால், அந்தப் பெயரிலும் ஒரு படம் எடுக்கிறீர்களாமே!

"ஆமாம்! இணை இயக்குநராக என்னிடம் பணியாற்றிய சத்திஷ் இயக்கத்தில் ஒரு படம் தயாரிக்கிறேன். அதன் டைட்டில்தான் பூக்கடை. கதை விவாதம் நடந்து கொண்டிருக்கிறது."

- எஸ். சந்திரமௌலி



• அனுஷ்கா



• ஆர்யா

பிரச்னை?"

- மனம் திறக்கிறார் சரண்

அம்மாவைப் போல் வருமா?


• சாய்ஜெயலட்சுமி


• ஸ்ரீநாத்


• நாகராஜன்


பத்து வருடங்களுக்கு முன்பு சென்னையில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டியின்போது தலைநகர் முழுக்க ஐந்து ஸ்டேடியங்களைக் கட்டி விளையாட்டு ஆர்வலர்களின் அபிமானத்தைப் பெற்றவர் ஜெயலலிதா. 'அம்மாவைப் போல் வருமா?' என்றொரு பேச்சு அத்லெட்டிக்ஸ் மத்தியில் எப்போதும் உண்டு. இருப்பினும் விளையாட்டுத் துறையில் காலகாலமாக நீடித்துவரும் பிரச்னைகளுக்கு கலைஞர் ஆட்சியிலாவது தீர்வு கிடைக்குமா என்கிற ஆவலோடு விளையாட்டு வட்டாரம் தற்போதைய ஆட்சியை உற்றுப் பார்த்து வருகிறது. கலைஞரால் இத்துறையில் மாற்றம் கொண்டுவர முடியுமா?

ஏராளமான சர்வதேச வீரர்களை உருவாக்கிய கோச் நாகராஜன் இது பற்றி நம்மிடம், "தேசிய அளவில் விளையாட்டுத்துறை கொள்கைகளில் அர்த்தம் கிடையாது. இது வீரர்களுடைய பெர்ஃபாமன்ஸைப் பெருமளவில் பாதிக்கிறது என்று பேச ஆரம்பித்தவர் தொடர்ந்து,

"தமிழ்நாட்டில் கடந்த பத்து வருடங்களாக போக்குவரத்து, மின்சாரத் துறை, மாநகராட்சி போன்ற அரசு அலுவலகங்களில் விளையாட்டு வீரர்களைப் பணிக்கு எடுத்துக் கொள்வதில்லை. இத்தனைக்கும் முன்பு யுனிவர்சிட்டி அளவில் ஜெயித்தவர்களுக்குக் கூட நல்ல வேலை கிடைத்திருக்கிறது. தி.மு.க தன் ஆட்சியில் ஏராளமான பேருக்கு அரசு வேலை தருவதாகக் கூறியுள்ளது. இதிலாவது தங்களுக்குரிய இடம் கிடைக்குமா என்று சாதனையாளர்கள் ஏங்குகின்றனர். அதேபோல தனியார் நிறுவனங்களிலும் விளையாட்டு வீரர்களுக்கென தனி கோட்டா ஒதுக்கலாமே" என்று ஒரு யோசனையை முன்வைத்தார்.

"ஒலிம்பிக்கில் தங்கம் வென்றால் தமிழக அரசு ஒரு கோடி பரிசு தருகிறது. ஆனால் தேசிய மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் ஜெயித்தால் அரசாங்கம் கண்டு கொள்வதேயில்லை. அதேபோல ஜூனியர் வீரர்கள் சர்வதேச அளவில் சாதித்துக் காட்டினாலும் எந்த ஊக்கமும் அரசாங்கத்திடமிருந்து கிடையாது. அடிமட்டத்திலிருந்து கைதூக்கி விட்டால்தானே எங்களாலும் மேலேறி வர முடியும்" என்று குறைபட்டுக் கொண்டனர் நாம் சந்தித்த ஏராளமான அத்லெட் வீரர்கள்.

"அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழுள்ள இருநூறுக்கும் மேற்பட்ட கல்லூரிகளில் எங்களுக்கென நாற்பது சீட்கள் மட்டுமே ஒதுக்கப்படுகின்றன. ஆனாலும் நன்கொடை முதற்கொண்டு எல்லாவிதமான கட்டணமும் இதர மாணவர்கள் போல நாங்களும் கட்டியாக வேண்டும்" என்று வீரர்கள் சோககீதம் பாடுகின்றனர். அரசு



இவ்விஷயத்தில் மேம்போக்காக இருந்தாலும் லயோலா, எம்.ஓ.பி, செயிண்ட் ஜோசப் போன்ற தனியார் கல்லூரிகள் விளையாட்டு வீரர்களுக்கென இலவசக் கல்வி, இருப்பிடம் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருகின்றன. ''ஒவ்வொரு போட்டிக்கும் செல்லும்போது பயண செலவு நிறைய ஆகுது. பணம் இல்லாட்டி ஆட்டத்துல கவனமே இருக்காது. நினைப்பெல்லாம் எப்படிச் செலவைச் சமாளிக்கப் போகிறோமோன்னு தான் இருக்கும். அரசு எங்களோட இந்த ஜீவாதாரப் பிரச்னையைத் தீர்த்தா எங்களால தமிழ்நாட்டுக்கு எவ்வளவோ பெருமை தேடித்தர முடியும்'' என்றார் தமிழ்நாட்டின் முன்னணி டென்னிஸ் வீராங்கனையான சாய் ஜெயலட்சுமி.

தமிழ்நாட்டில் தனியார் அகாதெமிகள் நிறைய உண்டு. இப்போதைக்கு அவர்களுடைய அவசியத் தேவை - விசாலமான ஒரு மைதானம். அரசு கல்லூரிகள் இவர்களுக்கு மைதானங்கள் ஒதுக்கத் தயங்குவதால் ஏற்படும் பிரச்னைகள் பல விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தப் பிரச்னையால் சென்ற வருடம் தமிழகத்தின் பல முன்னணி வீரர்கள் சென்னை பீச் மணலில் கால் கடுக்க பயிற்சி எடுத்த விநோதமும் நடந்திருக்கிறது.


''சிறந்த பயிற்சியாளர்களுக்கென்று துரோணாச்சாரியார் விருது மத்திய அரசு சார்பில் வழங்கப்படுகிறது. இதே பாணியில் முந்தைய ஆட்சியில் கோச்சுகளுக்கு விருது வழங்குவதாகவும் ஒரு லட்சம் பணமுடிப்பு தருவதாகவும் ஜீ.ஓ போடப்பட்டது. அதோடு சரி. பேச்சு மூச்சே காணோம்'' என்கின்றனர் பயிற்சியாளர்கள்.

பன்னிரண்டு வயதுக்குட்பட்ட செஸ் போட்டியில் உலக சாம்பியன் பட்டத்தை வென்ற ஸ்ரீநாத்துக்கு இதுவரைக்கும் எந்த ஸ்பான்ஸரும் கிடைக்கவில்லை. ''உலக சாம்பியன் பட்டம் வென்று பத்து மாதங்கள் ஆகியும் தமிழ்நாட்டில் அவனுக்கு உதவிட யாருமேயில்லை. நிலைமை இப்படியே போனால் விளையாட்டைப் புறந்தள்ளிவிட்டு படிப்பில் கவனம் செலுத்தவேண்டியதுதான்'' என்கிறார் ஸ்ரீநாத்தின் தந்தை நாராயணன். வெளிநாட்டு வீரர்களுக்கு ஒலிம்பிக் போட்டி நடக்கும் தினங்கள் அட்சயதிருதி நாளாகி விடுகிறதென்றால் அதற்கு காரணம் அந்நாட்டு அரசுகளின் ஊக்கமும், சலுகையும்தான். இங்கு அவ்வளவு தூரம் யாரும் ஆசைப்படுவதில்லை. அடிப்படை பிரச்னைகளை யாவது அரசு களைய வேண்டும் என்பது மட்டுமே பிரதான கோரிக்கை. இல்லாவிடில் பலரது கனவுகளைக் கலைத்த பாவம் அரசாங்கத்தின்மீதே விழும்.

- ச.ந. கண்ணன்

படங்கள்: ஸ்ரீஹரி

கலைஞர் கட்டாயம் செய்வார்!



விளையாட்டுத்துறை அமைச்சர் மைதீன்கான்: ''நான் இப்போதுதான் முதன்முறையாக அமைச்சராகியிருக்கிறேன். சிறிது அவகாசம் கொடுங்கள். வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட இது ஒன்றும் அ.தி.மு.க ஆட்சியல்ல. கிராமத்திலிருந்து நிறைய திறமையாளர்களை மீட்டெடுக்கப் போகிறோம். வேலை வாய்ப்பு களை உருவாக்கித் தரவுள்ளோம். கலைஞர் விளையாட்டுத்துறைக்கு என்னென்னச் செய்யப் போகிறார் என்பதை அனைவரும் பார்க்கத்தான் போகிறீர்கள்'' என்றார் ஆணித்தரமாக.

புது வீட்டைப் பார்த்து, ஊரே மூக்கின்மேல் விரல் வைத்தது.

"நேத்து வரைக்கும் என் வீடுதான் மத்த வீடுங்களைவிட பெருசுன்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். நீ என்னையும் மிஞ்சிட்டம்மா'' - என்று பாராட்டினார், ஆகப் பெரிய பணக்காரரான கந்தப்பன்.

அவர்தான் நிலத்தின் பேரில் லட்ச ரூபாய் கடன் கொடுத்தவர்.

கிரஹப்பிரவேசத்தை எளிமையாக முடித்து குடி போனார்கள்.

பழைய வீட்டிலிருந்த பொருட்களையெல்லாம் ஆளுக்கொன்றாகக் கொண்டு வந்து புது வீட்டில் வைத்தார்கள்.

பழைய வீட்டில் நிறைய இருப்பது போல் தெரிந்த பொருட்கள் புதிய, வீட்டுக்குள் வந்தபோது இருக்கும் இடம் தெரியாத அளவுக்குச் சிறிதாக தெரிந்தன.

இந்த வேலைகள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, ஜெகதா அதிரடியாய் அடுத்த வேலையில் இறங்கினாள்.

மூத்தவன் குணசேகருக்குப் பெண் தேடத் துவங்கினாள்.

அவள் மனசுக்குள் ஒரு கணக்கு இருந்தது.

என்னதான் மூன்று பிள்ளைகளும் தலா ஒரு லட்சத்துக்குப் பொறுப்பு எடுத்துக்குவாங்கனு சொல்லிட்டாலும் அது சாத்தியமில்லேன்னும் அவளுக்குத் தெரியும்.

பழ வியாபாரம் செய்து பெரியவன் சம்பாதிப்பதும், கடையில் வேலை செய்து இரண்டாமவன் சம்பாதிப்பதும் கணக்குப் பார்த்தால் ஒரு வருமானமே இல்லை. உப்பு புளிக்கு சரியாப் போகும். கடைசி பையன் தனியாகச் சம்பளம் எதுவும் வாங்குவதில்லை... விவசாயம்.

இப்போ ரெண்டு ஏக்கர்லயும் கரும்பு போட்டிருக்கு இன்னும் பத்து நாள்ல வெட்டுக்கு வரும்.

குறைஞ்சது முப்பதாயிரமாவது வரும். அதைக்கொண்டு, பெரியவனுக்குக் கல்யாணம் முடிப்பது. வரதட்சணையா வர்ற தொகையை வச்சு, அவனுக்கு ஒரு தொழிலை ஆரம்பிச்சுக் குடுக்கறது.

அந்த மாதிரியே மூணு பையன்களுக்கும் ஒரு வழி உண்டாக்கிடறது. ஆளுக்கொரு தொழில்னா சம்பாதனை நிறைய வரும். கடனைத் திரும்பிப் பார்க்கறதுக்குள்ள அடைச்சிடலாம்னு மனசுக்குள்ளயே கணக்குப் போட்டு வச்சிருந்தா.

''கரும்பு வெட்டினதும், என் குழந்தைக்கு ஒரு நகை பண்ணிப் போடுப்பா''னு அப்பன்கிட்ட கேட்டா கற்பகம்.

"நகையெல்லாம் பண்ணிகிட்டிருக்காப்லயா நிலமை இருக்குது...''ன்னாரு அவரு.

''குழந்தை பொறந்து...தாய் வீட்லருந்து குன்றிமணி தங்கம் போடலை. என்னை வேத்து ஆளா நினைச்சுதானே ஒதுக்கறீங்க. எல்லாம் நான் செய்த பாவம். நான் உங்களுக்குப் பாரமாய்ட்டேன். எனக்கொரு பங்கு கொடுத்துருங்க.. நான் எப்படியாவது பொழைச்சிக்கறேன்..." என்று புலம்ப ஆரம்பித்தாள்.

எல்லாரும் திட்டினாங்க அவளை.

''ஊரைச்சுத்தி கடன் வாங்கிட்டு உட்கார்ந்திருக்காங்க. நல்ல நேரம் பார்த்தியே பங்கு கேட்க... உனக்கேதுடி பங்கு...''

தெற்குத் தெரு

■ படுதலம் சுகுமாரன் ■

''சட்டமே இருக்குது. தாய்வீட்டு சொத்துல பொண்ணுக்குப் பங்கு இருக்குது...'' என்று சவடால் பேசினாள்.

''அப்படியானால் கடன்ல ஒரு பாகத்துக்குப் பொறுப்பேத்துக்கோ...''னு சொன்னாள் ஜெகதா...

எனக்கென்ன தலையெழுத்துனு வாய் மூடிக்கொண்டாள், அவள்.

கரும்புப் பணத்தை யாருக்குக் கொடுக்கறதுனு பேச்சு வந்தபோது ''ஒருத்தருக்கும் கொடுக்கப் போறதில்லே. பெரியவனுக்குக் கல்யாணம் முடிக்கப் போறேன்...''னு உறுதியா சொல்லிட்டாள் ஜெகதா.

பொண்ணு அமைஞ்சது.

பெரிய வீட்டையும், மனுஷான்களையும் பார்த்து மனசுக்குப் பிடிச்சுப் போய், பெண் வீட்டார் பத்து பவுன் நகை போடவும், இருபதாயிரம் பணம் கொடுக்கவும் ஒப்புக்கிட்டாங்க.

கரும்பு வெட்டின பணத்துல கல்யாணச் செலவு பண்ணினா.

முதல் காரியமா - கற்பகம் குழந்தைக்கு அரைபவுன் சங்கிலி போட்டாள்.

'வெவரமில்லாம பேசினாலும், அவளும் ஒரு குழந்தைக்குத் தாய். குழந்தை கழுத்துல ஒரு நகை போட்டுப் பார்க்கணுமின்னு ஆசையிருக்காதா'னு நினைச்சுச் செஞ்சா ஜெகதா.

''தம்பி கல்யாணத்துக்கு நூல் சேலை கட்டிக்கிட்டு நின்னா அசிங்கமாயிருக்கும். கம்மி விலைல ஒரு பட்டுச் சேலை எடுத்துக் கொடுங்க''ன்னா கற்பகம்.

''ஆமாண்டியம்மா... கும்பி கூழுக்கு அழுதுச்சாம், கொண்டை பூவுக்கு





அழுதுச்சாம்... மூஞ்சி குடுத்தா நக்கிப் பாக்கறயே... கல்யாணச் செலவு தலைக்கு மேல இருக்கு... எல்லா பணத்தையும் போட்டு உன்னைச் சிங்காரிக்கறேன்...''னு சொன்னதும் அவ முகத்தைத் தூக்கி வச்சுக்கிட்டா.

கல்யாணத்தை பெண் வீட்டார் தான் நடத்தினாங்கன்னா பிள்ளை வீட்டுச் சார்பா பொண்ணுக்குக் கூறைப்புடவை, தாலி, சம்பந்திகளுக்கு மரியாதை பண்ண டிரஸ்ஸு, மச்சானுக்கு பொரி மோதிரம், இந்தக் குடும்பத்துல எல்லார்க்கும் புதுத்துணி, போக்குவரத்துச் செலவு, கல்யாணப் பத்திரிகை, உள்ளூர் விருந்து அது இதுனு கைக்கு வந்த பணம் சூறைத் தேங்கா உடைச்சாப்ல சிதறிப்போச்சு.

எட்டு பேர் இருந்த வீட்ல ஒன்பதாவதாய் மூத்த மருமவ காலடி வச்சா.

ஜெகதா, தன் திட்டத்தின் அடுத்தபடியா கந்தப்பனைப் போய்ப் பார்த்தாள்.

''மாமா... எனக்கு எவ்வளவோ உதவி பண்ணியிருக்கே... இப்பவும் ஒரு யோசனையோடு வந்திருக்கறேன். கேட்டுட்டுப் பதில் சொல்லு... பெரியவனுக்கு... சீக்கிரமே வேலை வரும். படிச்சிருக்கான்னு சொல்லித்தான் சம்பந்தி வீட்ல சொல்லியிருக்கேன். அது வரும்போது வரட்டும்... அது வரைக்கும் அவன் சும்மாயிருக்க முடியாது. பழ வியாபாரம் கைகொடுக்கலே. அவனுக்கு ட்ரைவிங் தெரியும். அதனால டெம்போ வேன் ஒண்ணு வாங்கலாம்னு பாக்கறேன்'' என்றாள்.

''டெம்போவா...''

''ஆமாம் மாமா. நான் ஓரளவுக்கு ஆராய்ஞ்சு பார்த்துட்டேன். சந்தைக்குப் போறதுக்கு, காய்கறி, நெல்லு, கரும்புனு எந்தச் சுமையை கொண்டு போறதுக்கும் சுத்துப்பட்டு எட்டு ஊருல சரியான வசதி இல்லே. டெம்போ வாங்கி வாடகைக்கு ஓட்டினா... மாசத்துக்கு குறைஞ்சது... எல்லா செலவும் போக பத்தாயிரம் நிக்கும்...''

''அரசியல்வாதியைக் கல்யாணம் பண்ணினது தப்பாப் போச்சுடி!''

''என்ன விஷயம்?''

''சின்னதா எங்களுக்குள்ளே ஏதாவது பிரச்சினை வந்தாக்கூட நடுத்தெருவுல எனக்கு கொடும்பாவி கொளுத்துறார்!''

- ஜி.கே. நிதி

''எல்லாம் சரி... பணத்துக்கு என்ன பண்ணுவ...''

''நான் ஒரு தொகை ரெடி பண்றேன். நீ ஒரு பார்ட்னரா சேரு. பொதுவுல வண்டியெடுப்போம். என் பையன் ஓட்டட்டும். நீங்க கணக்கு வழக்கு பாருங்க...'' என்றாள்.

அந்த நேரம் கந்தப்பனின் பேரன் நாகேந்திரன் படிச்சுட்டு வேலையில்லாம இருந்தான்.

அவனுக்கு ஏதாவது செய்யணுமேனு நினைச்சுக்கிட்டிருந்தாரு அவரு...

ஜெகதா சொன்னதை ஆலோசிச்சாரு.

''சரிதாம்மா... உன் பங்கு பணத்தை ரெடி பண்ணு. உங்க வீட்டுல எல்லார்க்கும் இஷ்டந்தானானு கேட்டுக்க...''ன்னாரு.

''யாரை என்னா கேட்கறது. நான் தானே மாமா எல்லாம் இழுத்துப் போட்டுச் செய்யறவ என்னைத் தவிர ஒருத்தரும் ஜாமீன் நிக்கமாட்டாங்க...''

''அதுக்கில்லம்மா. வீடு கட்றதுக்கு பத்திரத்தை அடமானம் வச்சுக் கடன் வாங்கினே... அது வேற விஷயம். இது தொழில் பாரு. லாப நஷ்டம் ரெண்டும் வரலாம். அதனால எனக்குப் பழி வந்

திடக்கூடாது பொம்பளைய ஏமாத்திட்டானு ஒரு சொல் கூடாதுன்னு பாக்கறேன்...'' என்றவர், தானாகவே முத்தம்மா, பெருமாள் உட்பட சிலரிடம் கலந்துகொண்டார்.

''அப்படி ஏதாவது துணிஞ்சு பண்ணாத்தான நாலுகாசு சம்பாரிச்சு கடனை அடைக்க முடியும்னு ஜெகதா நினைக்கறா. அப்படித்தான் செய்ங்க...''னு முத்தம்மா சொல்லிச்சு.

''ஆத்தாளும் பொண்ணும் சரின்னதுக்கப்புறம் நான் சொல்றதுக்கு என்ன இருக்குனு...'' பெருமாள் பட்டும் படாம பதில் சொன்னான்.

நடப்பதொன்றும் அவனுக்குப் பிடிபடவில்லை.

ஒவ்வொரு சமயத்திலும் ஜெகதா அவனை மட்டம் தட்டி பேசிய பேச்சுகளால் அவள் எடுக்கும் எந்த முடிவிலும் அவன் குறுக்கிடுவதில்லையென்று ஒதுங்கியிருந்தான்.

அவன் கவலையெல்லாம் விவசாயம் மேல்தான்.

கரும்பு வெட்டினபின், என்ன பயிர் போடுவதுனு யோசனை. இப்ப உள்ள காளை மாடுகள் தளர்ந்து போச்சு. உழவு மாடு ஒரு ஜோடி புடிக்கணும். கிணத்துல தண்ணி இறங்கிப்போச்சு... இப்படித்தான் சிந்தனை. கூழோ கஞ்சியோ குடித்துவிட்டு, புகையிலைக் காம்பை அதக்கிக்கொண்டு வேலையைப் பார்த்துக்கொண்டு போய்க் கொண்டிருந்தான்.

ஜெகதா 'டெம்போ' வாங்கறான்னதும் ஊருக்குள் பரபரப்பு.

'இவளுக்கென்ன பணம் விளையுதா, நோட்டு அடிக்கிறாளா...' என்று ஒரு சாராரும்,

'பொம்மனாட்டியா இருந்துக்கிட்டு துணிச்சலா எல்லா வேலையும் இறங்குதப்பா' என்று நாலு பேரும்.

'ரொம்பத்தான் ஆடறா... எங்க போய் முடியுமோ' என்று சிலரும் பேசினாங்க.

ஊர் முன்போல் இல்லை.

பெருந்தலைகள் எல்லாம் தவறிப் போயிட்டுது. அந்த மாதிரிதான் மழையும். பயிர் பச்சையெல்லாம் சுருங்கி வருமானம் குறைஞ்சுது.

ஜனங்களுக்குப் பணத்தின் மேல் ஆசை வந்துவிட்டது. பால் கறந்து வித்தும், பூ வியாபாரம் பண்ணியும் காசு சேர்த்து பெண்கள் தங்கம் வாங்கி தாலியில் கோத்துக்கொண்டார்கள். ஐந்து வட்டிக்கும், பத்து வட்டிக்கும் கடன் கொடுத்து பணம் பெருக்கினார்கள். சாப்பாட்டைப் பாதியாகக் குறைத்துக் கொண்டு வாயை வயித்தைக் கட்டி பொருள் சேர்த்தார்கள். வந்த விருந்தை வாசலில் நிறுத்திப் பேசி அனுப்பினார்கள். பிச்சைக்காரன் தொண்டை வறளக் கத்திவிட்டு ஒன்றும் கிடைக்காமல் சபித்து விட்டுப் போனான்.

திருவிழா நடந்து மாமாங்கமாயிற்று.

தெருக்கூத்து மறந்துவிட்டது.

பொங்கலும், நோன்பும் சம்பிரதாயத்துக்குக் கடைபிடிக்கப்பட்டது.

எல்லோருக்குள்ளும் கள்ளம் புகுந்து கொண்டது.

இந்த மாதிரி சூழலில்தான் ஜெகதா இப்படியெல்லாம் பண்ணிக் கொண்டிருக்கிறாள்.

(தொடரும்)

''பஸ்ஸில் டிபன் பாக்ஸைத் திறந்து பார்த்தியே, ஏன்?''

''ஆபீசுக்குப் போறமா, இல்லை வீட்டுக்குப் போறமான்னு சந்தேகம். அதான் டிபன்பாக்ஸைத் திறந்து பார்த்தேன்.''

- ஆர். தங்கராஜ்



இறந்தவனுக்குத் திருமணம்!

ஜோர்டானில் உள்ள ஜர்கா எனும் பகுதியில் அந்த வீட்டுக்கு முன்னால் ஒரு சிறிய டெண்ட் அடிக்கப்பட்டிருந்தது. முகப்பில் ஒரு வரவேற்பு வாசகம். 'அபூ மூசாக் அல்ஜர்காவியின் திருமண நிகழ்ச்சி.'



வரிசையாகப் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் நீண்ட தாடியும், ஆப்கானிய சல்வார் கமீஸும் அணிந்த பலர் அமர்ந்திருந்தனர். இருப்பதிலேயே அதிக வயதானவர் போல தோற்றமளித்த ஒருவர் ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துப் பிரித்து சில பக்கங்களை வாசிக்கிறார். அனைவரும் மௌனமாகத் தலையை கவிழ்த்துக்கொண்டு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சிலர் மொபைல் போனை உயர்த்திப் பிடித்து அந்தத் தாடிக்காரர் பேசுவதைப் பதிவு செய்கிறார்கள்.

ஷேக் ஜரா என்பவன் திடீரென்று தன் குரலை உயர்த்திக் கத்துகிறான். 'ஒரு முஜாஹித் இறந்துபோனால், அவனது இடத்தை இட்டு நிரப்ப நூறு பேர் தோன்றுவார்கள். யாரும் கவலைப்பட வேண்டாம்!'

ஜர்காவியாவின் இரண்டு சகோதரர்களும் அருகருகே அமர்ந்திருக்கிறார்கள். ஒரு ஒல்லி மனிதன் அனைவருக்கும் காபி கொண்டு வந்து கொடுக்கிறான். ஒரு பொடியன் 'அஸ்லாம் அலைக்கும்!' என்கிறான். இரண்டு சகோதரர்களும் அந்தப் பொடியனை இழுத்து அவன் கன்னத்தில் முத்தம் இடுகிறார்கள்.

முகம்மது என்பவன் சொல்கிறான். 'கடவுள் எப்போதும் ஜர்காவியுடன் இருப்பார். அவன் எதை விரும்பினானோ அதைக் கடவுள் அளித்துவிட்டார்!'

ஜோர்டான் அரசாங்கத்தின் மீது அனைவருக்கும் கோபம். அவ்வப்போது சத்தம் போட்டுத் திட்டிக் கொண்டிருந்தார்கள். 'அதெப்படி ஜர்காவியாவைத் தீவிரவாதி என்று அழைக்கலாம்?


தாடியைச் சொறிந்து கொண்டிருந்த மற்றொருவன் குறுக்கிட்டான். 'ஜர்காவியாவைக் காட்டிக்கொடுத்தது ஜோர்டானியன்தான். அவன் மட்டும் என் கையில் சிக்கினால் அவனைத் தொலைத்துவிடுவேன். உலகின் எந்த மூலையில் அவன் இருந்தாலும் சரி, புஷ்ஷின் மடி மீது அவன் உட்கார்ந்துகொண்டிருந்தாலும் சரி. அவன் தொலைந்தான்.'

அபூ மூசாக் அல் ஜர்காவியின் திருமண வைபவம் இனிதே நிறைவுறுகிறது. அது சரி யார் இந்த ஜர்காவி? அல் காயிதாவின் ஈராக் கிளையில் தளபதியாக இருந்தவன். சென்ற வாரம்தான் அமெரிக்க வீரர்கள் அவனைச் சுட்டுக் கொன்றனர். பிறகு எப்படி அவனுக்குத் திருமணம் செய்கிறார்கள்? அந்தத் தாடிக்காரன் சொல்வதைக் கேளுங்கள். 'ஒரு மெய்யான வீரனுக்கு இறுதிச் சடங்குகள் செய்யக்கூடாது. திருமணம்தான் செய்ய வேண்டும்.'

- மருதன்

ஒருபக்கம்

தஞ்சை பரத்வாஜ்



* படம்: ஸ்ரீஹரி

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம்: கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். குடும்ப வாழ்வு நன்மை தரும். புதிய முயற்சியால் அனுகூலம் ஏற்படும். வீடு வாங்க ஏற்ற காலம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். பணக்கஷ்டம் இருக்காது. குழந்தைகள் வழியில் சுபகாரியம் நடக்கும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் கைகூடும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வழக்கு வெற்றி அளிக்கும். மேல்நாடு செல்லும் வாய்ப்பு வந்து அணுகும். மாணவ-மாணவிகள் கல்வியில் நல்ல முன்னேற்றம் அடைவார்கள். வாகன யோகம் ஏற்படும். வாக்கு, நாணயம் காப்பாற்றப்படும். சனிக்கிழமைதோறும் குஷ்டரோகிகளுக்குத் தானம் செய்ய சனி பீடை விலகும்.

ரிஷபம்: மனத்தில் உற்சாகம் கிட்டும். எதிரிகள் தொல்லை விலகும். உடல்நிலையில் சற்று நலிவு இருக்கும். பூர்வீகச்சொத்து விற்றுப் போகும். நண்பர்/கூட்டாளிகள் விலகிப் போவார்கள். வராத பணம் கைக்கு வரும். வழக்கு வியாஜ்யம் வெற்றி கொள்ளும். குழந்தைகள் பற்றிய மனக்கவலை போகும். உத்தியோகத்தில் இடமாற்றம் ரெடி. வியாபாரத்தில் சற்று முற்போக்கான சூழ்நிலை தெரியும். செலவுகள் சுபமானதாக இருக்கும். கணவன் - மனைவி விட்டுக் கொடுத்துப்போவது சாலச் சிறந்தது. மாணவ - மாணவியர்கள் விரும்பிய கல்வியில் சேருவார்கள். மனக் குழப்பம் விலகும். பணக்கஷ்டம் வராது. வியாழக்கிழமைதோறும் தட்சிணாமூர்த்தி சுவாமி வழிபாடு செய்யவும். ராகு,கேதுவுக்கு விளக்கு ஏற்றவும்.

மிதுனம்: மன சந்தோஷமான வாரம். புதிய வேலை வாய்ப்புக் கிட்டும். தாயின் உடல்நிலை சற்றுப் பாதிக்கும். எண்ணிய எண்ணங்கள் யாவும் ஈடேறும். தனம், வாக்கு, கல்வி நன்றாக இருக்கும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் தீரும். திருமணக் காரியம் நடக்கும். பணக்கஷ்டம் விலகும். புதிய வீடு வாங்க நேரிடும். நண்பர்/ உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். மன உளைச்சல் தீரும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தை பாக்கியம் கிட்டும். வாக்குவாதம் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குழந்தைகளால் அனுகூலம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல திருப்பம் ஏற்படும். ராகு, கேது வழிபாடு நற்பலனை அளிக்கும்.

கடகம்: தெய்வ சங்கல்பம் கிட்டும். வெளியூர்ப் பிரயாணம் வரும். சாதுக்கள் தரிசனம் கிட்டும். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். மனசஞ்சலம் போகும். குழந்தைகளால் அனுகூலம் ஏற்படும். சுபநிகழ்ச்சி கைகூடும். மாணவ - மாணவிகள் ஆசைப்பட்ட மாதிரி கல்வியில் சேருவார்கள். உடல்நிலை பாதிக்காது. குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். நண்பர்களால் ஆதாயம் கிட்டும். புண்ணிய ஸ்தலங்கள் செல்வார்கள். வழக்கு வெற்றி அளிக்கும். சிலருக்கு உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். தூரதேச அழைப்புகள் கிட்டும். பத்திரிகைகளில் நற்பெயர் வரும். சனி,

18.6.2006 முதல் 24.6.2006 வரை

பரத்வாஜ்...

என் பேத்திக்கு திருமணம் எப்போது?

- பழ. அண்ணாமலை, மன்னார்குடி

உங்கள் பேத்திக்கு 2006-ல் திருமணம் முடியும். வெளிநாட்டில் வேலை செய்யும் வரன் அமையும். சர்ப்பதோஷம் உள்ள ஜாதகம் சேர்க்கவும்.

என் தங்கைக்கு எப்போது குழந்தை பாக்கியம் கிடைக்கும்? **- லட்சுமி, திருச்சி**

உங்கள் தங்கை ஜாதகம், அவள் கணவர் ஜாதகம் இரண்டையும் ஆராய்ந்து பார்த்தால் காலதாமதமான குழந்தை வளரும் என்று அதில் சொல்கிறது. ஆகையால் அவர் ஜாதகப்படி 2007-ல் குழந்தை பிறக்கும்.

என் அண்ணன் மகள் சுபாஷினியின் திரு

குரு வழிபாடு நற்பலனை அளிக்கும்.

சிம்மம்: வாக்குவாதம் தவிர்க்கவும். கணவன் - மனைவிக்குள் அனுசரணை தேவை. வண்டி வாகனத்தில் கவனமாகச் செல்லவும். உணவுக் கட்டுப்பாடு அவசியம். கைப்பொருள் மீது கவனம் செலுத்தவும். யாரிடமும் அதிகம் பேச வேண்டாம். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. சிலருக்கு வேலையில் பளு அதிகரிக்கும். வீட்டில் இருக்கும் நேரம் குறைவாக இருக்கும். இடமாற்றம் ஏற்படும். சுபகாரியத் தடை வரும். உடல்நிலையில் கவனம் செலுத்தவும். வியாபாரத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும். எதிலும் தாமதமாக வெற்றியை அளிக்கும். ராகு, கேது, குரு, சனி வழிபாடு செய்வது நல்லது.

கன்னி: தனம், வாக்கு, கல்வி மேலோங்கும். கணவன் - மனைவிக்குள் அனுசரணை தேவை. கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். புதிய வீடு/வாகனம் வாங்க நல்ல காலம். குழந்தைகளால் மன சந்தோஷம் ஏற்படும். மாணவ - மாணவியர் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். வெளியூர்ப் பிரயாணம் வரும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. பொருளாதாரக் கஷ்டம் விலகும். நண்பர்/உறவினர் மூலம் அனுகூலம் ஏற்படும். உத்தியோகத்தில் அபிவிருத்தி ஏற்படும். ராகு, கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

துலாம்: வழக்கு, வியாஜ்ஜியம் வெற்றி அளிக்கும். தீர்க்க முடியாத சிக்கல்கள் தீர்ந்துவிடும். சுபகாரியம் கைகூடும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். மன சலனம் தீரும். பணக்கஷ்டம் ஏற்படாது. உடல் ஆரோக்கியம் பாதிக்காது. நண்பர்/ உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். வேலைமாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் தெரியும். குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். புதிய முயற்சிகளால் அனுகூலம் ஏற்படும். மாணவ - மாணவியர் விரும்பிய கல்வியை அடைவார்கள். புதிய வாகனம் வாங்கலாம். குரு, சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

விருச்சிகம்: செல்வாக்கு பெற்ற வாரம். வாக்கு, தனம், கல்வி மேலோங்கும். திருமணக் காரியம் கைகூடும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குழந்தைகள் பற்றின மனக்கவலை தீரும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். நெருங்கிய நண்பர் விலகிச் செல்வார்கள். கூட்டுத் தொழில் செய்பவரின் கூட்டாளிகளுக்கு வீடுமாற்றம் ஏற்படும். சிலருக்கு வேலை மாற்றம் ஏற்படும். கணவன்- மனைவி உறவு நற்பலனைத் தரும். மாணவ- மாணவியர் கல்வியில் முன்னேற்றம் காண்பர். பொருளாதாரக் கஷ்டம் இருக்கும். வியாபாரத்தில் நல்ல லாபம் காணும். நீண்ட தூரப் பிரயாணம் பிரயாசைப்படாமல் வரும். ராகு, கேது, குரு வழிபாடு நற்பலனை அளிக்கும்.

தனுசு: திருமணம் நடக்கும். வித்தையில் மேன்மை ஏற்படும். செல

வுகள் கட்டுக்கடங்கி இருக்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். தாயின் உடல் நிலையில் சற்று நலிவு ஏற்படும். குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நண்பர்கள் இடம் மாறிச் செல்வார்கள். குழந்தைப் பேறு கிட்டும். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். வழக்கு வியாஜ்யம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல லாபம் காணும். பணக்கஷ்டம் வராது. கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். வேலைப் பளு அதிகரிக்கும். புதிய தொழில் துவங்க நல்ல காலம். வீடு/வாகனம் வாங்க நல்ல தருணம். ராகு,கேது,சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

மகரம்: சிறப்பான வாரம். எண்ணங்கள் யாவும் ஈடேறும். பொருளாதாரக் கஷ்டம் விலகும். கொடுக்கல் வாங்கல் நற்பலனைத் தரும். தீரா பிரச்னைகள் தீர்ந்துவிடும். உடல்நிலை பாதிக்காது. குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். சுப காரியம் நன்றாக நடக்கும். சுபமான செலவுகள் ஏற்படும். குழந்தைகள் மூலம் சந்தோஷ செய்திகள் ஏற்படும். உத்தியோகத்தில் இடபெயர்ச்சி ஏற்படும். தூரதேச அழைப்புகள் வரும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வந்து அனுகும். தெய்வ அனுகூலம் ஏற்படும். புண்ணிய ஸ்தலம் சென்று சாதுக்கள் தரிசனம் செய்ய நேரிடும். திருமணத் தடை விலகும். குரு, சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

கும்பம்: மன உளைச்சல் தீரும். யாரிடமும் வாக்கு வாதம் செய்யாமல் விட்டுக் கொடுத்துப் போகவும். வீட்டைப் பார்க்க நேரம் இருக்காது. வேலைப் பளு ஜாஸ்தி ஆகும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். தடை விலகி திருமணம் கைகூடும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். நண்பர்/ உறவினர்களிடம் மனக்கசப்பு ஏற்படும். வியாபாரத்தில் சற்று மேன்மையான கவனம் தேவை. கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வீடு/வாகனம் வாங்க நல்ல தருணம். பணக்கஷ்டம் வராது. ராகு,கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

மீனம்: மனசலனம் தீர புதிய முயற்சி கைகொடுக்கும். செலவுகள் பயனுள்ளதாக இருக்கும். எதிர்ப்பு, தொல்லை விலகும். மாணவ- மாணவியர் படிப்பில் முன்னேற்றம் அடைவார்கள். வாக்கு, நாணயம் காப்பாற்றப்படும். பணக்கஷ்டம் தீரும். உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பதவி உயர்வு, பணி உயர்வு ஏற்படும். கணவன்-மனைவிக்குள் அனுசரணை தேவை. குழந்தைகளால் மன சந்தோஷம் கிட்டும். வெளியூர்ப் பிரயாணம் செய்ய நேரிடும். நீண்ட கால கனவுகள் நிறைவேறும். மறைமுக எதிர்ப்பு இருக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். நண்பர்/உறவினர்களால் ஆதாயம் கிட்டும். திருமணம் தடை விலகித் திருமணம் கைகூடும். ராகு, கேது, குரு, சனி வழிபாடு செய்து வர நற்பலனைத் தரும்.

...பதில்கள்

மணம் எப்போது அமையும்?

- என். பாலகிருஷ்ணன், மதுரை

தங்கள் சகோதரர் பெண்ணுக்கு 2006 பத்தாவது மாதத்துக்கு மேல் திருமணம் கைகூடும். சர்ப்ப தோஷம் உள்ள ஜாதகத்தைச் சேர்க்கவும். பரிகாரம் வேண்டாம்.

என் மகனின் எதிர்காலம் எப்படி? திருமணம் எப்போது?

- உமா சுந்தராஜீ, பெங்களூர்

பையன் ஜாதகப்படி சந்திர தசை நடக்கிறது. 2006-ல் திருமணம் கைகூடும். வெளிநாட்டு வேலை நற்பலனைத் தரும்.





ரொனால்டோ
–ரொனால்டினோ
போஸ்டர்

சிறுகதைப்
போட்டி
முடிவு



மேஜிக் மோடோவின் ரகசியங்கள்!

– சுவாரசியமான கதை


1000/– ரூபாய்
பரிசுப் போட்டி

கோகுலம்

ஜீலை 2006 ரூ.6/-மட்டுமே

குழந்தைகளின் குதூகலம்!

சேனல்



'ஓ' போடுங்க!

'நிஜத்தில் 'கோலங்கள்' கங்காவுக்கு நேரெதிராக அத்தனை மென்மையாக இருக்கிறார் சந்த்ரா லக்ஷ்மண். நமது கேள்விகளை உள்வாங்கிக் கொண்டு ஒரு தாளில் தன்னைப் பற்றி பளிச்சென்று எழுதித் தந்துவிட்டார்! என்னதான் சொல்லியிருக்கிறார் பார்ப்போமே...!

"அட! பரவாயில்லை. என்னை அடையாளம் கண்டுபிடிச்சுட்டீங்களே! ஆமாம், நான் கங்காதான்! ஆனா வீட்ல அப்படிக் கூப்பிட மாட்டாங்க. 'சந்த்ரா'னுதான் கூப்பிடுவார் லக்ஷ்மன். அது யாரு லக்ஷ்மன்னுதானே கேட்கறீங்க, என் அப்பா.

நான் பிறந்தது கேரளாவாம். அப்பாதான் சொன்னாரு. படிச்சதெல்லாம் சென்னைலதான். எங்கே என் வயசென்ன சொல்லுங்க பார்ப்போம். என்னது பதினெட்டா...? பெண்ணைவிட மோசமா பொய் சொல்றீங்க. நானே சொல்லிடட்டுமா...? என்னது சொல்ல மாட்டேனா? யாருங்க அது? இப்ப சொல்றேன் கேட்டுக்குங்க. இருபத்தியிரண்டு வயசாவுது. ஒரு பொண்ணு தைரியமா வயசைச் சொல்லிருக்கேன், என்னங்க ஒருத்தரும் 'ஓ' போடக் காணோம்.

படிச்சது ஹோட்டல் மேனேஜ்மெண்ட். நடிச்சது அஞ்சு மலையாளப் படங்கள்ல. பிருத்திவிராஜோட நடிச்ச 'ஸ்டாப் வயலட்ஸ்', மம்முட்டியோட நடிச்ச 'சக்ரம்' ரெண்டும் எனக்குப் பிடிச்ச படங்கள்னு உங்களுக்குத் தெரிஞ்சிருந்தா நிச்சயமா நீங்க என்னோட ரசிகரா இருக்கணும்.

வீட்ல நான் 'கோலங்கள்' கங்கா மாதிரி இடையாது. வேணா எங்கப்பா அம்மாட்ட கேளுங்க. கூடம் ஏத்தி, அணைச்சுச் சொல்வாங்க. அவங்க வார்த்தையைத் தட்டினதே இல்லை. ஒரே பொண்ணு. ரொம்ப செல்லம்.முக்கியமா அப்பா செல்லம். என் அப்பா அம்மா சொல்ற பையனுக்குத்தான் கழுத்தை நீட்டுவேன். காதல் கல்யாணம்லாம் நமக்கு ஆகாதுங்க அதேபோல கட்டிக்கப் போறவர் 'அப்படியிருக்கணும்... இப்படியிருக்கணும்னு.... கண்டிஷன்லாம் நிறைய போட மாட்டேன். ஆனா, அவர் விருப்பப்பட்டா நடிக்கறதைக்கூட நிறுத்திக்கத் தயாராயிருக்கேன்.

எனக்குனு ஒரு பெரிய ஆசை இருக்கு. அதை உங்ககிட்ட மட்டுந்தான் சொல்றேன். யார்கிட்டயும் சொல்லிடாதீங்க. அட, காதை கிட்ட கொண்டுவாங்க. ஆமாங்க சினிமா இயக்குநராகணும். அதுக்காகத்தான் இப்ப பயிற்சி எடுத்துட்டிருக்கேன்."

- மனோன்மனோ

படம்: பொள்ளாச்சி சுந்தரம்

கோலங்கள் 'கங்கா'

வேலைக்கு ரோபோ தேவை!

PCO

காலைல அவசர அவசரமா வீட்டை விட்டுக் கிளம்பி வந்துடுவோம். ஆனா டிரெயினுக்கு டிக்கெட் எடுக்க ஒரு பெரிய க்யூ நிக்கும். டிக்கெட்டை எடுத்துட்டுப் போறதுக்குள்ள டிரெயின் ஃப்ளாட்பாரத்திலிருந்து 'பை பை' சொல்லிட்டுப் போய்க்கிட்டே இருக்கும். இதை சென்னை மக்கள் பலர் அனுபவிச்சிக்கிட்டிருப்பாங்க! இப்போதைக்கு இதுக்குத் தீர்வு காணுற மாதிரி, சென்னைல உள்ள 19 புறநகர் ரயில் நிலையங்களில துட்டுப் போட்டா டிக்கெட் கொடுக்குற ஆட்டோமெடிக் எந்திரங்களை வைக்கப் போறாங்களாம். அஞ்சு ரூபாய், ஒரு ரூபாய் நாணயங்களை உபயோகிச்சு டிக்கெட்டை வாங்கிக்கலாம். எட்டு ரூபாய் டிக்கெட்டுக்கு, ரெண்டு அஞ்சு ரூபாய் நாணயத்தைப் போட்டா மீதி இரண்டு ரூபாய் வந்துருமாம். பத்து நாளைக்கு முன்னாலேயே சீசன் டிக்கெட் இதுல புதுப்பிச்சிக்கலாமாம். உஸ்ஸ்... அப்பாடா இனிமே வெட்டியா க்யூல நிக்க வேண்டாமுன்னு நெறைய பயணிகள் பெருமூச்சு விடுறாங்க. அதனால இது தென்னக ரயில்வேயோட சாதனைதான்.


STD

போர் விமானியா ஆகறதுதான் நம்ம அப்துல் கலாமோட கனவா இருந்ததாம். அந்தப் பழைய கனவை, போன வாரம் புனேவுல, சுகோய் - 30 ரக போர் விமானத்தில் ஏறிப் பறந்தது மூலமா நிறைவேத்திக்கிட்டாரு கலாம். இந்த விமானம் ஒலியைவிட வேகமா பறக்கக்கூடியது. விமானத்துல சும்மா ஏறி உட்கார்ந்துக்கிட்டு வராம, அஞ்சு நிமிஷத்துக்கு மேலே ஓட்டவும் செஞ்சிருக்காரு. போர் விமானத்துல பறந்த முதல் ஜனாதிபதி கலாம்தான். பிப்ரவரி மாசம் நீர்மூழ்கிக் கப்பல்ல போய் அசத்துனாரு. இப்போ போர் விமானம், அடுத்தது என்ன சாதனை?

ISD

ஜப்பானியர்கள் இப்போ புதுசா கண்டுபிடிச்சிருக்கிற பேசும் கியோமரி ரோபோவை கடைகள்ல சேல்ஸ்மேன்/சேல்ஸ்வுமனாப் போடலாமாம். கடைக்கு வெளியே யிருந்து 'வாங்கய்யா வாங்கம்மா'ன்னு கஸ்டமர்களைக் கூவி அழைக்குமாம். அவங்களுக்கு என்ன பொருள் தேவையோ அது இருக்குற இடத்துக்கு அழைச்சுட்டுப் போகுமாம். கஸ்டமர்ஸ் பேரம் பேசுனா, பதிலுக்குப் பேசி சாமர்த்தியமா விலையைக் குறைக்காம வியாபாரம் பண்ணிக் கொடுக்குமாம். இனி, ஜப்பான் கடைவாசலில 'வேலைக்கு ரோபோ தேவை'ன்னுதான் போர்டு தொங்கும்!

- ஷிவ்





கொள்ளுவதும் தள்ளுவதும்!

ஒன்றைக் கொள்ளுவதற்காகச் செய்யும் முயற்சியில் கஷ்டம்; அதை நமக்கென்று (வைத்துக்) கொண்டிருப்பதிலேயே எத்தனையோ கஷ்டம்; அது கைவிட்டுப் போனாலும் கஷ்டம். கொள்ளுகிறதால் ஏற்படும் இந்தக் கஷ்டங்களோடேயே - கைகோத்துக் கொண்டு, தள்ளுவதால் ஏற்படும் அநேக கஷ்டங்களும் சேருகின்றன. எந்தக் காரியமானாலும் ஒன்றைக் கொள்ளுவது (ஸம்பாதிப்பது), இன்னொன்றைத் தள்ளுவது (விலக்குவது) இரண்டும் சேர்ந்து சேர்ந்தே வரும். இல்லாததைக் கொண்டு வர வேண்டும்; வேண்டாமென்பதைத் தள்ள வேண்டும். உடம்பு நன்றாயிருக்கச் சாப்பிடவும் வேண்டும், விஸர்ஜனம் பண்ணவும் வேண்டும் என்றிருக்கிற மாதிரிதான். போக்கிரி வேலைக் காரனைத் தள்ள வேண்டும்; நல்ல வேலைக்காரனைக் கொண்டு வர வேண்டும். சத்ருக் களைப் போக்க வேண்டும்; மித்ரர்களை அடைய வேண்டும். பணத்தைக் கொண்டு வர வேண்டுமென்றால், அந்த முயற்சிக்கு இடையூறாக வருகிற எல்லாவற்றையும் தள்ள வேண்டும். எல்லா ஆசைக்கும் இப்படியே.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

அருள்வாக்கு

'மயில் வாகனன் மற்றும் கதைகள்' சிறுகதைத் தொகுப்பு மூலம் இலக்கிய வட்டாரத்தில் அறியப்பட்டவர் அஜயன் பாலா. 'சித்திரம் பேசுதடி' படத்தில் குடிகார தாமஸ் கேரக்டரில் வந்து ரசிகர்களின் பரவலான கவனத்தைப் பெற்றவர். இவருக்கு, எதிர்காலத்தில் இயக்குநராகும் விருப்பமும் இருக்கிறது. 'கிழக்கு கடற்கரைச் சாலை' படத்திலிருந்து ஸ்ரீகாந்த் - பாவனா புகைப்படத்தைக் கொடுத்து, ஒரு காதல் காட்சியை அழுத்தமாக வரைந்து தரச் சொல்லி அஜயனைக் கேட்டோம். அவரின் கைவண்ணம் கீழே...



• அஜயன் பாலா

"ப்ளீஸ்... என்னைப் புரிஞ்சுக்க...!"

ஈசன்: இன்னும் எவ்வளவு நேரம்தான் இப்படியே பேசாம இருக்கப் போறே...

சாரு எதுவும் பேசாமல் மனசுக்குள் சிரித்தபடி எங்கேயோ தொலைவில் பார்ப்பதுபோல் கால்களை அசைத்துக்கொண்டே அமர்ந்திருந்தாள்.

ஈசனுக்கு அவளை முதன்முறையாக இத்தனை நெருக்கத்தில் பார்ப்பதே சந்தோஷமாக இருந்தது. இந்த இரண்டு வருடத்தில் தன்னை அவள் இப்போதுதான் முதன்முறையாகத் தனியாகப் பேச அனுமதித்திருக்கிறாள்.

ஈசன்: இரண்டு வருஷமா நீயும் என்னைக் காதலிச்சிருக்கேன்னு தெரியறப்போ எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா.

என்னைத் தனியா வரச் சொல்லிட்டு நீ பாட்டுக்கு இப்படி கல்லுளி மங்கி மாதிரி சிரிச்சுக்கிட்டிருக்கே. எதையாவது பேசு சாரு. இல்லை நான் இப்பவே எழுந்து போயிடுவேன்...

அவள் 'போ' என்பது போல் இப்போதும் திரும்பிப் பார்க்காமல் மனசுக்குள் சிரித்தபடி தலையசைக்கிறாள். அப்போது பறவைகளின் சப்தம் கேட்க அவற்றை உற்றுக் கேட்பதுபோல் சாரு அப்படியும் இப்படியுமாகத் திரும்பிப் பார்க்கிறாள்.

ஈசன்: தோ பார் சாரு இன்னும் ரெண்டு நிமிஷம்தான் இருக்கு. இனிமே காலேஜ்லயும் பார்க்க முடியாது. ப்ராஜக்ட்டும் சப்மிட் பண்ணியாச்சு. இன்னும் கொஞ்ச நேரத்துல எல்லாரும் இங்க வந்துடுவாங்க. அதுக்கப்புறம் இந்தத் தனிமை... இந்த அமைதி... நம்மை முழுசா வெளிப்படுத்திக்க ஒரு சந்தர்ப்பம் எதுவும் கிடைக்காது. நெறைய்ய பேச வேண்டியிருக்கு ப்ளீஸ்... என்னைப் புரிஞ்சுக்க...

சாரு இப்போதும் அமைதியாக

இருந்தான். கண்களில் ஒருவித அமைதி. யோசிப்பதுபோல் கால்கள் அசைப்பதை நிறுத்திருந்தான். அதுவரையான கொலுசுச் சத்தமும் நின்றது.

ஈசன்: அப்ப உனக்கு என் மேல லவ் இல்லை வெறுமனே என்னை வரவழைச்சு, உஎற வெச்சு வெறுப்பேத்தி வேடிக்கை பாக்கற அவ்வளவுதான்.

ஈசன் இப்படிச் சொன்னதும் சாரு முறுவலுடன் ஆமாம் என்பதுபோல் தலையசைத்துக் கொண்டே இப்பவும் திரும்பிப் பாராமல் சிரித்துக் கொள்கிறாள்.

சட்டென ஈசன் எழுந்து கொண்டதும் அதுவரை குதூகலித்துக் கொண்டிருந்த சாருவின் முகம் மாறுகிறது. கைகளை குறுக்காக மடித்துக்கொண்டு கீழே எதையோ ஆழமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். சற்று தூரம் நடந்து சென்று ஈசன் திரும்பிப் பார்க்க சாரு இப்பவும் அவனைப் பாராமல் எங்கோ தொலைவில் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

ஈசன் என்ன செய்வது எனத் தெரியாமல் அங்கேயே நிற்கிறான். இருவருக்கும் இடையில் ஒரு நிச்சலமான அமைதி. சாரு இப்போது அவனை நோக்கித் திரும்பி அங்கே வரும்படி கையசைக்கிறாள். ஈசன் மிக மெதுவாக அவள் அருகே வந்து மீண்டும் அதே இடத்தில் அமர்கிறான். சாரு இப்போது அவனை தன் மடியில் தலை சாய்க்கும்படி சைகை செய்ய, ஈசன் அவள் சொன்னதுபோல அவள் மடியில் தலை வைத்துப் படுக்கிறான். அவன் தலையை விரல்களால் கோதிய சாரு அமைதியாய் இருக்கும்படி உதட்டில் விரல் வைத்து சைகை செய்கிறாள். சற்றுத் தொலைவில் நண்பர்கள் வரும் ஓசை கேட்கிறது.



இலக்கியக்

அமரர் கல்கி

பழைமையான பெருங்குலத்தில் வந்த அரசர் அவர். போர்க்களத்தில் புறமுதுகிடுதலை அறியாத வீரப் பரம்பரையில் பிறந்த மன்னர் அவர். ஆயினும் அவருக்கு இப்போது போரில் நம்பிக்கையில்லை. எதிரிகள் படையெடுத்து வருவதாக அரசரிடம் வந்து சொன்னார்கள். "வரட்டும்; இராஜ்யத்தையும் எடுத்துக் கொள்ளட்டும்; எனக்கு இந்த இராஜ்யம் தேவையில்லை; இராஜ்யம் ஆளுவதைக் காட்டிலும் எவ்வளவோ சந்தோஷம் உண்டாகும் முறையில் மிச்சமுள்ள என் வாழ்நாளைக் கழிப்பேன்'' என்றார் அரசர்.

எனவே, கோட்டை விழுந்தது. தலைநகரம் பிடிபட்டது. எதிரிகள் அரசரின் அரண்மனையைச் சூழ்ந்து கொண்டு உள்ளே அரசர் இருப்பார் என்று தேடினார்கள். ஆனால் அரண்மனையில் அரசர் இல்லை. எங்கே போயிருக்கக்கூடும் என்று விசாரித்துத் தெரிந்துகொண்டார்கள். அரசர் இருந்த கட்டடத்துக்கு விரைந்து சென்றார்கள்.

''இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்?'' என்று கேட்டான் படைத்தலைவன்.

''தெரியவில்லையா? சுற்றுமுற்றும் பாருங்கள்!'' என்று அரசர் நாலாபுறமும் சுட்டிக் காட்டினார்.

நாலாபுறத்திலும் வரிசை வரிசையாகப் புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன. ஓலைச்சுவடிகள் ஏராளமாக இருந்தன.

அரசனைத் தேடிக் கொண்டுவந்த பகைவர்கள் அச்சிட்ட புத்தகங்களைப் பார்த்து அதிசயப்பட்டார்கள். ஆங்கில பாஷையிலும் பிரஞ்சு பாஷையிலும் ஜெர்மன் பாஷையிலும் அச்சிட்ட ஆயிரக்கணக்கான புத்தகங்கள் இருந்தன. விதவிதமான, அதிசய அதிசயமான புத்தகங்கள் இருந்தன. பிரசித்தி பெற்ற இலக்கிய நூல்களும் இருந்தன.



''அரசரே! உம்முடைய ராஜ்யம் பறிபோகிற சமயத்தில் இவ்விடம் வந்து உட்கார்ந்திருக்கிறீரே? எதற்காக?'' என்றான்.

"இராஜ்யத்தைக் காட்டிலும் இந்தப் புத்தகசாலையே எனக்கு முக்கியமானது. அதனால்தான் கூடுமாயின் இதைக் காப்பாற்றுவதற்காக இங்கே வந்தேன்! வருகிறவர்கள் எப்படிப்பட்ட மனிதர்களோ, இந்தப் புத்தகசாலையை என்ன செய்து விடுவார்களோ என்று கொஞ்சம் பயமாக இருந்தது!'' என்றார் அரசர்.

அரசருடைய இலக்கியக் காதல் பகைவரின் படைத் தலைவனுக்கு ஆச்சரியமளித்தது. அவரிடம் மரியாதையும் உண்டாயிற்று. ஆனாலும் அவருடன் மீண்டும் வாதமிட, விரும்பி, ''அப்படி இந்த ஓலைச்சுவடிகளில் என்னதான் அதிசயம் இருக்கிறது?'' என்று கேட்டான்.

"இந்த ஓலைச் சுவடிகளில் இலக்கியங்கள் இருக்கின்றன; இதிகாச புராணங்கள் இருக்கின்றன; காவியங்களும் கணித சாஸ்திரங்களும் இருக்கின்றன; அருமையான சங்கீதக் கலை நூல்கள் இருக்கின்றன; ஒப்பற்ற வைத்திய நூல்கள் இருக்கின்றன; அரசியல் சாஸ்திரங்கள் இருக்கின்றன; யுத்த சாஸ்திரங்கள் இருக்கின்றன...!'' என்று

அரசர் அடுக்கிக் கொண்டே போனார்.

"ஓகோ! யுத்த சாஸ்திரம்கூட இருக்கிறதா? அப்படியானால் படையெடுத்து வரும் பகைவரின் படைகளைத் தடுத்து நிறுத்தும் முறை அந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதா?'' என்று படைத்தலைவன் கேட்டான்.

"ஆகா! பகைவர்களைத் தடுக்கப் பல முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரு முறைப்படி, பகைவர் படைகளில் உள்ள வீரர்களையெல்லாம் பைத்தியம் பிடிக்க அடித்து விடலாம். இதோ கொஞ்சம் கேளுங்கள்; இதில் உள்ளதைப் படித்துக்



காதல்!

காட்டுகிறேன்!'' என்றார் அரசர்.

''படித்துக் காட்ட வேண்டாம். பகைவர்களைப் பைத்தியம் பிடிக்கச் செய்யும் முறை இந்த சாஸ்திரத்தில் இருந்தால், அதை ஏன் நீர் கையாளவில்லை!'' என்று படைத்தலைவன் கேட்டான்.

"ஐயா! நல்ல கேள்வி கேட்டீர். தெளிந்த அறிவுடன் இருப்பவர்களை இந்த முறைப்படி பைத்தியம் பிடிக்கச் செய்யலாம். ஏற்கெனவே பைத்தியம் பிடித்திருப்பவர்களை ஒன்றும் செய்ய முடியாது!'' என்றார் அரசர்.

இதைக் கேட்ட படைத்தலைவனும் அவனுடன் வந்தவர்களும் சிரித்தார்கள். இந்த அரசர் சாதாரண மனிதரல்லவென்றும், காமக் குரோதங்களைக் கடந்து சன்மார்க்க சமநிலை அடைந்த தத்துவஞானி என்றும் உணர்ந்தார்கள்.

புத்தகசாலையும் அதிலிருந்த அச்சுப் புத்தகங்களும் ஓலைச்சுவடிகளும் அபாயமின்றித் தப்பிப் பிழைத்தன.

இந்தப் புத்தக சாலைதான் தஞ்சாவூரில் உள்ள சரஸ்வதி மகால் புத்தக சாலை. அதை ஸ்தாபித்துக் காப்பாற்றிக் கொடுத்த அரசர்தான் சாம்ராட் சிவாஜி வம்சத்தில் வந்த சரபோஜி மகாராஜா!

- வானதி பதிப்பகத்தின்
தாகூர் தரிசனத்திலிருந்து...

அன்பெனும் மழையிலே-11




இப்போது நவீனமான குடைகளைப் பயன்படுத்துகிறோம். அவற்றில் உள்ள ஒரு பொத்தானை அழுத்தியவுடன், சட்டென்று குடை விரிந்து கொள்கிறது. அதுபோலத்தான், குருவின் முன்பு பணிவுடன் நாம் தலை வணங்குவதன் மூலமாக நம்முடைய மனம் விசாலப்படும். இந்தப் பணிவும், சரணாகதியும் மனித பலவீனமில்லை. தண்ணீரைச் சுத்தம் செய்வதற்கு உதவுகிற வடிகட்டி போல, குரு நம்முடைய மனதைத் தூய்மைப்படுத்துகிறார். அகங்காரம் என்ற அழுக்கினை நீக்குகிறார். ஒவ்வொரு சூழ்நிலையிலும், நாம் அகங்காரத்துக்கு அடிமையாகிறோம்.

ஒரு திருடன், திருடுவதற்காக வீட்டுக்குள் குதித்தபோது ஏற்பட்ட சத்தத்தால், வீட்டிலிருந்தவர்கள் விழித்துக்கொண்டு விட்டார்கள். யாரோ ஒரு புது ஆசாமி ஓடுவதைப் பார்த்துவிட்டு, "திருடன்... திருடன்... பிடியுங்கள்..." என்று கூச்சல் போட்டார்கள். தப்பி ஓடிய திருடனை ஊர் மக்கள் துரத்திக்கொண்டு ஓடினார்கள்.

ஓடிக் கொண்டிருந்த திருடன், சட்

கண்டேன் குருநாதனை!



டென்று ஒரு இருட்டான இடத்தில் சிறிது நேரம் ஒளிந்துகொண்டான். துரத்திக்கொண்டு ஓடி வந்தவர்கள், அந்த இடத்தைத் தாண்டியதும், அவனும் அவர்களோடு சேர்ந்துகொண்டு "திருடன்.. திருடன்... பிடியுங்கள்" என்று சத்தம் போட ஆரம்பித்தான். ஊர் மக்களுக்கு, யாரைத் துரத்திக்கொண்டு ஓடுகிறோமோ, அவனும் தங்களுடனேயே ஓடிவந்துகொண்டிருக்கிறான் என்பது தெரியவே இல்லை.

இதுபோலத்தான். வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களிலும், சூழ்நிலையிலும் மனிதனுடன் அகங்காரமும் சேர்ந்துகொண்டு விடுகிறது. அகங்காரத்தை நீக்குவதற்குரிய வாய்ப்புகளை இறைவன் நமக்கு ஏற்படுத்திக் கொடுத்தாலும், நாம் அவற்றை முறையாகப் பயன்படுத்திக் கொள்வதில்லை. நம்முடைய அகங்காரம் வளர்ந்துகொண்டே போகிறது.

அகங்காரம் அகலவும், பணிவு வளரவும் குரு மிகவும் அவசியம். குருவின் மூலமாக நமக்கு விவேகம் கிடைக்க வேண்டும். அந்த விவேகம் நம்மை நல் வழியினில் நடத்த வேண்டும். எனவே ஒருவர் எப்படிப்பட்ட குருவை அணுகி விவேகத்தைப் பெறுகிறார் என்பது கவனிக்கத்தக்கது.

ஒரு மனிதன் தனக்கொரு குரு வேண்டும் என்று நினைத்தான். எனவே குருவைத் தேடிப் புறப்பட்டான். தன் விருப்பம் என்ன என்பதைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப வழி நடத்தும் குருவையே அவன் விரும்பினான்; தேடினான்.

ஒரு குருவைச் சந்தித்து தன் விருப்பத்தைக் கூறினான். அவரோ, "நான் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டு,



அதன்படி நடந்துகொள்ள முடியுமென்றால் உன்னைச் சீடனாக ஏற்றுக் கொள்வேன். உன் விருப்பப்படி செய்வதற்கு வேறு ஆளைப் பார்த்துக் கொள்" என்று சொல்லிவிட்டார். அடுத்து அவன் சந்தித்த குருவும் அதையேதான் சொன்னார்.

அந்த மனிதன் பாலைவனப் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, ஒரு ஒட்டகம் மணலில் படுத்துக்கொண்டு தன் தலையை ஆட்டியபடி அசை போட்டுக் கொண்டிருந்தது. அவன், அந்த ஒட்டகத்தின் அருகில் சென்றான். "ஒட்டகமே! நீ எனக்கு குருவாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அதே சமயம் நான் உனக்கு அடிமையாக

அம்மா



சுதாமணிக்குக் கிளிகள் என்றால் மிகவும் விருப்பம். இயற்கை அழகு சூழ்ந்த அவரது வீடு இருந்த பகுதியில் பலவித மான பறவைகள் பறந்து திரியும். பல சமயங்களில், சுதாமணியின் தோள் களின் மீது கிளிகள் பறந்து வந்து அமர்ந்து கொள்ளும். அவரைக் காண வரும் பக்தர் கள் கிளி,புறா போன்ற பறவைகளை அன்புடன் அளிப்பதுண்டு. சுதாமணி அவற்றை ஒருபோதும் கூண்டில் அடைத்து வைத்ததில்லை. ஆனாலும் அந்தப் பறவைகள் அந்த இடத்தை விட்டுப் பறந்து சென்றதில்லை.

ஒருமுறை இடமண்ணேல் இல்லத் தில் இருந்த பெரிய மரம் ஒன்றில் ஒரு கருடன் கூடு கட்டி குஞ்சு பொரித்தி ருந்தது. ஒருநாள் அந்தக் கூடு உடைந்து இரண்டு குஞ்சுகள் கீழே விழுந்து விட் டன. சில சிறுவர்கள் அந்தக் குஞ்சுகளின் மீது கல்லெறிந்து கொல்ல முயன்றனர். அப்போது அந்த குஞ்சுகளைக் காப்பாற்றிய சுதாமணி அவற்றுக்குப் பாலூட்டி வளர்த்து, சுயமாகப் பறக்கிற நிலை வந் ததும் வானத்தில் பறக்கவிட்டு சந் தோஷப்பட்டார்.

சில தினங்களில், சுதாமணி தியானத் தில் ஈடுபட்ட நேரத்தில், பாம்புகள் அவரது உடலின் மீது ஊர்ந்து சென்ற தாகவும் சிலர் சொல்வார்கள்.

- மௌலி

இருக்க விரும்பவில்லை. என்னுடைய விருப்பத்தை நீ புரிந்துகொண்டு, எனக் குக் குருவாக இருந்து வழிகாட்ட வேண்டும். சம்மதா?" என்று கேட்டான்.

ஒட்டகம்தான் தன் தலையை ஆட்டிக் கொண்டே இருக்கிறதே! "ஆஹா! கண் டேன் என் குருநாதனை!" என்று கூறி அதன் முன்னால் விழுந்து வணங்கினான்.

"குருவே! நீங்கள் எதற்காக இந்தப் பாலைவனத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்க வேண்டும்? என் கூடவே வந்து விடுங்கள். என் வீட்டிலேயே தங்கிக் கொள்ளலாம். அதுதான் எனக்கும் பெருமை; கௌரவம்" என்றான். அவனது குருவான ஒட்டகம் தலையை ஆட்டியது. சீடன் தன் ஒட்டக குருவுடன் வீட்டுக்குப் போனான்.

தன் குருவுக்காக வீட்டில் இடம் ஏற்படுத்தினான். வேளாவேளைக்கு உணவு கொடுத்தான். எது செய்ய வேண்டுமென்றாலும், தன் குருவின் முன்னால் நின்று விஷயத்தைச் சொல்லி, குருவின் அனுமதியைக் கேட் பான். ஒட்டகம் தலை ஆட்டியதும், குரு தனக்கு வழிகாட்டுவதாக அகமகிழ்ந்து தன் விருப்பப்படி காரியங்களைச் செய் வான்.

ஒரு நாள், "குருவே! நான் திருமணம் செய்து கொள்ளலாமா?" என்று கேட் டான். ஒட்டகம் தலையை ஆட்டியது. அவன் உடனே ஒரு பெண்ணைப் பார்த்து திருமணம் செய்து கொண்டான்.

அடுத்து சில மாதங்கள் கழித்து, "எனக் குக் குழந்தை வேண்டும். ஆசி புரியுங்கள்" என்றான், ஒட்டகம் தலை ஆட்டியது. அவன் விருப்பப்படியே சீடனுக்குக் குழந்தை பிறந்தது. அகமகிழ்ந்தான்.

குடும்பத்தில் சில பிரச்னைகள் வந்த போது, "குருவே! என் மனக்கவலையை மறக்க மது அருந்தலாமா?" என்று கேட் டான். ஒட்டகம் தலை ஆட்டியது.

சீடன் மது அருந்த ஆரம்பித்தான். நாளடைவில் மதுவுக்கு அடிமை ஆனான். மனைவியால் அதனைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. சண்டை போட் டாள்.

கோபமடைந்த சீடன், நேரே தன் குருவிடம் போனான்."குருவே! என் மனைவியின் தொல்லை தாங்கமுடிய வில்லை. நான் அவளைக் கத்தியால் குத்திக் கொன்றுவிடப் போகிறேன். அதற்கு உங்கள் ஆசி வேண்டும்" என் றான். ஒட்டகம் தலை ஆட்டியது.

அவன் தன்னுடைய மனைவியைக் கத்தியால் குத்திக் கொன்றான். போலீஸ் வந்தது. கைது செய்து சிறையில் அடைக் கப்பட்டான். ஆயுள் தண்டனை அளிக் கப்பட்டது.

குழந்தைகளே! குரு எத்தனை முக்கி யமோ அதே அளவுக்கு, நாம் யாரை குருவாகப் பெறுகிறோம் என்பதும் முக்கியம். தவறான குருவை நாம் தேர்ந்தெடுத்துவிட்டால், ஒட்டகத்தின் சீடனுக்கு நேர்ந்தது போல ஆகிவிடும்.

(அன்பு பெருகும்)

"இதெல்லாம் ஸ்கூல் ஃபீசுக்குப் போதும்... புக்ஸ் வாங்க என்ன செய்யப் போறீங்க?"




தவணையில் வாங்கிய கார்!

"சார்.... நாலுநாளா என் பொண்டாட்டியைக் காணோம். நீங்கதான் யாரும் கண்டுபிடிக்காம பாத்துக்கணும்!"



எஸ்.ஜெ.கலைவாணி
குரோம்பேட்டை

"குறைஞ்ச தவணையில் கார் வாங்க மாசா மாசம் பணம் கட்டினேன். கடைசியில இப்படி ஒரு பார்சல் வந்திருக்கு!"



ஐஸின் தோஷமும்... அம்மாவின் ரோஷமும்...!

உலக அழகி ஐஸ்வர்யாராய் என்ன பண்ணினாலும் நியூஸ்தான். கான்ஸ் ஃபிலிம் ஃபெஸ்டிவலில் சமீபத்தில் வெளிநாட்டில் பங்கெடுத்துக் கொண்டு விதவித கவுனில் உலகெங்குமிருக்கும் மீடியாக்களுக்கு போஸ் கொடுத்தது ஒரு நியூஸ். மணிரத்னம் இயக்கும் குரு பட ஷூட்டிங்கின்போது விரலில் அடிபட்டு எல்லா சேனல்களிலும் தலைப்புச் செய்தி! விரல் இப்போது எப்படி, எத்தனை நொடிகளில் சரியாய்ப் போகும்?' என வல்லுநர்களைப் பிடித்து நள்ளிரவு வரை பேசித் தீர்த்து விட்டார்கள்.

இப்போது சமீபத்திய சர்ச்சை ஆஷின் திருமணம். சூப்பர் ஸ்டார் அமிதாபின் மகன் அபிஷேக்கிற்கும் ஐஸ்வர்யாவுக்கும் திருமணம் எப்போது, எங்கு என ஆளாளுக்கு நியூஸ் பிட்டைப் போட்டுக் கொண்டிருக்க திடீரென அதில் ஒரு புதுத் திருப்பம்...

'அமிதாபுக்கு இந்தத் திருமணத்தில் இஷ்டமில்லையாம்(!) ஐஸ்வர்யா ராயின் ஜாதகத்தைப் பார்த்தபோது செவ்வாய்தோஷம் உள்ள ஜாதகம் எனத் தெரிய வர, பிக் பி இந்த திருமணத்துக்கு நோ சொல்லி விட்டார். ஏகப்பட்ட தோல்விப் படங்களை கொடுத்த மகன் அபிஷேக்கின் கேரியர் இப்போதுதான் சூடு பிடிக்க ஆரம்பித்ததில் அவருக்கு ஏக த்ரில். செவ்வாய்தோஷ பெண்ணைத் திருமணம் செய்து வைத்தால் தொழில் ரீதியாகச் சரிவைச் சந்திக்கலாம் என எண்ணி இந்தத் திருமணம் வேண்டாம் எனச் சொல்லி விட்டார்...'' என்கிறார் சினிமா நிருபர் ஒருவர்!

ஜயா பச்சன், ஆஷின் தாய் விருந்தாவுக்கு போன் செய்து 'ஒரு ஹோமம் செய்யுங்கள். தோஷம் விலகி விடும். பிறகு திருமணம் செய்யலாம்' என்று சொன்னதாகவும் அதை ஆஷின் வீட்டில் மறுத்து விட்டதாகவும் இன்னொரு தகவல்.

இதில் மிக சுவாரஸ்யம் என்னவென்றால் அபிஷேக்கின் ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்தபோது அவருக்கும் செவ்வாய்தோஷம் இருப்பது தெரிய வந்ததாம்.

அமிதாபிடம் செவ்வாய்தோஷ விவகாரம் பற்றிக் கேட்டால் 'இது மீடியா கிளப்பி விட்ட புரளி... அந்த மாதிரி எதுவுமே நடக்கவில்லை' என்கிறார் சிரித்துக்கொண்டே! ஆஷின் தாய் விருந்தா ஏக கடுப்பிலிருக்கிறார். "பொய் சொல்வதற்கு அளவே கிடையாதா? பத்திரிகை என்றால் என்ன வேண்டுமானாலும் எழுதுவதா? என் மகள் ஐஸ்வர்யாவின் ஜாதகம் யாரிடம் இருக்கிறது? அவளுக்கு செவ்வாய் தோஷம் என்பதே நியூஸ் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன்...'' என்கிறார் நெத்தியடியாக!

• லதாசேகர்,
பெங்களூர்



வேதாளபுரி நூலகம்!



"இது என்ன கையில புதுசா ஒரு பொட்டி?'' என்றான் விக்கிரமாதித்தன். ''ஹா ஹா ஹா இதுதான் என்னோட புது லாப்டாப்? என்றது வேதாளம்.

"ரொம்ப நாளா கேட்கணும்னு நினைச்சிட்டிருந்தேன். நமக்குத் தேவைப்பட்ற விஷயங்களை இண்டர்நெட்ல எப்படித் தேடறது? என்னென்னவோ வெப்சைட் நேம் எல்லாம் சொல்றாங்க. எதுவும் புரிய மாட்டேங்குது!"

"எல்லாம் வல்ல கூகுள் இருக்கும் போது என்ன கவலை? பை தி வே கூகுள் பத்தி இப்போதுதான் ஒரு புக் படிச்சேன். புக் பேரு 'தேடு'. சொக்க வைக்கிற நடையில எழுதியிருக்காரு சொக்கன். இண்டர்நெட்டோட சூப்பர் ஸ்டார் கூகுளை யார் கண்டுபிடிச்சாங்க, எதுக்காகக் கண்டுபிடிச்சாங்க, குட்டியா தொடங்கின ஒரு சர்ச் என்ஜின் எப்படி இந்த அளவுக்கு அசுரத்தனமா பரவுச்சு இப்பிடி கூகுளோட வரலாறை சுவையா சொல்லிருக்காரு சொக்கன். ஒரு நாவல் படிக்கிற மாதிரி விறுவிறுப்பா இருக்கு. கையோட கொண்டு வந்திருக்கேன். படிச்சுப் பாருங்க."

''தேங்க்ஸ் வேதாள். ஆமா உன்னோட மாய மந்திர உலகத்தைப் பத்தி ஏதாவது சொல்லேன்."

''மாய மந்திர உலகம் தானே? நான் சொல்றதைவிட மார்குவேஸ் சொன்னா அது கரெக்டா இருக்கும். அவரோட மேஜிக்கல் ரியலிஸம் உலகப் பிரசித்தி பெற்றது.

அதுக்கு முன்னாடி ஆர். வெங்கடேஷ் எழுதியிருக்கிற அறிமுகப் புத்தகத்தைப் படிச்சுடுங்க. மார்குவேஸை ரொம்ப எளிமையா அறிமுகப்படுத்தியிருக்காரு. ஆங்... அப்புறம் ஒரு கவிதை புக் படிச்சேன். 'வெளியே வீடு.' சிலது மட்டும் நல்லா இருக்கு."



''ம்...சரி இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லு. கூகுளைக் கண்டு பிடிச்சவங்க யாரு?''

"சிம்பின். லாரி பேஜ் மற்றும் செர்கி பிரின்."

சரியான பதிலைக் கூறிய வேதாளம் மீண்டும் முருங்கை மரத்துக்குத் தனது லேப்டாப்புடன் பறந்து சென்றது.

தேடு, என். சொக்கன், கிழக்கு பதிப்பகம், எண்.33/15, 2வது மாடி, எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை 18, பக்கம் 208, விலை 75

மாயமில்லே, மந்திரமில்லே, ஆர்.வெங்கடேஷ், கிழக்கு பதிப்பகம், பக்கம் 120, விலை 60

வெளியே வீடு, சத்தியானந்தன், காவ்யா, 14 முதல் குறுக்குத் தெரு, ட்ரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 24, பக்கம் 170, விலை 70

"சாசனத்துக்கு வேளை வந்தாச்சு!"

–இராமகிருஷ்ணன் பேட்டி

"நல்ல கதையும், ஒரு படத்தை சிறந்த முறையில் இயக்கும் திறனும் யாரிடம் இருந்தாலும் சரி அவர்களின் கனவை நனவாக்குவதுதான் இந்திய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் பணி" என்கிறார் அதன் தென்னிந்திய மண்டலத் தலைவரான இராமகிருஷ்ணன். "நல்ல சினிமாவையும் நல்ல கலைஞர்களையும் வளர்க்கும் மகத்தான பணியில் ஈடுபட்டிருக்கும் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் (என்.எஃப்.டி.சி) என்ற இந்நிறுவனத்தை, ஃபிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் நிறுவனமும் இந்தியன் மோஷன் பிக்சர்ஸ் எக்ஸ்பார்ட் கார்ப்பரேஷன் நிறுவனமும் ஒன்றிணைந்து 1980-ம் ஆண்டு மும்பையில் நிறுவின. அது முதல் மிகச்சிறந்த கதைகளைத் தேர்ந்தெடுத்து, இந்தி, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், வங்காளம், காஷ்மீரி, ஒரியா, பஞ்சாபி, மணிப்பூரி போன்ற பல மொழிகளில் 300க்கும் மேற்பட்ட தரமான படங்களைத் தயாரித்துள்ளது. அவற்றில் ஆங்கிலத் திரைப்பட இயக்குநர் ரிச்சர்ட் இயக்கத்தில் வெளிவந்த 'காந்தி', கே.எஸ்.சேது மாதவனின் இயக்கத்தில் வெளிவந்த 'மறுபக்கம்', எழுத்தாளர் பூமணியின் இயக்கத்தில் வெளிவந்த 'கருவேலம் பூக்கள்' ஆகியவை குறிப்பிடத்தக்கவை. என்.எஃப்.டி.சி. தயாரித்த பெரும்பாலான படங்கள் இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் பெருமைக்குரிய பல விருதுகளை வென்றவை. தமிழில் தயாரித்த 'மறுபக்கம்' படம், இந்திய அளவில் சிறந்த படத்துக்கான தேசிய விருது மற்றும் சிறந்த திரைக்கதைக்கான விருதையும் வென்றது. தவிர ஸ்பெஷல் ஜூரி அவார்ட் என்ற பிரிவில் 'மறுபக்கம்' படத்தில் நடித்த ஜெயபாரதிக்கு சிறந்த நடிகை விருதையும் தேடிக் கொடுத்தது" என்றவரிடம், 'எந்த விதமான கதையைத் தேர்ந்தெடுக்கிறீர்கள்? என்.எஃப்.டி.சி, ஒரு இயக்குநருக்கான தகுதிகளாக எதிர்பார்ப்பவை எவை?" என்று இடைமறித்துக் கேட்டோம்.

"மத்திய அரசு நிறுவனமான என்.எஃப்.டி.சி., திறமையானவர்களிடமிருந்து நல்ல கதையைத் தேர்ந்தெடுத்து, படங்களைத் தயாரித்து வருகிறது. அதற்காக ஸ்க்ரிப்ட் கமிட்டி, டெக்னிக்கல் கமிட்டி, ஸ்பெஷல் கமிட்டி என மூன்று கமிட்டிகளை அமைத்துள்ளது. இங்கு நல்ல கதையோடு வருபவர்களுக்கு முன் அனுபவமோ, அதிக அளவு கல்வித் தகுதியோ தேவையில்லை. அவர்களது திறமை ஒன்றே போதுமானது. அது மட்டுமின்றி நவீன திரைப்படக் கருவிகளை வாங்க திரைப்படக் கலைஞர்களுக்கு கடன் உதவியும் செய்து தருகிறது. அதாவது கடன் வாங்க நினைப்பவர்கள் முதலில் இரண்டாயிரம் ரூபாயை முன் பணமாகச் செலுத்தி, பிறகு முப்பது ரூபாய் மதிப்புள்ள கடன் உதவி பெறும் சான்றிதழ்களை வாங்கி அதை பூர்த்தி செய்து தரவேண்டும். என்.எஃப். டி.சி. வரையறுக்கும் செக்யூரிட்டி சான்றிதழையும் அதனுடன் இணைத்துத் தரவேண்டும். பெறப்படும் கடன் எத்தனை மாதங்களுக்குள், எந்த முறையில் தரவேண்டும் என்ற வரைமுறையும் உண்டு. அதுபோல என்.எஃப்.டி.சி. கலைஞர்களின் திறமைகளை வளர்க்கும் வகுப்புகளையும் நடத்தி வருகிறது. இங்கு ஆவிட்

பிரிமியர் போன்ற எடிட்டிங் சாஃப்ட்வேர்களும் கற்றுத்தரப்படுகின்றன. இப்போது தேசிய திரைப்படக்குழு என்ற ஒரு குழுவை நிறுவ உள்ளோம். இதன் மூலம் இந்தியத் திரைப்படங்களுக்கும், உலகத் திரைப்படங்களுக்கும் இணைப்பு ஏற்படுத்த உள்ளோம். தவிர இது மக்களுக்கு சினிமாவைப் பற்றிய அறிவை நேரடியாக வழங்கவுள்ளது. இந்தக் குழுவில் அனைவரும் உறுப்பினராகச் சேரலாம். அதுமட்டுமின்றி குழுவில் சேரும் மாணவர்களுக்கு சலுகைகளும் உண்டு.''

எல்லாம் சரி, இயக்குநர் மகேந்திரன் என்.எஃப்.டி.சியிலிருந்து உதவி பெற்று 'சாசனம்' திரைப்படத்தை நான்காண்டுகளுக்கு முன் துவக்கினார். இன்றுவரை படம் வந்தபாடில்லை. என்னாச்சு? எப்போ வரும்' என்று இடைமறித்தோம்.

'''முள்ளும் மலரும்', 'உதிரிப்பூக்கள்', 'ஜானி' உட்பட அற்புதமான பல படங்களை இயக்கிய மகேந்திரன் நீண்ட இடைவெளிக்குப் பிறகு கதை, திரைக்கதை, வசனம் எழுதி 'சாசனம்' படத்தை இயக்குகிறார். இதுவரை ஏற்று நடிக்காத மாறுபட்ட கதாபாத்திரத்தில் அரவிந்த் சாமி நடிக்கிறார். அன்பு காட்டுதல், நன்றி மறவாமை போன்ற எழுதப்படாத சாசனங்களைப் பின்பற்றி வாழும் மனிதர்களின் கதை இது.

உண்மையில் 'சாசனம்' படம் ஒரு சமூகத்தின் வாழ்க்கைப் பதிவு. அதனால் படத்தில் நடிக்கும் அனைவரும் அரிதாரம் பூசாத அசல் மனிதர்களாகவே நடிக்கிறார்கள். பல நிதிநிலை பிரச்னைகளால் படம் வெளிவர இத்தனை நாட்களாகிவிட்டது. சாசனத்துக்கு வேளை வந்தாச்சு, ஜூலை மாதம் இத்திரைப்படம் வெளிவரவுள்ளது. உண்மையில் இப்படம் மற்ற தமிழ்ப் படங்களைப் போலில்லாமல் ஒரு புதிய கோணத்தில் இயக்கப்பட்டுள்ளது. அதனால் திரைக்கு வந்தபின் ஒரு புதிய சரித்திரத்தைப் படைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை'' என்றார் நம்பிக்கையுடன்.

- விமலன்

• இராமகிருஷ்ணன்





• 'சாசனம்' படத்தில் அரவிந்த் சாமி, கௌதமி...

திவ்ய மங்களமான ரூபத்துடன் நரசிம்ஹன் ஆவிர்பவித்தான். அதனால் தான் சஹஸ்ரநாமத்திலே நரசிம்ஹனாக அவன் அவதரித்தான் என்று வெறுமே சொல்லாமல் 'நாரசிம்ஹ வபு ஸ்ரீமான்' என்று வருகிறது.

அந்தத் திருமேனி இருக்கிறதே, அது 'ஸ்ரீமத்' சப்தத்தினாலே மிக அழகான சுந்தரமூர்த்தி என்று விவரிக்கப்படுகிறது.

அந்த அவதார கால நரசிம்ஹனாய் மிகவும் போக்யமான ஸ்வரூபமாய், அனுபவிக்க அனுபவிக்கத் தெவிட்டாத தாக விளங்கக் கூடியது என்று காட்டித் தரப்படுகிறது.

அப்படிப்பட்ட திவ்ய மங்கள ரூபத் தோடு தோன்றியவன், உளந்தொட்டு ஹிரண்ய கசிபுவை முடித்தவன், அதே சமயத்தில் பிரஹலாதனைக் காத்தவன், ஏககாலத்தில் திடீரென்று தோன்றி அவதார காரியத்தை முடித்துக்கொண்டு வித்யுத்வது - மின்னலைப் போல் - மறைந்துவிட்டான்!

லோகத்திலே பல காலம் இருந்து மனி தர்க்காக படாதபாடு பட்டு, தானும் இந்த உலகிலே நீடித்து, கோபதாபங்களுக் கெல்லாம் இடங்கொடுத்து - அப்படி யெல்லாம் வாழ்ந்த அவதாரங்கள் உண்டு.

ஆனால் இந்த அவதாரம் வந்தவுட னேயே அதிவேகமாய், வந்த வேகத்தில் புறப்பட்டுப் போய் விட்டது. அந்த சிற் றத்தில் அதிவேகமாய் அருள் பெற்றான் பிரஹலாதன்.

சாக்ஷாத் ஈச்வரன் - பரமேச்வரனே - இதைக் கொண்டாடுகிறார்.

உயர்ந்ததான நரசிம்ஹ மந்திரத்திலே பதினொரு பதங்கள் உண்டு. மந்திர ராஜம் என்று இந்த மந்திரத் துக்குப் பெயர். வேதம்

24 எட்டாம் பாகம்

சொல்கிறது - இந்த மந்திரத்தை அடிக்கக் கூடிய இன்னொரு மந்திரம் இல்லை என்று!

அதே மாதிரி, நரசிம்ஹ யந்திரம் இருக்கிறது பாருங்கள் - அதை பேதிக்கக் கூடிய வேறு யந்திரமோ மந்திரமோ, தந்திரமோ இல்லை.

யந்திரம் உயர்ந்தது
மந்திரம் உயர்ந்தது
தந்திரம் உயர்ந்தது.

நரசிம்ஹ யந்திரத்துக்கு 'சர்வதோ பத்ரம்' என்று பெயர். எல்லா இடத்தி லேயும் ரக்ஷிக்கக் கூடியது அது.

எல்லா பக்கங்களிலேயும் பத்திரமாக எழுந்தருளியிருக்கும்படியான எம்பெரு மான் அந்த யந்திரத்துக்குள்ளேயும் பிரதிஷ்டாபனமாகி இருக்கிறான்.

ஆகவே நரசிம்ஹ மந்திரத்தை அடிக் கக் கூடியது ஒன்று இல்லை. அதை சேதனம் பண்ணக் கூடியது ஏதும் இல்லை. மந்திர சாஸ்திரத்திலேயே இது விசேஷமாகப் பேசப்பட்டிருக்கிறது.

அப்படிப்பட்ட மந்திரங்களிலே ராஜ மந்திரமான, அனுஷ்டுப் சந்தஸ்ஸில் அமைந்த நரசிம்ஹ மந்திரத்தை சாக்ஷாத் பரமேச்வரனே அக்ஷரம் அக்ஷரமாக விவரிக்கிறான். ஈச்வரனே ஏகாதச ருத்ரர் களாக இருந்துகொண்டு பதினொரு பதங்களையும் விவரிக்கிறான். ஒவ்வொரு ச்லோகம் மூலமாக ஒரு பதம் விவரிக்கப்படுகிறது.

அப்படி பூரணமாய் நம்மை ஈடு படுத்தும் ரூப லாவண்யம் நரசிம்ஹனு டையது.

இதைத்தான் திருப்பாணாழ்வார் பாடினார்:

பரியன் ஆகி வந்தஅவுணன்
உடல்கீண்ட அமரர்க்கு
அரிய ஆதிப்பிரான் அரங்கத்து
அமலன் முகத்துக்
கரிய ஆகிப் புடை பரந்து
மிளிர்ந்து செவ்வரி ஓடி நீண்ட அப்
பெரிய ஆய கண்கள், என்னைப்
பேதைமை செய்தனவே!

ஈச்வரன் என்ன சொன்னானோ அதையேதான் சொல்கிறார் ஆழ்வார்:

அந்த ரங்கநாதன் ஸ்ரீரங்கத்திலே படுத்துக் கொண்டிருக்கிறானே, அவன் கண்களைப் பாருங்கள் எல்லோரும். இந்தக் கண் யாருடையது தெரியுமா?



முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

குறையொன்றுமில்லை

நரசிம்ஹனுடையது. ரங்கநாதன் என்று சாமானியமாக நினைத்து விடாதீர்கள். நரசிம்ஹன் அவன். செவ்வரி ஓடிய அப்பெரியவாய கண்கள் - விசாலமான நேத்திரங்கள்.

'விசாலமான நேத்திரங்கள் எதனால் எம்பெருமான் நரசிம்ஹனுக்கு?' என்று கேட்டால், எத்தனை பக்தர்கள் வந்தாலும் - யார் வந்தாலும்- குளிர கடாக்ஷிக்கும் படியாக ஏற்பட்டவை அந்த நேத்திரங்கள்.

அவன் நேத்திரத்தைப் பார்த்து அவன் சாக்ஷாத் மஹாவிஷ்ணு என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அவன் நாராயணன் என்பதைக் காட்டிக் கொடுப்பதே அவனுடைய நேத்திரங்கள்தான். எத்தனை அவதாரம் எடுத்தாலும் எத்தனை திருவுருவங்கள் பகவான் எடுத்தாலும் அவன் ஸ்புட புத்ம லோசன:

வராஹ அவதாரம் பண்ணுகிறான்... 'குர்குர்' என்று சப்தித்தபடி வராஹமாக (பன்றியாக) உருவெடுத்து, கண்களை மூடி மூடித் திறக்கிறான்!

அவனைப் பார்த்து யார் என்று தெரியாமல் வியந்தவர்களெல்லாம் அந்த நேரத்திரத்தைப் பார்த்தவுடனே தெரிந்து கொள்கிறார்கள், அவன் சாக்ஷாத் மஹாவிஷ்ணு என்று.

அந்தத் தாமரை தள கண்கள்தான் அவனைக் காட்டிக் கொடுக்கின்றன.

பூதனை, குழந்தை கிருஷ்ணனுக்குப் பாலூட்டி அவனை அழிக்கவேண்டும் என்று வருகிறாள். கம்ஸன் ஆக்ஞைப்படி வருகிறாள். அப்போது குழந்தை கண்ணை கெட்டியாக மூடிக் கொண்டுவிட்டது!

ஏனென்றால், கண்ணைப் பார்த்து விட்டு அவள் ஓடிப் போய்விடப் போகிறாளே என்று! அவளைப் பிடித்து அழித்துவிட வேண்டும் என்று தீர்மானம் பண்ணிவிட்டது குழந்தை. ஆனால், கண்ணைப் பார்த்தாளானால் நாராயணன் என்று தெரிந்து கொண்டு ஓடிப் போய்விடுவாளே! அப்புறம் தன் காரியம் நடவாமல் போய்விடும் என்று பகவான் கண்ணைத் திறந்து காட்டவே இல்லையாம்.

ஆகையினாலே, எல்லா அவதாரங்களிலேயும் பகவான் ராஜீவ லோசனனாக (தாமரைக் கண்ணனாக) விளங்குகிறான்.

ராமோ ராஜீவ லோசன: ராமனுடைய திரு நேத்திரத்துக்கு இலக்கானவர்கள் இராமாயணத்தில் மூன்று பேர். ஒன்று தசரதன், இரண்டாவது சபரி, மூன்றாவது ஆஞ்சநேயன்.

விச்வாமித்ரர் ராமனைக் காட்டுக்கு அனுப்பும்படி கேட்கிறார் தசரதனிடம். அப்போது அவன் என்ன சொல்கிறான்: "ராமன் சின்ன குழந்தை. பதிமூன்று வயதுகூட ஆகவில்லை அவனுக்கு. தாமரை புஷ்பம் போன்ற நேத்திரம் படைத்தவன் அவன். ராக்ஷஸர்களோடு யுத்தம் பண்ணுவதற்கு அவனை நீங்கள் கேட்கிறீர்கள். சாயங்காலத்தில் தாமரை புஷ்பம் மூடிக் கொள்ளுவதுபோல் என் குழந்தை ராமனின் தாமரைக் கண்கள் தூக்கத்தில் மூடிக்கொண்டு விடுமே. அவனால் உங்களுக்குக் காரியம் ஆகுமா?" என்று ராமனுடைய நேத்திரத்தில் ஈடுபட்டுப் பேசுகிறான் தசரதன்.



"என்ன சொல்றீங்க? கபாலி விஞ்ஞானபூர்வமாக லஞ்சம் கொடுப்பானா? எப்படி?"
"இந்த ஸ்டேஷன்ல எல்லாருக்கும் டெபிட் கார்டு வாங்கிக் கொடுத்திருக்கான். உனக்கும் வந்துடும். கவலைப்படாதே..."
- விமல்



வாரியார் அமுதம்!

நீ எப்போதும் பெரியோரைத் துணைக்கொள்.

கல்லின் தன்மை தண்ணீரில் மூழ்கிவிடுவது. கட்டையின் தன்மை தண்ணீரில் மிதப்பது.

சிறிய கல்லோ, பெரிய கல்லோ தண்ணீரில் போட்டால் தண்ணீருக்குள் மூழ்கி அழுந்திவிடும்.

ஆனால், ஒரு கல்லைப் படகு மேல் வைத்தால் அந்தக் கல் தண்ணீரில் மிதந்து செல்கிறது.

அதுபோல், அறிவாற்றலால் ஆன்ற பெரியோர்களை நீ அடுப்பாயானால் உனது அறிவாற்றலுக்கு இயலாத பெரிய கருமங்களை நீ செய்து முடிப்பாய்.

சபரி என்பவள், "அந்த எம்பெருமானுடைய திருநேத்திரத்துக்கு இலக்காகி உயர்ந்த கதிக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்'' என்று எம்பெருமானின் திருநேத்திரத்தைக் குறித்துச் சொன்னாள்.

அதே மாதிரி, சீதாபிராட்டி ஆஞ்சநேயனிடம் ஸ்ரீராமனைக் குறித்து விசாரித்த போது ஆஞ்சநேயன் என்ன சொன்னான்...? முதலில் ஸ்ரீ ராமனின் நேத்திரத்தைத்தான் அவன் வர்ணிக்கிறான். "பனைக்குப் பனை தத்தித் திரியும் குரங்கினத்தைச் சேர்ந்த என்னையே ஸ்ரீ ராமனின் கண்கள் ஆகர்ஷித்துவிட்டன என்றால், அப்படிப்பட்ட நேத்திரத்தை என்னவென்று சொல்லுவேன்...?'' என்றான்.

ஆகவே, எந்த அவதாரம் எடுத்தாலும் பகவானுடைய நேத்திரத்துக்குப் பங்கமில்லை.

அதிலும் எல்லா அவதாரத்தைக் காட்டிலும் நரசிம்ஹ அவதாரத்திலே விசாலமான திருநேத்திரம். இதை ஈசுவரனே எடுத்துச் சொல்கிறான்.

"நன்கு விரிந்த திருநேத்திரங்களால் நரசிம்ஹன் தனது பக்தர்களைக் குளிர கடாக்ஷிக்கிறான்'' என்பது ஈசுவரன் வாக்கு!

அந்த நேத்திரத்தினால் அனுக்கிரஹம் பண்ணுகிறான். நிக்ரஹம் என்பதை அறியாதவன்.

நரசிம்ஹ மந்திரம் 32 அக்ஷரங்களைக் கொண்ட உயர்ந்த மந்திரம். அவதார காலத்தில் பகவான் விசால நேத்திரத்துடன் இருந்ததைச் சொல்கிறது. சிற்றத்தோடு அருள் பெற்றான் பிரஹலாதன்! கோபமாக இருந்தால் கண்களில் அனல் பறக்கும். ஆனால் இங்கே பாருங்கள்... ஹிரண்ய கசிபுவை பகவான் தீக்ஷண்யமாகப் பார்க்கிறான்; அதே சமயம் பிரஹலாதனை வாத்ஸல்யமாகப் பார்க்கிறான். இரண்டும் ஏக காலத்திலே நடக்கிறது. ஒரே சமயத்தில் நேத்திரம் இரண்டு விதமாக வேலை செய்கிறது. ஹிரண்ய கசிபுவை தீவிரமாகப் பார்க்கிறான். பிரஹலாதனை அனுக்கிரஹமாகப் பார்க்கிறான்!

இது எப்படி என்று ஸ்ரீதரீய வியாக்யானம் என்கிற விளக்கத்தில் சொல்லியிருக்கிறது:

சிம்ஹம் இருக்கிறதே... அது மற்ற பிராணிகளை தீக்ஷண்யமாகப் பார்க்கும். தனது குட்டியை வாத்ஸல்யமாகப் பார்க்கும். அந்த மாதிரி, பிரஹலாதன் - குழந்தை - பக்தனானதனாலே வாத்ஸல்யமான பார்வையை அவன் மீது செலுத்தினான் பகவான்.

ஹரியை தியானம் பண்ணுங்கள் - ஏனென்றால் அவனிடத்தில் வாத்ஸல்யம் இருக்கிறது. அடிபணிந்தவர்களை வந்து ரக்ஷிக்கக் கூடிய உயர்ந்த குணம் அவனிடத்தில் இருக்கிறது.

(வளரும்)

நான் பின்கட்டில் துணி காயப் போடப் போனேன். தன் வீட்டு பின்புறக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்த அவள் என்னைப் பார்த்து மெலிதாகப் புன்னகைத்தாள்.

பார்வை நிலையிலேயே இருந்த பரிச்சயம் சமீபத்தில்தான் புன்னகைக்கு பதவி உயர்வு பெற்றிருந்தது.

அவள் வேலிக்கு மிக அருகில் வந்து என்னை 'சார்' என்று அழைத்தாள். முதலில் அவள் என்னைத்தான் அழைக்கிறாள் என்று ஊர்ஜிதப்படுத்திக்கொண்டு அவள் பக்கம் திரும்பினேன்.

வேலியின் அந்தப் பக்கம் இருந்தவாறு, "உங்களுக்கு வரவேண்டிய தபால் தவறுதலாக எங்கள் வீட்டுக்கு வந்துவிட்டது..." என்று நீட்டினாள். அது ஒரு புத்தக அஞ்சல். ஒரு வார இதழ்.

'நன்றி' என்றேன்.

பதில் புன்னகையாய் வந்தது.

அவள் காதோரத்தில் தலையில் சூடியிருந்த ரோஜா கண்ணில் பட்டது. வேலியிலிருந்து சற்றுத் தள்ளியிருந்த ரோஜாச் செடியைப் பார்த்தேன். காலையில் அதில் பார்த்த ரோஜா அங்கே இல்லை. அவள் கூந்தலில் ஒய்யாரமாய் உட்கார்ந்திருந்தது.

"என்னுடன் கல்லூரி வரைக்கும் வர முடியுமா...?" சங்கீதமாய் அவள் குரல் ஒலித்தது.

நந்தனம் சிக்னலா அது எங்கே இருக்கிறது? வேகமாக வீட்டை விட்டு வெளியே வந்து இஸ்திரி போட்டுக்கொண்டிருந்த பழனியிடம் 'நந்தனம் சிக்னல் எங்கேயிருக்கிறது?' என்று கேட்டேன்.

"வெங்கட்நாராயணா ரோடுல குடியிருந்துக்கிட்டு, நந்தனம் சிக்னல் எங்கே இருக்குன்னு கேட்ட முதல் ஆள் நீயாதான் இருப்ப. தோ... நேரா போய் முட்டிக்கினா அதான் நந்தனம் சிக்னலு... மவுண்ட் ரோடு...."

"ஓ... அந்த சிக்னல்தானா... சரி...." என்று உள்ளே வந்தேன்.

சென்னைக்கு வந்து இரண்டு மாதங்கள் சரியாக முடியவில்லை. நான் வந்து சேர்ந்தவேளை, நான் வேலை பார்க்கும் தனியார் நிறுவனம் அமைந்திருக்கும் அதே தெருவில், அலுவலகத்துக்கு எதிர் சந்தில் வாடகைக்கு வீடும் கிடைத்துவிட்டது.

வீட்டுக்குக் குடி வந்த முதல்நாள் இரவு எனக்குப் பயமாகவும் வெறுப்பாகவும் இருந்தது. அன்றைய இரவில் தனிமையில் மதுரையை விட்டு வந்துவிட்ட சோகத்தை ஒரு கவிதையாய் வடித்திருந்தேன். மறுநாளே, அதை ஒரு பத்திரிகைக்கு அனுப்பியிருந்தேன்.

நந்தனம் சிக்னல்!

முதலில் என்னால் நம்ப முடியவில்லை. சட்டென்று வியர்த்தது. பதிலுக்காக அவள் காத்திருந்தாள். அவளை நீண்ட நேரம் நிற்க வைக்க முடியாது.

"சரி" என்றேன்.

"ஒன்பது மணிக்கு நந்தனம் சிக்னலில் நில்லுங்கள்" என்று சொல்லிவிட்டு, பூமிக்கு வலிக்குமோ என்பது மாதிரி நடந்து போனாள்.

திடீரென்று எனக்கு 'ஷாக்' அடித்தது.

அது பிரசுரமாகியிருந்த அந்த இதழ்தான் தவறுதலாகப் பக்கத்து வீட்டுக்குப் போய் அந்தப் பெண் மூலம் என் கைக்கு வந்தது. கவிதைக்குக் கீழே என் புகைப்படமும் வெளியாகியிருந்தது.

கொஞ்சம் திருத்தமாய் உடையணிந்து அவள் சொன்ன நந்தனம் சிக்னலில், தொலைபேசி அலுவலக வாசலில்

நின்றிருந்தேன். சரியாக ஒன்பது மணிக்கு வந்து சேர்ந்தாள். நீல நிறத்தில் சுடிதார். வானமே இறங்கி வந்து அவள் உடலைத் தழுவிக்கொண்ட மாதிரி இருந்தது.

அடர்த்தியான செந்நிற ரோஜா அவள் கூந்தலிலிருந்து மீண்டும் என்னைப் பார்த்து கண் சிமிட்டியது.

"போகலாமா..." என்றாள்.


"சரி" என்றேன்.

"எந்தக் கல்லூரி?" என்றேன்.

"எஸ்.ஐ.இ.டி..." என்றாள்.

சரி என்று நான் இடப்பக்கம் திரும்பினேன்.

''எஸ்.ஐ.இ.டி கல்லூரி இந்தப் பக்கம்'' என்று வலது



ப. புகழேந்தி

பக்கம் கையைக் காட்டினாள்.

இரண்டு நாட்களுக்கு முன் என் அலுவலக பியூன், தன் ஸ்கூட்டரில் என்னை அழைத்துக்கொண்டு வந்தபோது, இந்த இடத்தில் இடது பக்கமாகத்தான் திரும்பினான்.

நானோ சென்னைக்குப் புதிது. சொல்பவளோ அழகான இளம்பெண். அதுவும் அந்தக் கல்லூரியிலேயே படிக்கும் பெண். அவள் சொல்வதே உண்மையாக இருக்கலாம். எனவே அவளுடன் நந்தனம் சிக்னலிருந்து வலது பக்கம் திரும்பி நடக்க ஆரம்பித்தோம்.

முதலில் அவள்தான் பேச ஆரம்பித்தாள். பெயர் பூமா. எஸ்.ஐ.இ.டி கல்லூரியில் எம்.ஏ. இலக்கியம். நான் குடியிருக்கும் வீட்டின் பின்பக்கம் பெரியம்மா வீட்டில் தங்கியிருக்கிறாள்.

என் பெயர் 'எழில்' என்றேன்.

"தெரியும்" என்றாள்.

நான் புருவம் உயர்த்தி ஆச்சர்யப் பட்டேன்.

''நீங்கள் கவிதை எழுதுவீர்களா?''

என்னால் புருவத்தை அதற்குமேல் உயர்த்த முடியவில்லை.

''ஆமாம்... உங்களுக்கு எப்படித் தெரியும்...''

"எங்கள் வீட்டுக்கு தவறுதலாக வந்த அந்த வார இதழில், உங்கள் புகைப் படத்துடன் வெளியாகியிருந்த அந்தக் கவிதையைப் படித்தேன்."

எனக்கு இப்பொழுது விளங்

கியது. அவள் அழைத்ததன் காரணம்.

"நீங்கள் மதுரையை விட்டு வந்து விட்ட பிரிவுத் துயரம் அதில் வெளியாகியிருந்தது..."

"ஆமாம்..."

"மதுரைக்காரங்களுக்கு மண் மேல் நிறைய பாசம்..."

"உங்களுக்கு எப்படித் தெரியும்..."

"நானும் மதுரைதான்..."

ஆச்சர்யத்துடன் அவள் முகத்தைப் பார்த்தேன். மூக்குக்கு கீழ் ஒரு வியர்வை மீசை அரும்பியிருந்தது. காலைச்சூரியன் அதில் பட்டு பிரகாசித்தது. ஸ்டிக்கர் பொட்டு அழுத்தமாகவும் திருநீறு நீர்த்துப் போயும் தெரிந்தது. கழுத்தில் ஒரு வெள்ளை முத்துமாலை கௌரவமாய் அமர்ந்திருந்தது.

பேச்சின் சுவாரஸ்யத்தில் நடந்து கொண்டேயிருந்தோம். திடீரென்று பார்த்தால் சைதாப்பேட்டை பஸ் நிலையம் வந்துவிட்டது.

அவள் பதறிப்போய், "சைதாப்பேட்டை வந்துவிட்டதே... நான்தான் தவறுதலாகச் சொல்லிவிட்டேன். வெங்கடநாராயணா ரோடிலிருந்து வந்து நந்தனம் சிக்னலில் இடதுபக்கம்தான் போயிருக்க வேண்டும். மன்னியுங்கள்..." என்றாள்.

"இதில் மன்னிக்க எதுவுமில்லை. நான்தான் அப்போதே சொன்னேனே... உங்கள் கல்லூரியின் கட்டடம் இந்தப் பக்கமும் இருக்கிறதோ என்ற சந்தேகத்தில்தான் உங்கள் கூடவே வந்தேன். நேரமாகி விட்டால் சொல்லுங்கள். ஆட்டோவில் போய்விடலாம்" என்றேன்.

"இல்லை... இல்லை... முதல் வகுப்பு இன்று விளையாட்டுதான். ஆட்சேபணை இல்லையென்றால் நடந்தே போய் விடலாம்..." என்றாள். எனக்கு ஆட்சேபணை இல்லை.

சூரியன்கூட எங்களுக்காகக் கருணை காட்டி தன் வெப்பத்தைக் குறைத்துக் கொண்ட மாதிரி இருந்தது.

மறுபடியும் வந்த பாதையிலேயே திரும்பி நடந்தோம். பேச்சின் சுவாரஸ்யத்தில் எங்களின் இடைவெளி இயல்பாய்க் குறைவதும், பின்பு பழைய நிலைக்கு வருவதுமாய் இருந்தது.

காலை நேரத்து பரபரப்பில் வாகனங்கள் சாலையில் சீறிப் பாய்ந்தது எங்கள் கண்களுக்குத் தெரியவில்லை. அந்தச் சப்தம்கூட எங்களுக்கு இடையூறாக இல்லை.

திடீரென்று அவள் நின்றாள். நான் சற்று அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தேன்.

"மிஸ்டர் மதுரை... ஒரு பெண் வெட்கத்தைவிட்டு அழைத்து, உங்களுடன் பேசிக் கொண்டே நடந்து வருகிறேன். குடிக்க ஏதாவது வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று தோன்றவில்லையா..." பொய்க் கோபம் காட்டினாள்.

நான் "சாரி..." என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டு, பக்கத்திலிருந்த கடையில் இரண்டு பெப்ஸி வாங்கினேன்.

பெப்ஸியை உறிஞ்சிக்கொண்டே நடு வில்,


"சென்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா...?" என்றாள்.

"பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் இருந்துதானே ஆக வேண்டும்..."

"என்னை...?"

எனக்குள் ஒரு மின்னல்.

"பிடிக்காமலா உன் மந்திர



"இதுதான் பூமி உருண்டை... இதோ இந்த இடத்தில்தான் நாம எல்லோரும் நிக்கிறோம்..."

"எங்க அப்பாவும் இதே மாதிரி ஒண்ணு வச்சுக்கிட்டு இங்கேதான் நாம இருக்கோம்னு சொன்னாரே. அது எப்படி...?"

- வசந்தா குருமூர்த்தி

சொல்லுக்குக் கட்டுப்பட்டு... இத்தனை நேரம் உன்னுடன் பேசிக் கொண்டிருக்கிறேன்."

"நான் ஒண்ணும் மந்திரம் போடவில்லையே..." மீண்டும் சிரித்தான். பெப்ஸிக்குக் காசு கொடுத்துவிட்டு நடந்தோம்.

புறப்பட்ட இடமான நந்தனம் சிக்னல் தாண்டி நடந்தே போய் எஸ்.ஐ.இ.டி அடைந்தோம்.

"செல்லமாய் உங்களைக் கொஞ்சம் திட்டலாமா...?" என்றாள் திடீரென.

அதிர்ச்சி அடைந்தாலும் "எதற்கு?" என்றேன்.

"திட்டலாமா..." அழுத்தமாய்க் கேட்டாள்.

"சரி..."

"மண்டூ... வெங்கட்நாராயணா ரோடிலிருந்து நேராக வந்து நந்தனம் சிக்னலில் இடதுபக்கம் திரும்பி வந்தால்தான் எஸ்.ஐ.இ.டி கல்லூரி வரும் என்பது எனக்குத் தெரியாதா? அதுவும் நான் படிக்கும் கல்லூரி. உங்கள் அருகாமையை அதிக நேரம் நீட்டிக்க வேண்டியே மாற்றி வலப்பக்கம் அழைத்துப் போனேன். ஆஃபீசுக்கு நேரமாகிவிட்டது சீக்கிரம் கிளம்புங்கள்..." என்று சிட்டாய்ப் பறந்து போனாள்.

நான் அசடு வழிய அவள் சென்ற திசை நோக்கியே நின்றிருந்தேன்.

இப்போதும், எங்களின் புதிய சான்ட்ரோ காரில் நாங்கள் பயணம் செய்யும்போதெல்லாம், நந்தனம் சிக்னலில் பச்சை விளக்குக்காகக் காத்திருக்கும் தருணங்களில், நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்து வெடிச்சிரிப்பு சிரிப்பது எங்களின் வாடிக்கையாகவே இருக்கிறது! ○



வீட்டில் உள்ள அறைகள் ஒற்றைப் படையில் 1,3,5 என்ற வகையில் இருக்க வேண்டும். மேலும் அறைகள் 1:1 1/4 என்ற நீள அகலத்தில் இருப்பது நல்லது. இனி எந்தெந்த அறைகள் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றித் தெரிந்துகொள்வோம்.

பொதுவாக நம் வீட்டில் பூஜை அறை, வரவேற்பறை, சமையலறை, உணவறை, படுக்கை அறை, படிப்பறை, தியான அறை, தன அறை, தானிய அறை, குளியலறை, கழிவறை ஆகியன இருக்கும். சில வீடுகளில் சில அறைகள் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம்.

பூஜையறை

தெற்கு அல்லது தென்கிழக்குத் திசை தவிர எந்தத் திசையில் வேண்டுமானாலும் பூஜையறையை அமைத்துக் கொள்ளலாம். தெற்கு பார்த்து இல்லாமல் வடகிழக்குப் பகுதியில் அமைப்பது மிகவும் நல்லது. இப்படி அமைக்கப்பட்ட பூஜையறைக்கு அருகிலோ அல்லது மேல் பகுதியிலோ கழிப்பிடம் அமைக்கவே கூடாது. பல வீடுகளில் இந்த அறைக்கு ஒற்றைக்கதவை வைத்து விடுகிறார்கள். இது வாஸ்துபடி தவறு. கண்டிப்பாக இரண்டு கதவுகள் அமைக்க வேண்டும். அந்தக் கதவுகளும் மரத்தால் இருப்பது

பூஜையறை நிபந்தனைகள்!



கேளுங்கள்...

எங்கள் வீட்டு நிலைக்கதவில் கரையான் பிடித்திருக்கிறது. இது நல்லதா, கெட்டதா?

– ஆர். வசந்தா, பொள்ளாச்சி

கரையான் பிடித்திருப்பது கண்டிப்பாக தோஷம்தான். இதை உடனடியாக சுத்தப்படுத்திக் கொள்வது மிகவும் நல்லது.

எங்கள் வீட்டில் ஈசான்ய மூலையில் தண்ணீர்த்தொட்டி அமைந்துவிட்டதால் அதைப் பயன்படுத்தாமல், வேறொரு பக்கத்தில் புதிதாகக் கட்டி பயன்படுத்தி வருகிறோம். பழைய தொட்டியை என்ன செய்வது?

– வைத்தியநாதன், சென்னை

பழைய தொட்டியை உடனடியாக உடைத்து விடுவது மிகவும் நல்லது. அதை அப்படியே புழங்காமல் வைத்திருப்பது தோஷத்தைத் தரும்.

...சொல்கிறேன்!

அதிர்ஷ்டத்தை அளிக்கும். இந்த பூஜை அறையில் உடைந்த பொருட்கள், கிழிந்த படங்கள், செல்லரித்துப்போன படங்கள் ஆகியவற்றை மாட்டவோ, வைத்திருக்கவோ கூடாது. நாம் வணங்கும்போது வடக்கு/கிழக்கு நோக்கி வணங்குவது நல்லது. இந்த அறைக்கு வெளிர் நிறத்தில் வண்ணம் பூசுவது சிறப்பைத் தரும்.

வரவேற்பறை

தென்கிழக்குத் திசை தவிர எந்தத் திசையில் வேண்டுமானாலும் வரவேற்பறை அமைத்துக் கொள்ளலாம். ஒருவேளை வடகிழக்குத் திசையில் வரவேற்பறை அமைந்துவிட்டால் அந்த இடத்தில் அதிக நாற்காலிகள், சோபாக்கள் போடப்படக்கூடாது. மேலும், அந்த வரவேற்பறைக்குள் படியேறிச் செல்வதுபோல இருக்கக்கூடாது. பயங்கர உருவம் கொண்ட மிருகங்களின் படங்கள், பேய்ப் படங்கள் ஆகியவற்றை வரவேற்பறையில் மாட்டுவது தோஷத்தைத் தரும். வரவேற்பறைக்கு நுழைவாயில் இருந்தால் அது தெற்கு பார்த்து இருக்கக்கூடாது.

சமையலறை

தென்கிழக்கு அல்லது வடமேற்கில் சமையல் அறை அமைத்துக் கொள்வது நல்லது. அதேபோல தென்மேற்கு அல்லது வடகிழக்கில் அமையவே கூடாது. சமையல் செய்யும் அடுப்பு கிழக்கு சார்ந்த மேடையில் மட்டுமே அமைக்கப்பட வேண்டும். சமைப்பவர் கிழக்கு பார்த்து சமைப்பது நல்லது. சமையலறையில் இருக்கும் வாஷ்பேசின் தென்கிழக்கில் அமையாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். சமையலறையில் வெள்ளை அல்லது கறுப்பு நிறத்தில் வண்ணம் பூசக்கூடாது.

உணவறை

சமையலறை அருகில் உணவறையை அமைத்துக் கொள்வது நல்லது. தென்கிழக்கில் சமையலறை இருந்தால் தெற்கிலும், வடமேற்கில் இருந்தால் மேற்கிலும் உணவறை அமைத்துக்கொள்வது நல்லது. உணவறையில் போடப்படும் டைனிங் டேபிள் சதுரம் அல்லது செவ்வகமாக இருக்க வேண்டுமே தவிர வட்ட வடிவமாகவோ அல்லது ஓவல் வடிவத்திலோ இருக்கக்கூடாது. உணவறைக்கு வெளிர் நிறத்தில் வண்ணம் பூசுவது மிகவும் நல்லது. இந்த உணவறையில் யாருமே தெற்குத் திசை பார்த்து சாப்பிடக் கூடாது.

மற்ற அறைகள் பற்றி வரும் வாரங்களில் பார்ப்போம்.

(வாஸ்து வளரும்)

படம்: ஸ்ரீஹரி

காஞ்சி கிருஷ்ணா



மீண்டும் சந்திப்போம்!

• ப.பெருமாள்



'தாத்தா - பாட்டி முதியோர் இல்லத்தில்; அப்பா நியூஸெர்ஸியில்; அக்கா ஹாஸ்டலில்; அம்மா மட்டும் என்னோடு' என்கிற ரீதியில்தான் இன்றைய இந்திய நவீனக் குடும்பங்கள் உள்ளன. கூட்டுக்குடும்பம் என்பது அருங் காட்சியகத்திலிருக்கும் ஒரு பழைமையான நினைவுச் சின்னம் போலாகிவிட்டது.

உறவுகளைத் தேடிச் சென்று பார்க்கக் கூட நேரமில்லாது போய்விட்ட வேகமான வாழ்க்கைச் சூழலில், குமரி மாவட்டம் மயிலாடியில், ஒரு குடும்பம் அதன் 304 உறுப்பினர்களையும் அழைத்து குடும்ப விழா கொண்டாடுகிறதென்றால் ஆச்சர்யம்தானே!

"வல்லியபெருமாள் நாடார் - வள்ளியம்மாள் தம்பதிதான் எங்க குடும்பத்தோட மூலம். அவரை வெறுமனே குடும்பத் தலைவரா மட்டும் பார்க்க முடியாது. சமூக சிந்தனையாளர்னு சொன்னா பொருத்தமா இருக்கும். அவரோட காலத்துல தாழ்த்தப்பட்டோர் சிவன், விஷ்ணு கோயில்களுக்கெல்லாம் போக முடியாது. இதற்காகவே இருளப்புரத்தில் சிவன்கோயில் கட்டி, தம் இனத்து மக்களோடு ஆலயப் பிரவேசம் செய்தவர். அத்தோட கள்ளுக்கடை மறியல், மதுவிலக்குப் போராட்டம், தோள் சீலை போராட்டம் இதிலெல்லாம் கலந்துகொண்டு போராடியவர்" என்று பெருமாள் பேசத் தொடங்க, அவரது



– ஓர் ஆச்சர்ய சங்கமம்

துணைவியார் தமிழ்ப்பூங்கொடி துணைக்கு வந்தார்.

"எங்க குடும்ப உறவுகள் குமரி மாவட்டம் மட்டுமில்லாம இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்கள், வெளிநாடுகள் என்று வாழ்ந்து வருகின்றனர். குடும்பத்திலுள்ள சொந்தங்களை இளைய தலைமுறைகள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும், அனைவரும் சந்திக்க வேண்டும் என்பதற்காகவும்தான் போன வருஷம் 'சங்கமம் 2005' என்ற பெயரில் குடும்ப விழாவை நடத்தினோம். வல்லிய பெருமாள் - வள்ளியம்மாள் சமாதியில் கூடி பிரார்த்தனை செய்து, விழாக் கூடத்துக்குத் திரும்பி உறவுகள் ஒன்று கூடிய மகிழ்ச்சியைக் கொண்டாடினோம். தொடர்ந்து, நாங்க வருஷா வருஷம் சந்திக்கணும்ங்கிறதுதான் எங்க விருப்பம்" என்றார் மகிழ்ச்சி பொங்க.

"இந்த வருஷ குடும்ப விழா வெறும் விழாவா இல்லாம சமூகப் பணியும் செய் பணும்னு முடிவெடுத்து எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கண்தானம் செய்ய முன் வந்துள்ளோம். அதேபோல அடுத்த குடும்ப விழாவுல அதிகளவு இரத்த தானம் செய்தவர்களுக்கு, டாக்டர் சுந்தர்ராஜன் - டாக்டர் தேன்மொழி தம்பதி, தங்கள் சொந்தச் செலவில் கேடயம் வழங்கப் போறாங்க. எங்க குடும்பத்தைச் சேர்ந்த இன்னொரு மருத்துவ தம்பதிகளான இராஜேந்திரன் - தமிழ்க்கொடி தம்பதி குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் நோய்வாய்ப்பட்டால் இலவச மருத்துவ சேவை செய்ய முடிவெடுத்திருக்கின்றனர். தாத்தாவோட 125-வது பிறந்த தினத்துல அவருக்குச் சிலை வைக்கிறதா இருக்கோம்" என்று தமிழ்ப் பூங்கொடி விடாமல் பேச புன்னகையாலேயே ஆமோதித்தார் ப.பெருமாள்.

- தாகூர்



சக்சஸ் ஸ்டோரி

இதுதான் எங்கள்

• விஜயகுமார்





சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்த நோக்கியா கம்பெனியின் தலைமை அதிகாரிக்கு அமைச்சர் தயாநிதி மாறன் பரிசளிக்க விரும்பியது தஞ்சாவூர் ஓவியங்கள். அதற்காக அவர் அணுகிய இடம் - சென்னை மைலாப்பூரிலுள்ள குருபரன் தஞ்சாவூர் ஆர்ட் கேலரி. பிரத்யேகமாக தஞ்சாவூர் ஓவியங்களுக்கென்று தனித்து இயங்கும் ஓர் அழகிய கலைக்கூடம். இதன் நிறுவனர் விஜய்குமார் நம்மிடம் பேசியது அவரது ஷோரூமின் வெற்றிக்கதையை மட்டுமல்ல; தஞ்சாவூர் ஓவியத்தின் மகிமையையும் பற்றியும் தான்.

"தஞ்சாவூர் ஓவியம் என்பது தமிழர்களின் அடையாளம். ராஜராஜசோழனுடைய ஆட்சிக் காலத்தில் தஞ்சாவூரில் முதன் முதலில் இந்தக் கலை உதயமானது. பிறகு சரபோஜி மஹாராஜாவால் மேன்மை பெற்றது.

புகைப்படங்களுக்குச் சட்டம் அமைப்பதுதான் எங்களது பூர்வீகத் தொழில். எண்பது வருடங்களுக்கு முன்பு மைலாப்பூர் குளத்துக்கருகே குருபரன் பிரேமிங் வொர்க்ஸ் என்ற கடையை ஆரம்பித்தோம். நாளடைவில் நானும் இத்தொழிலில் இறங்கி மெல்ல மெல்ல அதன் வித்தைகளைக் கற்றுக்கொண்டேன். 1988-ம் வருடம் குமாரராணி மீனா முத்தையா பயிலகத்தில் தஞ்சாவூர் பெயிண்டிங் பற்றிய மூன்று வருட டிகிரி கோர்ஸ் ஒன்றைப் படித்தேன். அப்போது தஞ்சாவூர் ஓவியம் பற்றிய செய்முறைகள் வேறு. பலா மரத்தை அறுத்து துண்டுகளாக்கி பலகை செய்து... இதன் ஆரம்ப வேலையே ஒரு வாரம் பிடிக்கும். இப்போது இதற்கு மாற்றாக வாட்டர் ஃப்ரூப் பிளைவுட் பலகைகள் வந்துவிட்டன.

"நான் ஆரம்பத்தில் தஞ்சாவூர் ஓவியங்களைக் கடைகடையாக ஏறி விற்பேன். அப்போது அவ்



வளவாக மக்கள் வரவேற்பு அளிக்கவில்லை. அது ஓர் ஆச்சர்யப்பொருளாக மட்டுமே இருந்து வந்தது. 98-ஆம் வருடம் மைலாப்பூரில் குமரகுரு ஆர்ட் கேலரியை ஆரம்பித்தோம். அமரர் மூப்பனாரின் கரங்களால் திறந்துவைக்கப்பட்டது. அச்சமயம், தஞ்சாவூர் ஓவியத்துக்குத் தேவையான ஜெய்ப்பூர் கற்களை வடநாட்டிலிருந்து வரவழைத்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் ஜெய்ப்பூரில் ஒரு ஃபேக்டரி திறந்து, தஞ்சாவூர் ஓவியத்துக்குத் தேவையான பொருள்கள் அனைத்தையும் குறைந்த விலையில் விற்று வருகிறோம்.

வெண்ணைத் தாழி கிருஷ்ணன், கஜலக்ஷ்மி, ராமர் பட்டாபிஷேகம் போன்ற குறிப்பிட்ட படங்களுக்குத்தான் தஞ்சாவூர் ஓவியங்கள் பெரும்பாலும் வரையப்படுகின்றன. இப்போது பெருமாள், ராகவேந்திரா, ஷீரடி பாபா ஓவியங்களும் இடம்பெறுகின்றன. அபிநயத்தோடு படம் வரைவது முக்கியம். தஞ்சாவூர் ஓவியத்தை யார் பார்த்தாலும் அவர்களது முகம் தாமரையாக மலர வேண்டும். இதனால் ஒவ்வொரு ஓவியமும் சிரத்தையோடும் பொறுமையோடும் வரையப்படுகிறது. இது முழுக்க முழுக்க கைவினைக் கலைஞர்களுக்கான தொழில். இயந்திரங்களின் பயன்பாடு அறவே இல்லாதது. இதன் இன்னொரு சிறப்பம்சம்.



சாதனை!

தஞ்சாவூரில் தோற்றுவிக்கப்பட்ட இந்தக் கலை, இப்போது தஞ்சாவூரில் அடியோடு இல்லை. நல்ல சம்பளம் வேண்டி கலைஞர்களெல்லாம் சென்னைக்கு இடம் பெயர்ந்துவிட்டனர். தமிழ்நாட்டுக்குள் மட்டும்தான் இந்த ஓவியங்களைப் பெருமளவில் சந்தைப்படுத்த முடியும். இந்தக் கலையை நம்பி நாலாயிரம் பேர் உள்ளனர். அனைவருக்கும் குறையில்லாமல் வாழ்வளித்துக் கொண்டிருக்கிறது. கலிஃபோர்னியா மற்றும் மேலை நாடுகளிலுள்ள இந்து ஆலயங்களில் எங்களுடைய தஞ்சாவூர் ஓவியங்கள் மின்னிக் கொண்டிருப்பதே எங்களின் சாதனை.

இன்றைக்கு விழாக்களுக்குக் கொடுக்க வேண்டிய சிறந்த பரிசாக தஞ்சாவூர் ஓவியங்கள் பிரசித்தி பெற்றுள்ளன. இதன் விலை நூற்றைம்பது ரூபாயிலிருந்து இரண்டரை லட்சம் வரை உள்ளது.''

- சநகன்

படங்கள்: **பப்பி**



விபத்து!

குறுகலான அந்தத் தெருவுக்குள், பாதித் தெருவை ஆக்கிரமித்துக் கொண்டு, நீள வசத்திலும் குறுக்கு வசத்திலும் காலிக் குடங்கள் அணிவகுத்திருந்தன. அத்தனை குடங்களுக்கும் ஈர்ப்பு மையமாய், நீர் வற்றிப்போன ஒரு கார்ப்பரேஷன் குழாய். அந்தக் குழாயிலிருந்து ஏதாவது ஈரம் கசிகிறதா என்று ஜாடை மாடையாய் நோட்டம் விட்டவாறு பல ஜோடி வியர்த்த விழிகள். ஆரவாரமில்லாமலிருந்த அந்தத் தெருவில் பரபரப்பைக் கிளப்பிக் கொண்டு ஒரு சைக்கிள், அந்தப் பிரதேசத்தில் பிரவேசித்தது. சைக்கிள்காரப் பையன் பேப்பர் விற்கிறவன் தலைப்புச் செய்தியைக் கூவுகிற மாதிரி உரத்த குரலில் ஒலி பெருக்கிக்கொண்டு வந்தான். "அக்கா, நம்ம தெரு சின்னராசு லாரி ஏறி செத்துப் போய்ட்டான்... பெரியம்மா, தண்ணி லாரி ஏறி சின்னராசு செத்துப்போய்ட்டான்... கடைக்காரச் செட்டியாரே, ஒங்கிட்ட பீடி வாங்குவானே அந்த சின்னராசு, அண்ணா ஆர்ச் சிக்னல்ல பாடி கெடக்கு. செல்லம்மக்கா, ஓங்க சொந்தக்காரப் பய சின்னராசுதான். சைக்கிள் நசுங்கி ரோட்லயே கெடக்கு."

சில விநாடிகளில் தெருவே காலியாகி விட்டது, காலிக் குடங்களை அனாதரவாய் விட்டுவிட்டு. செல்லம்மாவும் போனாள்.

செத்துப்போன சின்னராசு தனக்கு என்ன உறவு என்று மனக்கணக்குப் போட்டபடியே கும்பலோடு கும்பலாய் நடந்தாள். இவளுடைய பெரியம்மாவோட மூத்த மகளைக் கட்டிக்கொடுத்த வீட்டில், அந்த மாமனாருடைய தம்பியுடைய சம்பந்தியுடைய... வேண்டாம் ரொம்ப தூரமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. குழாயடியில் நிற்கிறபோது ரெண்டு, மூணு முறை இவளைப் பார்த்துப் பல்லைக் காட்டியவன் என்பது மட்டும் நினைவுக்கு வந்தது.

விபத்து நடந்த இடத்தில் கூட்டம் ஏறிக் கொண்டேயிருந்தது. சின்னராசுவின் உடல் ஒரு துணியால் முழுமையாய்ப் போர்த்தப்பட்டுக் கிடந்தது. உடலின் தலைமாட்டில் தண்ணீர் டாங்கரின் ஒரு சக்கரம். பக்கத்திலேயே உருக்குலைந்து போன சைக்கிள் ஒன்று. செத்துப் போனவனின் அம்மாவும் அக்காமாரும் தலையிலும் நெஞ்சிலும் அறைந்து கொண்டு அழுதார்கள். அந்தத் தெருக்கார ஆண்கள் சிலர், பிணத்தைத் தரச் சொல்லிப் போலீஸ் அதிகாரிகளோடு வாதிட்டுக் கொண்டிருக்க, சின்னராசுவை உரிமை கொண்டாடிக் கொண்டு வந்த கட்சித் தொண்டர்கள் சாலை மறியலில் ஈடுபட்டார்கள்.

போர்வை போர்த்திய உடல், நசுங்கிப் போன சைக்கிள், கொலைகாரத் தண்ணீர் லாரி எல்லாவற்றையும் செல்லம்மா மாறி மாறிப் பார்த்தாள். அந்த ராட்சச லாரியில் அவளுடைய கண்கள் நிலைகுத்தி நின்றன. கும்பலுக்குள் புகுந்து தண்ணீர் லாரியைச் சமீபித்தாள். மீசையில்லாத போலீஸ்காரர் ஒருவர் லாரிக்குப் பக்கத்தில் நின்றிருந்தார். போலீஸ் என்றால் செல்லம்மாவுக்குக் கொஞ்சம் கிலிதான்

ஏ.ஏ.ஹெச்.கே. கோரி

என்றாலும், இந்த போலீஸ்காரருடைய அபூர்வமான மீசையில்லாத தோற்றம் ஒரு தோழமையைத் தோற்றுவித்தது.

அந்த போலீஸ்காரரை இன்னும் சமீபித்து, 'ஏட்டைய்யா' என்று மெல்ல அழைத்தாள். அவர் சுற்று முற்றும் பார்த்துவிட்டு, அழைத்தவள் இவள்தான் என்றறிந்து 'என்னையாம்மா கூப்ட்ட' என்றார்.

"யார்ம்மா நீ, செத்துப் போனவனைத் தெரியுமா ஒனக்கு?"

"ஆமா ஏட்டைய்யா, எங்களுக்குச் சொந்தந்தான்."

"பாடியப் பாத்தியா? பாத்துட்டன்னா கௌம்பி வீடு போய்ச் சேரு."

"ஏட்டைய்யா ஒங்கட்ட ஒரு சமாசாரம் கேக்கணும்."

"அது சரி, கத பேசற நேரமாம்மா இது? ஏட்டைய்யான்னு டபக்னு எனக்கு ப்ரமோசன் குடுத்துட்ட, ஒன்னத் திட்டவும் முடியாது. இன்னா சமாசாரம் சொல்லு."

"இந்த லாரி டிரைவரும் க்ளீனரும் எங்க ஏட்டைய்யா?"

"எஸ்கேப் ஆய்ட்டானுவ. விட்டுடுவமா? நைட்டுக்குள்ள தூக்கிப்போட்டுட்டு வந்துட மாட்டோம்! சரி, நீ எடத்தக் காலி பண்ணு."

"சமாசாரத்த இன்னும் நா கேக்கவே இல்லியே ஏட்டைய்யா?"


"இன்னா கேக்கப் போற? பாடி எப்ப தருவாங்கன்னு கேப்ப. அதெல்லாம் போஸ்ட்மார்ட்டம் முடிஞ்சு நைட் தான் குடுப்பாங்க. போதுமா? சரி, கௌம்பு."

"அதில்ல ஏட்டைய்யா. வேற ஒரு சமாசாரம்."

"இன்னாமா ரோதனையாப் போச்சு. ஏ.ஸி வர்ற நேரம். சட்டுபுட்னு சொல்லு. இன்னா மேட்டர்?"

"ஏட்டைய்யா, இந்தத் தண்ணி லாரில ரெண்டே ரெண்டு கொடம் தண்ணி புடிச்சிக்கலாமா ஏட்டைய்யா?"

●



பின்தங்கிய கிராமமான மண்மங்கலம் என்ற சிற்றூரில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் காளிமுத்து. ஸ்டேட் பாங்க், எல்.ஐ.சி ஆகியவற்றில் கிடைத்த வேலைகளை உதறிவிட்டு, மிடுக்கான காக்கி சீருடை மீது கொண்ட காதலால் 72ம் ஆண்டு சிவில் சர்வீஸ் தேர்வு எழுதி தமிழ்நாட்டிலேயே வேலைக்கு வந்தவர் காளிமுத்து. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், பல்வேறு பொறுப்புகளிலும் திறமையுடன் பணியாற்றி, நேர்மையான போலீஸ் அதிகாரி என்று பெயர் எடுத்தவர். சென்னை மாநகர காவல்துறை ஆணையாளராக மூன்றரை ஆண்டுகளும், கூடுதல் காவல்துறை இயக்குநராக சுமார் எட்டாண்டுகளும் பணியாற்றிவிட்டு கடந்த மாத இறுதியில் ஓய்வு பெற்று விட்டார். காளிமுத்து, கல்கிக்காக மனம் திறந்து பகிர்ந்துகொண்டவை.

"நான் பழிவாங்கப்பட்டேன்..."

காளிமுத்து பேட்டி

"விருதுநகரில் துணைக் கண்காணிப்பாளராகப் பணியாற்றியபோது, அந்த வியாபார நகரத்தில், பலர் உணவுப் பண்டங்களில் கலப்படம் செய்வதாக நிறைய புகார்கள் வந்தன. நானே சில நாட்களில், ரிக்ஷா ஓட்டி போல பொது இடங்களில் இருந்துகொண்டு கலப்பட ஆசாமிகள் குறித்த விவரங்களைச் சேகரித்தேன். அதன்பின் மிகவும் கச்சிதமாகத் திட்டமிட்டு நகரின் பல்வேறு பகுதிகளிலும் இயங்கிவந்த கலப்படத் தொழிற்சாலைகளில் நள்ளிரவில் ரெய்டு நடத்தினோம். மத் தூளில் கலப்படம் செய்யும் மரத்தூள், எண்ணெய்களில் கலப்படம் செய்யும் ஆமணக்கு எண்ணெய் உள்ளிட்ட ஏராளமான கலப்படக்காரர்கள் பயன்படுத்தும் பொருள்களைப் பறிமுதல் செய்தோம். தனியா மூட்டைகளிலிருந்து, கொஞ்சம் தனியாவை எடுத்துவிட்டு, மூட்டைக்குள் கந்தகத்தை வைத்து, தண்ணீர் தெளித்து எடையை அதிகரித்துப் பிறகு காயவைத்து எடையில் ஏமாற்றியதும் தெரியவந்தது. ஆறுகளில் இருந்து சல்லடை போட்டு அரிசியின் அளவில் கற்களைச் சேகரித்து அரிசியில் கலந்து கொள்ளை லாபம் அடித்த கொடுமையும் வெளிச்சத்துக்கு வந்தது. பக்காவாக கேஸ் தயார் செய்து, சிவில் சப்ளை பிரிவினரிடம் ஒப்படைத்தோம். அப்போதைய காவல்துறை உயர் அதிகாரியான ஸ்டிரேசி எனது பணியை மிகவும் பாராட்டினார்.

தமிழ்நாட்டில் விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி அளிக்க வேண்டும் என்று ஒரு சட்டம் உண்டு. ஆனால், அதனை தஞ்சைப் பகுதி நிலச்சுவான்தார்கள் அமல்படுத்தாமல் இருந்தார்கள். அதன் காரணமாக அடிக்கடி மோதல்கள் நிகழ்ந்தன. நேரடியான மோதல்கள் தவிர நிலச்சுவான்தார்கள் வைக்கோல் போரில் தீ வைப்பு, பயிர்கள் அழிப்பு போன்ற பிரச்னைகளையும் சந்திக்க வேண்டியிருந்தது. நான் கிழக்கு தஞ்சை மாவட்டத்துக்குப் பொறுப்பேற்றுக் கொண்டதும், குறைந்தபட்ச கூலிச் சட்டம் முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும் என்று அறிவித்தேன். அப்படி அமல்படுத்தும் நிலச்சுவான்தார்களுக்கு போலீஸ் முழு பாதுகாப்பு அளிக்கும் என்று உறுதி அளித்தேன். நான் பொறுப்பேற்றுக் கொண்டதும், கிசான் இன்ஸ்பெக்டர்களை முழு வீச்சில் செயல்பட வைத்தேன். விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஒழுங்காகக் கூலி கிடைத்தது. நிலச்சுவான்தார்களும் நிம்மதியாக வாழ்ந்தார்கள். கிழக்கு தஞ்சையிலிருந்து நான் மாற்றலானபோது இரு தரப்பினருமே என்னைப் பாராட்டியது மறக்க முடியாத ஒன்று. கம்யூனிஸ்ட் சட்டமன்ற உறுப்பினரான உமாநாத் சட்டமன்றத்திலேயே என்னைப் பாராட்டிப் பேசினார்.

கோவை சரக டி.ஐ.ஜியாக நான் பணியேற்றுக் கொண்டவுடன், சந்தனக் கடத்தல் வீரப்பன் தன்னுடைய சமூக விரோத செயல்களுக்கு இடையூறாக இருந்த நேர்மையான வனத்துறை அதிகாரியான சிதம்பரத்தை அநியாயமாகக் கொன்று ஒரு வருடமாகியும் வழக்கில் ஒரு முன்னேற்றமும் இல்லை என்று அவரது குடும்பத்தினர் முறையிட்டனர். உடனே நான் வீரப்பன் இயங்கி வந்த தமிழகத்தின் எட்டு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்களை அழைத்து, வீரப்பன் பிரச்னை குறித்து விவாதித்தேன். நானே அந்த எட்டு மாவட்டங்களின் காட்டுப்பகுதிகளிலும் சுற்றி பல தகவல்களைச் சேகரித்தேன். வீரப்பனுடன் முதன்முறையாக ஒரு நேரடி மோதல் நடத்தி, அவனது முக்கிய ஆட்கள் மூன்று பேரைக் கொன்றதுடன், நூறு டன்னுக்கும் அதிகமான சந்தனக் கட்டைகளைக் கைப்பற்றினோம். 98ல் நடந்த என்கவுன்ட்டரில் வீரப்பனின் நெருங்கிய சகாவான பேபி வீரப்பனும், அதன் பின் இன்னொரு என்கவுன்ட்டரில் இன்னொரு முக்கிய நபரான மாதையனும் கொல்லப்பட்டனர். மேலும் வீரப்பனின் ஆட்கள் இருபத்தி ஐந்து பேர் சரண் அடைந்தனர். அவர்களிடமிருந்து நாட்டுத் துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன.

இந்த நடவடிக்கைகளில் துணைக் கண்காணிப்பாளர்கள் பாஸ்கரன், கந்தசாமி ஆகியோருக்கு முக்கிய பங்கு உண்டு. அப்போதுதான் நான் வீரப்பனை பிடிப்பது என்பது அத்தனை சுலபமான காரியமில்லை; அதற்கென கர்நாடக மாநிலத்தில் இருப்பதுபோல ஒரு சிறப்பு காவல் படை அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்று அரசாங்கத்துக்குப் பரிந்துரை செய்தேன்.

வீரப்பன் கொல்லப்பட்டதில் ஒரு காவல்துறை அதிகாரி என்ற முறையில் நான் பெருமைப்படுகிறேன் என்றாலும், ஆரம்ப காலத்தில் வீரப்பனுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு சாதனைகள் புரிந்த காவல்துறையினரை எந்தவிதமான கௌரவமும், பரிசும் இல்லாமல் அரசியல் காரணங்களுக்காக முந்தைய அரசு புறக்கணித்ததில் எனக்கு மிகவும் வருத்தம்தான். அதிரடிப்படை அதிகாரிகள் வீட்டில் உபரி வேலை பார்த்தவர்களுக்கெல்லாம் விருது கிடைத்ததைப் பார்த்தபோது, எனக்கு ரொம்ப வருத்தமாக இருந்தது.

எனது முப்பத்தைந்து வருட காக்கிச் சீருடை வாழ்க்கையில் அச்சமின்றி, நேர்மையாக, நாணயமாக, எந்தவிதமான நிர்ப்பந்தங்களுக்கும் உட்படாமல் சட்டத்துக்குட்பட்டு பணிபுரிந்த திருப்தி எனக்கு இருக்கிறது. தி.மு.க ஆட்சிக் காலத்தில் ஒன்றரை ஆண்டுகாலம் சட்டம் ஒழுங்கு காவல்துறை தலைவராகவும் மூன்றரை ஆண்டு காலம் நான் சென்னை மாநகர காவல் துறை கமிஷனராகவும் பணியாற்றினேன். அடுத்து வந்த அ.தி.மு.க ஆட்சியில் என்னை வெகு சாதாரணமான ஊர்க்காவல் படைத் தலைவர் பதவிக்கு மாற்றியதும் அதிலேயே நான் கரை ஆண்டுகள் வைத்திருந்ததோடு மட்டுமின்றி, எனக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வையும் தராமல் நிறுத்தி வைத்துக் காரணமில்லாமல் நான் பழிவாங்கப்பட்டேன் என்றே நினைக்கிறேன்.

- எஸ். சந்திரமௌலி

படம்: **ஸ்ரீஹரி**



தட்டுப்பாடு தவிர்க்கப்படுமா?

"மக்கள் நல்வாழ்வுத்துறையில் புரட்சித்தலைவி அரசு செய்த சாதனைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்" என்கிறார் அ.தி.மு.க அரசில் அந்தத் துறைக்கு அமைச்சராக இருந்த தளவாய் சுந்தரம்.

"போலியோ முகாம்களை தொடர்ந்து நடத்தி தமிழ்நாட்டில் அந்த நோயை விரட்டி அடித்தோம். கிராமப்புற மருத்துவமனைகளின் தரம் உயர்த்தப்பட்டு 30 படுக்கை வசதிகள் செய்யப்பட்டது. அதே போல சுமார் 500 கோடி ரூபாய் செலவில் தாலுகா, பேரூராட்சி பகுதிகளில் உள்ள மருத்துவ மனைகளின் தரம் உயர்த்தப்பட்டு, வசதிகள் அதிகமாக்கப்பட்டன. சுமார் 2200 டாக்டர்கள் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணி ஆணை கொடுக்கின்ற சமயத்தில் தேர்தல் வந்து விட்டது. சர்வீஸ் கமிஷன் தேர்வு முறை தாமதமானதால், உடனடி தேவையை நிறைவேற்றத்தான் தொகுப்பூதியத்தில் டாக்டர்களை நியமித்தோம். தமிழ்நாட்டில் தொழுநோயை அறவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இப்போது சுமார் 5200 தொழுநோயாளிகள்தான் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள்! மருத்துவமனைகளுக்கு வேண்டிய நவீன கருவிகள், உபகரணங்கள் வாங்க தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸஸ் கார்ப்பரேஷன் ஏற்படுத்தப்பட்டது. 107 கோடி ரூபாய் செலவில் தேனி மருத்துவக் கல்லூரியைக் கொண்டு வந்தது. மிகப்பெரிய சாதனை. இதற்குப் பல தடைகள். ஆனால் சுப்ரீம் கோர்ட் வரை சென்று போராடி மெடிக்கல் கவுன்ஸில் அங்கீகாரம் பெற்றோம். இப்போது வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள 100 பேருக்கு அங்கே சீட் கிடைக்கிறது. இது தவிர தமிழ்நாட்டில் உள்ள மற்ற மருத்துவக் கல்லூரிகளிலும் சீட் எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் சிகரமாக ஒரு விஷயத்தைச் சொல்லலாம். அதாவது சில குழந்தைகளுக்கு பிறக்கும்போதே வாயில் 'அன்னப் பிளவு' என்ற குறைபாடு தோன்றும். அது போன்ற குழந்தைகளை அறுவை சிகிச்சை மூலம் சரிசெய்ய முடியும். அந்த வகையில் சுமார் 5600 ஏழைக் குழந்தைகளுக்கு இந்தக் குறைபாட்டை இலவச சலுகை சிகிச்சை மூலம் சரி செய்திருக்கிறோம். புதிய அமைச்சருக்கு உள்ள சவால், தமிழ்நாட்டில் உள்ள எல்லா மருத்துவமனைகளிலும் தட்டுப்பாடில்லாமல் மருந்துகள் கிடைக்க ஏற்பாடு செய்வதுதான்!" என்கிறார் தளவாய் சுந்தரம்.



• தளவாய் சுந்தரம்

மக்கள் நல்வாழ்வுத்துறை

சவாலே சமாளி!



சவாலே சமாளி!

புதிய நல்வாழ்வுத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், பிஸியோ... பிஸி தினசரி ஒரு மருத்துவமனைக்காவது விஸிட் செய்து மக்கள் குறைகளைத் தெரிந்து கொள்கிறார். 'சவாலை சமாளிப்பீர்களா?' என்றோம்.... சளசளவென்று கொட்ட ஆரம்பித்துவிட்டார்.

"நான் பதவியேற்ற இந்த ஒரு மாதத்தில் துறை அதிகாரிகளிடம் பேசி, நிர்வாகத்தில் உள்ள பிரச்னைகளை முதலில் புரிந்து கொண்டேன். அதன் பின் பல மருத்துவமனைகளுக்கு விஸிட் செய்தேன். தமிழ்நாட்டில் ஆங்காங்கு சில மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாடு இருப்பதாகச் செய்திகள் வந்தன. அதேபோல் நாய்க்கடி மருந்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். முதல்வர் கலைஞர் வழிகாட்டுதலின் பேரில், தட்டுப்பாடுகளை நீக்க உடனடி நடவடிக்கைகள் எடுத்தோம். இப்போது தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேஷனே மருந்துகளைக் கொள்முதல் செய்து விநியோகிக்க உத்தரவு போட்டுள்ளோம். அதேபோல கிராம அளவில்கூட எக்ஸ்ரே, ஈ.சி.ஜி. உபகரணங்கள் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கலைஞர் அரசின் நோக்கம் சாதாரண எளிய மக்களுக்கும் உயர்தர மருத்துவ வசதிகள், அவர்களது இருப்பிடத்துக்கு அருகிலேயே கிடைக்க வேண்டும் என்பதுதான். அதேபோல் கடந்த அரசில் தொடங்கப்பட்ட, நடந்த நல்ல திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவோம் என்று முதல்வர் சொல்லியிருக்கிறார். மேலும் மக்களுக்கு உதவாத, ஆடம்பரமான திட்டங்களை மறுபரிசிலனை செய்வோம்.

நாங்கள் பதவியேற்றவுடன் சர்வீஸ் கமிஷன் தேர்வு செய்து வைத்திருந்த 1500 டாக்டர்களுக்கு, பணி ஆணை கொடுத்திருக்கிறோம். இதில் எந்தவித மனக்குறையும் யாருக்கும் இல்லாமல், புகார் வராமல் செயல்பட்டிருக்கிறோம். எந்த மருத்துவமனையிலும் டாக்டர்கள் இல்லாத குறைபாடு இருக்கக் கூடாது என்று முனைப்புடன் செயல்படுகிறோம். இதுதவிர ஆண், பெண் செவிலியர்கள், மருந்தாளுனர்கள் என்று எல்லா பணியிடங்களையும் பூர்த்தி செய்ய கலைஞர் ஆணையிட்டிருக்கிறார். கலைஞர் தேர்தல் அறிக்கையில் சொன்னதுபோல மாவட்டத்துக்கு ஒரு மருத்துவ கல்லூரி நிச்சயம் அமைக்கப்படும். மேலும் கடந்த ஆட்சியில் அவசர கோலத்தில் திறப்பு விழாக்கள் நடத்தப்பட்ட சில மருத்துவக்கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளில் முழு அளவில் மக்கள் பயன்படுத்தும் அளவுக்கு வசதிகளை செய்ய வேண்டியிருக்கிறது. அனைத்து நல்வாழ்வுத் திட்டங்களையும் கலைஞர் வழிகாட்டுதலின் பேரில் செய்து முடிப்போம்" என்றார் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.

- கௌசி

படங்கள் : **ராஜன்**



24 சினிமாவுக்கு போகலாம் வாங்க!

"தம்பி மொத்தம் எத்தனை சீன், எத்தனை காட்சி, எத்தனை நடிகர்கள்? வயதானவர்கள் எத்தனை? பெண் வேடம் எத்தனை பேருக்கு?" என்று வில்லிபாபு 'எத்தனை? எத்தனை?' என்று கேட்க கேட்க, நான் குழம்பிப் போய்த் திருதிருவென விழித்தேன்.

ஏதோ நாங்கள் பாட்டுக்கு வசனம் எழுதி, ஒரே ஒரு படுதாவைப் பின்புறம் தொங்கவிட்டு, வீடானாலும், ரோடானாலும், கருங்காடானாலும், இரவு பகல் எதுவானாலும் ஆகட்டும் என்று அதன் முன் நின்று மைக்கில் கத்திப் பேசிக் கொண்டிருப்போம். 'இதென்னடா இந்த நாடகத்துக்கு வந்த சோதனை?' என்று நான் நினைத்துக் கொண்டிருக்கும்போது வேகமாக வந்த மணி எல்லோருக்கும் குடிக்க இளநீர் கொண்டு வந்து கொடுத்தான்.

"சார், 'பந்த பாசம்' படத்திலேயும், 'மணியோசை' படத்திலேயும் நீங்க நடிச்சுப் பாத்திருக்கேன். வேற என்ன படம் நடிச்சிங்க?" என்று வில்லிபாபுவிடம் கேட்க, அவர் வியப்போடு மணியைப் பார்த்து, "வெரிகுட், அந்தப் படத்தில் சின்ன வேடத்தில் நடிச்ச என்னை ஞாபகம் வச்சிருக்கீங்களே! நன்றி! இரண்டு மலையாளப் படத்தில மேக்-அப் மேனா வேலை பார்த்தேன்" என்று சொல்லிவிட்டு என்னிடம் கேட்ட சந்தேகங்களை மணியிடமும் கேட்டுவிட்டுப் பிறகு தானே விளக்கம் சொல்லத் தொடங்கினார்.

"தம்பிகளா முதல்ல கதைச் கருக்



கு. ஞானசம்பந்தன்



கதாநாயகி தொலைத்த நாய்!

கத்தை எனக்குச் சொல்லுங்க'' என்று சொல்லிவிட்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தார். நாங்கள் பயந்து பின்வாங்க, மூத்துராக்கு சைகையால் 'ஒண்ணும் பயப்படவேண்டாம்' என்று அபயமளித்தார்.

''பணக்காரர் ஒருவர் தன் சொத்துகளை, தனக்கு வாரிசு இல்லாததால் தன் சுற்றத்தார்களுக்குக் கொடுக்க விரும்பாமல் ஏழைப் பையன் ஒருவனைத் தத்தெடுத்து வீட்டில் விட்டுவிட்டு, காசி போகிறார். ஓர் உயிலும் எழுதுகிறார். எனக்குப் பிறகு இந்தச் சொத்து என் தத்துப் பிள்ளைக்குத்தான். ஆனால், அவன் சில ஆண்டுகள் இந்தச் சொத்தைப் பாதுகாக்க வேண்டும். இடையில் தானாக அவன் வீட்டைவிட்டுப் போய்விட்டால், சொத்து என் சுற்றத்தார்களுக்குத்தான் என்கிறது உயில்.

சுற்றத்தார்கள் வில்லத்தனமாக அப்பாவி கதாநாயகனை (நான்தான் அது) போலிச் சாமியாரை வைத்து மிரட்ட அவன் வீட்டை விட்டு ஓடிப்போகும்போது இரண்டாவது கதாநாயகன் வந்து 'ஓடாதே நில்' என்று சொல்கிறான்... இடைவேளை... என்று நான் ஒரே மூச்சில் கதை சொல்லி முடிக்க, வில்லிபாபு அசந்து போனார்.



''இரண்டாவதாக வந்தவன் யார்?' அவனுக்குக் குடும்ப ரகசியங்கள் எப்படித் தெரிந்தன? அவனுக்கும் அந்தக் குடும்பத்துக்கும் என்ன தொடர்பு? இதுதான் சார் இடைவேளைக்குப் பிறகு'' என்றான் மணி. கதையை வியப்போடு கேட்டுக் கொண்டிருந்த வில்லிபாபு, ''நல்ல சினிமாவுக்கு உரிய கதை. இதை டபுள் ஆக்ட்டாவும் பண்ணலாம்'' என்றவர், ''தம்பி முதல்ல காட்சிகளையும் பாத்திரங்களையும் எழுதிப்பிரிங்க. அதே காட்சி பகலா? இரவா? வீடா? வெளியேயா? என்பதைத் தெளிவா எழுதுங்க. பின்னால இருக்கிற திரையை அதுக்கு ஏத்தபடி மாத்திக்கலாம். உதாரணமா ஒன்றாவது காட்சி, 3, 7, 12, 25 இதெல்லாம் வீட்டுக்குள்ள நடந்தா வீட்டுத்திரை.''

''காதலன் - காதலி சந்திப்பு பூங்காவில் நடந்தா அந்தக் காட்சி எல்லாம் தோட்டத்திரை. லைட்டிங் அதுக்கு ஏத்தபடி. பின்னணி இசையும் திரைக்கு ஏத்தபடி மாத்தணும் என்று சொல்லச் சொல்ல

எனக்கு அப்போதுதான் 'திரைக்கதை' என்றால் என்னவென்று புரியத் தொடங்கியது.

'ஓடாதே நில்' நாடகத்தின் வெற்றிக்கு வில்லிபாபுவின் உழைப்பும் ஆலோசனைகளும் மிக உதவியாக இருந்தன. அந்தக் கால சினிமா படப்பிடிப்பு, நடிகர் நடிகைகளின் குணநலன்கள் பற்றி ஓய்வு நேரத்தில் எங்களிடத்தில் பேசிக் கொண்டிருப்பார் வில்லிபாபு. அவர் மறந்து போனாலும் முத்துராக்கு ஆர்வமாக ஏதாவது ஒன்றைக் கேட்டுக் கொண்டே இருப்பார்.

"ஐயா அந்த 'வஞ்சிக்கோட்டை வாலிபன்' படத்தில் வர்ற பத்மினி, வைஜெயந்தி மாலா போட்டி டான்ஸ்ல யார்தான் ஜெயிச்சது பப்பியம்மாவா? (பத்மினி) பேபியம்மாவா? (வைஜெயந்தி)" என்று ஆர்வமாய்க் கேட்டார் முத்துராக்கு.

"ரெண்டுபேருமில்லை, உண்மையிலேயே ஜெயிச்சது யார் தெரியுமா?" வில்லிபாபு சற்று நிறுத்தினார். 'வஞ்சிக்கோட்டை வாலிபன்' படத்திலே 'கண்ணும் கண்ணும் கலந்து சொந்தம் கொண்டாடுதே' அப்படிங்கிற போட்டி பாட்டுல பத்மினியும் ஜெயிக்கலே. வைஜெயந்தி மாலாவும் ஜெயிக்கல அந்தப் படத்தோட டைரக்டர் எஸ்.எஸ். வாசன்தான் ஜெயிச்சாரு. எப்படி தெரியுமா? இரண்டு நடிகைகளோட அம்மா, பாட்டி எல்லோரும் வந்து எம் பொண்ணுதான் ஜெயிக்கணும். எம் பேத்திதான் ஜெயிக்கணும்னு கேட்டுக் கிட்டே இருந்தாங்க. டைரக்டர் பார்த்தார். நாட்டியப் போட்டிக்கு நடுவுல கண்ணாடி லைட்டை விழுகிறமாறு



"பிரின்சிபால் பெண்ணின் மனசில இடம் கிடைக்குமான்னு முயற்சி செய்தியே! என்ன ஆச்சு?"

"நோ அட்மிஷன்னு சொல் லிட்டா!"

- பம்மல் நாகராஜன்

சிலை எடுத்து அவசரமா அடுத்த சீனுக்குக் கதைய நகத்திட்டுப் போயிட்டாரு" என்று வில்லிபாபு சொல்ல நாங்கள் ஆச்சர்யமாய்க் கேட்டுக் கொண்டிருந்தோம்.

வில்லிபாபுவுக்கும் அவரது உதவியாளனுக்கும் தக்க சன்மானம் செய்து அனுப்பினோம். எங்கள் நாடகக் குழுவின் புகழ் அடுத்தடுத்த ஊர்களில் எல்லாம் பரவ, அந்த ஊர்களில் இருந்து அழைப்புகள் வரத் தொடங்கின.

புது நாடகம் போடும்போது புதுப்புது உத்திகளைக் கையாள வேண்டும் என்று தீர்மானித்தோம். திரை உலகத்தைப் பற்றிய நாடகமா இருக்க வேண்டும். அப்போதுதான் நம் புகழ் திரை உலகத்துக்குத் தெரிய வரும் என்று சினிமா மணி சொல்ல அதன்படி உருவான நாடகத்தின் பெயர் 'காத்திருந்தால் வருவேன்'

சினிமா நடிகை, தயாரிப்பாளர், வில்லன் (கதையிலும் அவனே வில்லன்) என்று நாடகம் தயாரானது. அக்காலத்தில் சினிமாவிலே சினிமா எடுப்பதுபோல மாடர்ன் தியேட்டரில் ஒரு படம் வந்தது. 'நான்கு கில்லாடிகள்' என்பது படத்தின் பெயர். சினிமாவிலே சினிமா எடுத்ததால் நாங்கள் நாடகத்திலேயே சினிமா எடுத்தோம்.

எங்கள் நாடகத்தில் கதாநாயகியான நடிகை (ஆண்தான் ராம்கி என்கிற ரமேஷ்) அழகான நாய் வளர்ப்பதாகவும், அந்த நாய் ஒருநாள் காணாமல் ஷூட்டிங் கேன்சலாகி நடிகை கதறவே தமிழ்நாடே திகைத்துப் போகிறது. ரசிகர் மன்றத் தலைவர்களும், ரசிகர்களும் பற்பல நாய்களைப் பிடித்து வந்து நடிகையிடம் காட்டி

'இதுவா டாமி'?

'இதுவா ஜிம்மி?'

'இதுவா ஜில்லு?' என்று கேட்பதாக நான் எழுதியிருந்தேன். சினிமா மணி இந்தக் காட்சிக்கு ஒரு யோசனை சொன்னான். அந்த யோசனை...

(ரீல் சுற்றும்)

படம் : புதூர் சரவணன்



தூள் தலைவா!

வாழ்க்கையில் முன்னேற தெய்வ பக்தியும் கைகொடுத்திருந்ததை 'சக்ஸஸ் ஸ்டோரி' சிறப்பாக விளக்கியிருந்தது!

சேலையூர், கே.வி.ராமன்

வைகோவால் வலிமை பெற்றது அ.தி.மு.க என நாஞ்சில் சம்பத் கூறுவது இவ்வருடத்தின் சிறந்த ஜோக்!

ஈரோடு, சாந்தி கல்யாண்

கலையை மதிக்காத இளைய தலைமுறை குறித்த கணபதி ஸ்தபதியின் கோபம் நியாயமானதே!

மடிப்பாக்கம், அய்யாறு வாசுதேவன்

'புதுப்பேட்டை படத்துக்கு 'ஏ' சர்ட்டிபிகேட் கொடுக்காதது ஆட்சேபத்துக்குரியது' என்ற கல்கியின் விமர்சனம் மிகச் சரியானது!

சென்னை, குவளைஎழில்

சட்டசபையில் எதிர்கட்சி எப்படி நடந்துகொள்ள வேண்டும் என எடுத்துரைத்த தலையங்கம் விலை மதிப்பற்றது!

ஆடுதுறை, ஜி.ராமதாஸ்

ஒரு படம் ஹிட் கொடுத்தாத்தான், விமர்சிக்கவே முடியுமா? தரணியின் பதில் அர்த்தமற்றது.


திருவான்மியூர், ப.வினோத்

இந்த வார நகைச்சுவைப் பகுதி தூள் தலைவா! இளைய தலைமுறையைப் பிடித்தாட்டும் எஸ்.எம்.எஸ் பித்தை சிறப்பாக நையாண்டி செய்திருந்தீர்கள்!

மாடசாமி, கோவில்பட்டி

சென்ற இதழில் மஹா பெரியவரைப் பற்றிய வானொலி நிகழ்ச்சி ஒவ்வொரு சனிக்கிழமை இரவும் 8.30 முதல் 9.00 வரை ஒலிபரப்பாவதாகக் குறிப்பிட்டிருந்தோம். 'ஒவ்வொரு சனிக்கிழமை காலையிலும்' என அதனைத் திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.

- ஆர்



அற்புதம்!

'சாகஸம் ஆயிரம்' தொடரை எதிர் பாராமல் முடித்துவிட்டீர்களே. சுஜாதா விஞ்ஞான ரகசியங்களை விளக்கிய விதம் அற்புதம்!

அயன்புரம், த.சத்தியநாராயணன்

அறிவியல் விநோதங்களை தனக்கே உரிய எளிய தமிழில் பகிர்ந்துகொண்ட சுஜாதா, இன்னும் நிறைய நிறைய எழுத வேண்டும்!

ஈரோடு, ரேவதிப்ரியன்

வெறுமனே அரட்டையடிக்காமல் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவும் விதமாக எழுதி அசத்திவிட்டார் சுஜாதா!

திருநெல்வேலி, ப்ரியா

வட்டமேஜை

நீங்கள் கேட்டவை

● ஆர். நாகராஜன், சென்னை- 117

? பங்கு மார்க்கெட் கிடுகிடுவென்று உயர்ந்த போது தன்னுடைய வளர்ச்சித் திட்டங்கள்தான் அதற்குக் காரணம் என்று சொன்ன ப.சிதம்பரம் அச்சந்தையின் வீழ்ச்சிக்கும் பொறுப்பு ஏற்பாரா?

! 'வீழ்ச்சி அல்ல; தற்காலிக சலனம்' என்று பசப்புவார் ப.சி!

● கு. அருணாசலம், தென்காசி

? பெட்ரோல் - டீசல் விலைகள் உயர்ந்தாலும் பஸ் - ரயில் கட்டணம் உயரவே உயராது என்று அறிவித்துவிட்ட போதிலும் 'போராட்டம்' அவசியமா?

! போராட்டம் என்பது அரசியல். பொருளாதாரம் என்பது நிஜம். கல்வி அறிவு அதிகம் இல்லாத மக்களை, அரசியல், பொருளாதாரம் ஆகிய இரு விதங்களிலும் ஏமாற்றலாம். கட்சி அரசியலில் எதிர்த்தபடியே ஆதரிக்கலாம். பெட்ரோலியப் பொருளாதாரத்தில் மூடு மந்திரம் மூலம் மக்களை ஏய்க்கலாம்!

● எல். இரவி, செ. புதூர்*

? உலகக் கோப்பை கால் பந்தாட்டத்தில் நாடு

கால்பந்தாட்டம் சூதாட்டமாகிறதே...?



* அழியாத அடையாளம்



* வளர்ச்சிப் 'பங்கு'!

முழுவதும் பல்லாயிரம் கோடி ரூபாய்க்கு சூதாட்டப் போட்டி நடந்துள்ளதாமே...?

! வீரம், விடாமுயற்சி, ஓர் அணியாகச் செயல்படும் மனநிலை, எதிர்ப்பினிடையேயும் வளரும் நட்பு போன்றவற்றை ஊக்குவிக்க வேண்டிய விளையாட்டுகள், ஓர் எல்லை மீறும்போது, வினையாகி விரோத உணர்வு, வன்முறை, சூதாட்டம் போன்றவற்றை ஊக்குவிப்பது சோகம்தான்.

● மு. பெரியசாமி, விட்டுக்கட்டி

? அமெரிக்காவில், இனவெறி காரணமாக போதுமான மருத்துவ சிகிச்சையின்றி ஆண்டுக்கு எண்பத்து நாலாயிரம் கறுப்பின மக்கள் இறக்கிறார்களாமே?

! இனவெறி என்பதைவிட வறுமை என்பது பொருந்தும். பணபலம் மிக்க கறுப்பர்களை இனவெறி பாதிப்பதில்லை. எப்படிப் பார்த்தாலும் இது நெஞ்சைப் பிழிய வைக்கும் அநீதிதான். மனித உரிமைகளை உலகெங்கும் காப்பதாக மார் தட்டிக் கொள்ளும் ஒரு தேசத்தின் தலைகுனிவு!

● இரா. சாந்தகுமார், சிந்தாதரிபேட்டை

? தமது கட்சியோடு கூட்டு சேராததால்தான் அ.தி.மு.க தோற்றதாக திண்டிவனம் ராமமூர்த்தி கூறியுள்ளாரே?

! கூட்டுச் சேர்ந்து வெற்றியும் பெற்றிருந்தால், "என்னால்தான் ஜெ. வெற்றி பெற்றார்" என்று கூறுவது எவ்வளவு அபத்தமாக இருக்குமோ, அதே அளவுக்கு இதுவும் அபத்தம்.

● ஆர். லட்சுமி, மதுரை - 16

? மிக விரைவாகச் செல்லும் போர்விமானத்தில் ஜனாதிபதி கலாம் பயணம் செய்தது பற்றி...?

! நீர் மூழ்கிக் கப்பலில் பயணம்; பின்னர் ஒலியைவிட வேகமாகப் பறக்கும் விமானத்தில்

தராசு

☐ ரூ 100 பரிசு பெறுபவர்:
ஜே.டி. ஆனந்தன்
2/67 B, சரஸ்வதி நகர்,
கைத்தறிநகர்,
மதுரை 625 005

★ ரூ 50 பரிசு பெறுபவர்:
எல். இரவி,
தெற்குத் தெரு,
செ.புதூர் & அஞ்சல்
தஞ்சை மாவட்டம்
612 205

விண்ணை அளந்த ஜனாதிபதி, சென்னை மாநகரப் பேருந்தில் ஏறி சாகசம் புரிவதாக ஹிந்து நாளிதழில் சுரேந் தரின் கார்ட்டூன் தூள்!

● ஜே.டி. ஆனந்தன், மதுரை - 5 ☐

? தமிழக முதல்வரின் டெல்லி பயணத்தால் என்ன பயன்?

! மத்திய திட்டக்குழுத் தலைவர் அலுவாலியாவைச் சந்தித்து தமிழக திட்டங்களுக்கு ரூ 12,500 கோடி பெற்றுள்ளார் முதல்வர். இத்தொகை, போன வருடத்தைவிட 37.4 சத விகிதம் அதிகம். இது சாமர்த்தியம்! ஆனால், இதில் கணிசமான பகுதியைத் திட்டச் செலவுக்கும் புறம்பான விவசாயிகள் கூட்டுறவு கடன் தள்ளுபடிக்கு ஈடுகட்ட அனுமதி பெற்றிருப்பது தவறான முன்னுதாரணம்.

● இரா. சக்கரபாணி, மதுரை -7


? கண்ணகி சிலையை கரடி பொம்மை என்று வர்ணிக்கலாமா...?



தோற்கும் விளக்கம்!



● மகிழ்ச்சிகர ஆணை!



● மனோவேக பயணம்!

! ஒரு பரபரப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே எழுதப்பட்ட கட்டுரையாகத் தோன்றுகிறது. கண்ணகி சிலையை இலக்கிய அடையாளமாகவும் அறச்சீற்றத்தின் அடையாளமாகவும் பார்க்கலாம்; பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்ததால்தான் சிலை எழுந்தது. விகடன் கட்டுரையாளர் தமது கருத்துக்கு மாற்றுக் கருத்துகளை வரவேற்பதாகக் கூறியிருப்பது ஆறுதலான விஷயம்.

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

? அரசு விழாக்களில் இனி பொன்னாடைகள் போர்த்துவது, கேடயங்கள் தருவது போன்ற ஆடம்பரங்கள் வேண்டாம் என முதல்வர் கூறியிருப்பது பற்றி...?

! விழா எடுக்காமலே, பொன்னாடை போர்த்தாமலே மனம் நிறைந்து பாராட்டிவிடுவோம். முதல்வரின் இந்தக் கருத்தை எல்லோரும் ஆணையாக ஏற்றுச் செயல்பட்டால் நல்லது.

● டி. முருகேசன், திருவாரூர்

? பிரமாண்டமாகத் தொடங்கிய உலகக் கோப்பை கால்பந்து போட்டி பற்றி...?

! சர்வதேச கால்பந்து வரலாற்று நாயகர்கள் அத்தனை பேரும் அணிவகுத்து வந்து அசத்திய ஆரம்ப விழாவே ஒரு வரலாற்றுப் பதிவுதான்!

அமரர் கல்கி நினை

ஏழை மாணவ மணிகளுக்

சென்ற ஆண்டைவிட ரூ.50,000 அதிகரித்து நடப்பு கல்வி ஆண்டுக்கு (2006 - 2007) ரூ. 2,75,000 உதவித் தொகைகள் மாணவ - மாணவியருக்கு பின்வருமாறு விநியோகமாகும்:

- ஒருவருக்கு ரூ. 5000 வீதம், சிறப்புக் கல்விப் பயிற்சி தேவைப்படும், ஸ்பாஸ்டிக், டிஸ்லெக்ஸிக், ஆட்டிஸ்டிக் போன்ற பாதிப்புக் குட்பட்ட மாணவர்கள் ஐந்து பேருக்கு ரூ.25,000/-
- ஒருவருக்கு ரூ.3000/- வீதம், எட்டு பட்ட மேற்படிப்பு அல்லது ஆராய்ச்சி மாணவர்களுக்கு ரூ.24,000/-
- ஒருவருக்கு ரூ. 2000/- வீதம், 65 கல்லூரி மாணவர்களுக்கு ரூ. 1,30,000/-
- ஒருவருக்கு ரூ.1200 வீதம், 80 மேல்நிலைப் பள்ளி அல்லது பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ரூ. 96,000/-



இவற்றுள் **அமரர் கல்கி** படித் மூன்று பள்ளிக்கூடங்களில் மூன் மாணவர்களுக்கு மூன்று உதவி தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. மீ முள்ள உதவித் தொகைகளைப் பெ மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- விண்ணப்பங்களை மாணவர்க தங்கள் கைப்பட எழுத வேண்டு **தட்டச்சு, கம்ப்யூட்டர் கடிதங்க நிராகரிக்கப்படும்.** பார்வையற் மாணவர்களுக்கு மட்டும் இதி விதிவிலக்கு உண்டு. பிறர் எழுதி தர, கைநாட்டு பதிக்கலாம். சிறப் கல்விப் பயிற்சி தேவைப்படு (ஸ்பாஸ்டிக் போன்ற) மாணவர்க சார்பில் அவர்களின் பெற்றோ விண்ணப்பிக்கலாம்.
- அரசு அங்கீகாரம் பெற்ற ஒரு கல்வ நிலையத்தில் சேர்ந் படிக்க அனும பெற்றிருக்க வேண் டும். தற்காலிக அனு மதி செல்லுபடியாகாது
- படிப்பில் சிறந்தவ களாக விளங்கி, பெ றோர் உதவியுடன் மட்டுமே கல்வியை தொடர முடியாத நிலையில், பொருளா தாரத்தில் பின்தங்கிய

அறக்கட்டளை

உதவி: ரூ. 2,75,000





வர்களாக இருக்க வேண்டும்.

❖ மேற்கூறிய அனைத்தையும் உறுதிப்படுத்தும் விதமாக, கல்வி நிலையத்தின் முதல்வருடைய சான்றிதழை இணைப்பது மிக அவசியம்.

❖ சென்ற கல்வி ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண் நகலை முதல்வருடைய கையொப்பத்துடன் அனுப்பவும்.

❖ உடல் ஊனமுற்றவர்கள், மேற்படி சான்றிதழ்கள் தவிர, தங்கள் ஊனம் பற்றிய விவரத்தையும், முதல்வருடைய சான்றிதழாக மட்டுமே அனுப்புதல் வேண்டும். இத்தகையோருக்கு முன்னுரிமை உண்டு.

❖ தபால் மூலம் மட்டுமே மனுக்களை அனுப்பலாம். **கூரியர் கூடாது.**

நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தேவைப்படாத சான்றிதழ்களை அனுப்புதல் அம்மாணவருக்குப் பின்னடைவாக விளங்கும்.

உதவித் தொகை பெறத் தகுதியுடைய மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில், அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு விவரம் தெரிவிக்கப்படும். மற்றபடி கடிதப் போக்குவரத்து கிடையாது. சான்றிதழ்களைத் திருப்பி அனுப்புவதற்கில்லை.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை,
புது எண் 14, நான்காவது பிரதான சாலை,
கஸ்தூர்பா நகர், அடையாறு, சென்னை - 600 020.

விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசி தேதி: ஜூலை 31, 2006

பரிதவிப்பு!

ரேவதி



பூச்செண்டுகள் வைத்து
அலங்கரிக்கப்பட்டிருக்கிறது
உன் வரவேற்பறை
ஆனாலும்
இருக்கையில்
முள்ளிருப்பது மாதிரி
ஒரு இம்சை

குளிரூட்டப்பட்டிருக்கிறது
எங்கும்
ஆனாலும்
புழுங்கிக் கொண்டிருக்கிறேன்

கால்கள் பதியும் கம்பளம்
கண்களை உறுத்தாத திரைச்சீலை
வந்தநொடி வழங்கப்பட்ட குளிர்பானம்
வாசிப்பதற்குத் தரப்பட்ட புத்தகங்கள்

எல்லாம் இருக்கிறது
உன் வீட்டில்
என்னைப் பார்த்ததும்
உன் உதடுகள்
அணிய மறுத்த
ஒரேயொரு புன்னகையைத் தவிர

எழுந்தோடத் துடிக்கின்றன
கால்கள்
அழுத்தி உட்கார வைத்திருக்கிறது
என் வறுமை

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.

